388

370
4-57



O-,2NPS5,K
N56
103579

# ... தெய்வம்

... ம், பாடல்கள்

# குலதெய்வம்

முழு வசனம்—பாடல்கள்

விலை 8 அணா

## நடிகர்கள்

| | | |
|---|---|---|
| எஸ். வி. ஸஹஸ்ரநாமம் | ... | முத்தய்யா |
| எஸ். எஸ். ராஜேந்திரன் | ... | ராஜய்யா |
| எம். கே. முஸ்தபா | ... | ராமய்யா |
| வி. ஆர். ராஜகோபால் | ... | சின்னையா |
| டி. பாலசுப்ரமண்யம் | ... | கண்ணப்பர் |
| டி. ஆர். நடராஜன் | ... | ஜீவா |
| துரைசாமி | ... | கார்மேகம் |
| ஏ. கருணாநிதி | ... | பொன்னுசாமி |
| சந்திரபாபு | ... | பாபு |
| சேது | ... | சின்ன முத்தையா |
| மாஸ்டர் முரளி | ... | கண்மணி |

NADU ARCHIVES LIBRARY
EGMORE, MADRAS
103579

மற்றும்

பி. எஸ். வெங்கடாசலம், அசோகன், கொட்டாபுளி ஜய்ராமன், எஸ். ஏ. கண்ணன், கணபதி, திருவேங்கடம், கிட்டன். பொட்டை கிருஷ்ணமூர்த்தி.

## நடிகைகள்

| | | |
|---|---|---|
| எம். பண்டரிபாய் | ... | சாந்தா |
| எம். என். ராஜம் | ... | தாரா |
| சி. ஆர். விஜயகுமாரி | ... | மங்களம் |
| எம். மைனாவதி | ... | லதா |
| எம். ஆர். சந்தான லக்ஷ்மி | ... | சிவகாமி |
| பி. எஸ். ஞானம் | ... | அஞ்சலா |
| கே. எஸ். அங்கமுத்து | ... | விசாலம் |
| டி. இந்திரா | ... | இந்திரா |

நடனம்:—குமாரிகமலா

**பாடல்கள்:**

பாரதியார், பாரதிதாசன், கே. பி. காமாக்ஷிசுந்தரன், ஆத்மநாதன், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்.

**பின்னணிப் பாடல்கள்:**

எம். எல். வசந்தகுமாரி, பி. சுசீலா, டி. எம். சௌந்தரராஜன், சி. எஸ். ஜயராமன், சீர்காழி கோவிந்தராஜன், எம். எம். முத்து.

சங்கீத டைரக்ஷன்: **ஆர். சுதர்சனம்**

கதை: **பிரபாவதிதேவிஸரஸ்வதி**

வசனம்: **மாரன் எம். ஏ.**

டைரக்ஷன்: **கிருஷ்ணன் பஞ்சு**

ஸ்டூடியோ: **ஏவி எம்.**

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை-1

# குலதெய்வம்

## வசனம் - பாடல்கள்

[படத்தயாரிப்பாளர்களின் பட்டியல் காட்டப்படும் போது பாட்டு]

"ஒன்று பட்டாலுண்டு வாழ்வே" பாட்டு.

*　　*

(மரணப் படுக்கையிலிருக்கும் கார்மேகத்துக்கு மருந்து கொடுக்க சிவகாமி வருகிறாள். அவரது மூத்த மகன் முத்தையா வும் அருகிலிருக்கிறான், அப்போது)

கார்: வாழையடி வாழையாய் வரும் வாழ்வு, தாழ்வு இந்த ரெண்டையும் மனித ஜாதியால் மீற முடியாது தங்கச்சி.

சிவ: இந்த மருந்தையாவது சாப்பிடு அண்ணா!

கார்: மருந்து. சஞ்சீவி மலையையே தூக்கிக்கிட்டு வந்தாலும் என்னை இந்த சாவிலிருந்து மீட்க முடியாதம்மா.

சிவ: அண்ணா!

கார்: சிவகாமி. குழந்தைகள் எல்லாம் தாய் முகத்தைப் பாராததுங்க. எல்லாத்தையும் உன் தலை மேலே போட்டுப் போறேன்.

சிவ: கவலைப்படாதே அண்ணா!

கார்: முத்தைய்யா! அப்பா மகனே! ஒண்ணு கூட உங்களுக்கு நான் செய்யல.

சிவ: அப்படி யெல்லாம் சொல்லாதே அண்ணா.

கார்: உன் மக பெரியவளாகி முத்தய்யாவுக்கு மனைவியாகப் பார்க்காமல் போறேன்.

சிவ: நீ நினைக்கிறபடி செய்து வைக்கிறேன் அண்ணா.

கார்: அந்த வார்த்தையே போதும் அம்மா. நீ போய் குழந்தைகளை அழைச்சுட்டு வா! (சிவகாமி போக) முத்தய்யா...... முத்தய்யா! இப்படி வா, நான் இனிமேல் ரொம்ப நேரம் இருக்க மாட்டேன். நீ ஏதாவது ஆறுதல் சொன்னாத்தான் நிம்மதியாக சாவேன்.

முத்: உங்க எண்ணத்தைச் சொல்லுங்கப்பா!

கார்: முத்து. நான் எவ்வளவோ சம்பாதிச்சேன். ஆனா உங் களுக்குன்னு ஒரு ரூபாய் கூட மீதி வைக்கல. இருக்கிற இந்த வீடும்

மனையும் கூட நம்ம வக்கீல் கண்ணப்பரிடம் ஆயிரம் ரூபாய்க்கு அடமானம் வச்சிருக்கேன். அதை எப்படியாவது நீ மீட்கணும். உன் தம்பிகள் எல்லாம் வயசு வராதவங்க. இனி நீதான் அவங்களுக்கு அப்பா அம்மா எல்லாம், நீ ஒரு துரும்பு சம்பாதிச்சாலும் எல்லோருக்கும் பொதுவா வச்சிக்க.

முத்: சரியப்பா!

கார்: எங்கே சத்தியம் செய்து கொடு.

முத்: அப்பா. இந்த வீட்டை எப்படியும் அடமானத்திலிருந்து மீட்பேன். தம்பி ராமய்யா, ராஜய்யா, சின்னய்யா இவர்களைப் படிக்க வச்சி பெரிய மனிதர்களாக்குவேன். இது சத்தியம்.

கார்: அப்பாடா! இப்பத்தான் என் மனசு திருப்தியாச்சி!

(சிவகாமி குழந்தைகளை அழைத்து வருகிருள்)

சிவ: அண்ணு! குழந்தைகளெல்லாம் வந்திருக்காங்க. உன்னை ஆவலோடு பார்க்கிறதைப் பாரு அண்ணு.

(கார்மேகம் குழந்தைகளை முத்தய்யா கையில் பிடித்து கொடுத்து விட்டு மடிகிருர்)

சிவ: அண்ணு!...

முத்: அப்பா!

0 0

[முத்தய்யா கண்ணப்பரிடம் செல்ல]

கண்: கார்மேகம் கருணை மழை பொழியும் முகிலாகத்தான் இருந்தார். இவ்வளவு சீக்கிரத்தில் போய் விடுவாரென்று நான் எதிர்பார்க்கவே இல்லை முத்தய்யா!

முத்: இனிமேல் நாங்கள் என்ன செய்யப் போகிறோம், எப்படி வாழப்போகிறோம் என்று ஒன்றுமே புரியவில்லை மாமா.

கண்: உனக்காக நான் எதுவும் செய்யக் காத்திருக்கிறேன். நீ வீணுகக் கவலைப்படாதே முத்தய்யா.

முத்: நான் அதற்காக இங்கு வரவில்லை மாமா! கிராமத்திலுள்ள வீட்டை அப்பா ஆயிரம் ரூபாய்க்கு அடமானம் வைத்திருக்கிறார் அல்லவா?

கண்: அந்த ஆயிரம் ரூபாயை அவருக்கு நான் அன்பளிப்பாகத்தான் கொடுத்தேன். கடனுக அல்ல. வீட்டுக்குப் போனவுடன் அவர் புரோ நோட்டெழுதி அனுப்பி விட்டார்.

முத்: ஐய்யய்யோ! அப்படி யெல்லாம் செய்து விடாதீர்கள். நான் அப்பாவிடம் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறேன். என் சொந்த முயற்சியால் சம்பாதித்து அந்த வீட்டை மீட்டால்தான் என் மனம் நிம்மதியடையும்.

கண்: சபாஷ்! நீ கார்மேகத்தின் மகன் என்பதை நிரூபித்து விட்டாய். உன் இஷ்டப்படியே கார்த்திருக்கிறேன் போதுமா?

முத்: ரொம்ப சந்தோஷம் மாமா! வந்து...

கண்: ஏன் தயங்குகிறாய்?

முத்: வேறொன்று மில்லை. உங்களிடம் ஒரு யோசனை கேட்கலாமென்று வந்திருக்கிறேன்.

கண்: சொல்லப்பா!

முத்: அத்தையின் நகைகளை வித்து அப்பாவுக்கு செய்ய வேண்டிய கடமைகளை எல்லாம் செய்துட்டேன். இப்போது மீதி இருபத்தைந்து ரூபாய் இருக்கிறது. இதைக் கொண்டு வியாபாரம் செய்தால் குடும்பத்தை ஒரு மாதிரி சமாளிக்கலாம் அல்லவா?

கண்: இருபத்தைந்து ரூபாய்க்கு என்ன வியாபாரம் செய்வது? ஒரு வெற்றிலை பாக்கு கடை வைப்பதற்குக்கூட போதாதே! சாமான்கள் வாங்கி தெருவில் விற்கலாம். சரி, உன் லட்சியத்தைக் கெடுக்க நான் விரும்பவில்லை. என் கட்சிக்காரர் ஒருவருக்கு கடிதம் கொடுக்கிறேன். நீ அவரை நன்றாக பயன்படுத்திக் கொள்ளலாம். என்ன சரிதானா?

முத்: நீங்கள் தான் எனக்குத் துணை. நீங்கள்தான் எனக்கு வழிகாட்டி.

0 0

[முத்தையா ஒரு ஜவுளிக்கடை செல்கிறான். முதலாளி கடிதத்தைப் பார்த்து]

முதலாளி: அரே பாப்ரே! நிம்மள் வக்கீல் கண்ணப்பர்கிட்டே இருந்து கடுதாசி கொண்டு வந்தான்லே, அவர்கி மாதிரி ஒரு ஆத்மி இந்த துனியா மேலே தேடினாக் கூட கிடைக்குதில்லே, அவ்வளவு சுத்த ஆத்மி. அவர்க்கி ஒரு வார்த்தை சொன்னா நம்மள்கி எத்தனை லெட்சம் வேணும்னாலும் கொடுக்கலாம். இதை எடுத்துக்க நல்லா நல்லா வியாபாரம் பண்ணி நிறையா நிறையா லாபம் சம்பாதிக் கணும்.

முத்: ரொம்ப நன்றி சார்.

முதலாளி: அல்லா உனக்கு நல்ல வழி கொடுப்பார்.

0 0

(தெருவிலே முத்தய்யா துணி விற்கிறான்)

முத்: புடவை புடவை புடவை வாங்கலியா சார் புடவை புடவை...

0 0

(தெருவில் ஏலம் போடுகிறுன்)

முத்: பதினெரு ரூபாய்...

ஒரு: பனிரெண்டு ரூபாய்...

முத்: பனிரெண்டு ரூபாய் சார், ஒரு தரம்...

மற்: பதினைஞ்சு ரூபாய்...

முத்: பதினைஞ்சி ரூபாய் சார் ஒரு தரம். கடைக்குப் போனு முப்பது ரூபாய். பதினைந்து ரூபாய்...

மூன்: பதினேழு ருபாய்...

முத்: பதினேழு ரூபாய்...ஒருதரம், ரெண்டு தரம்...

0 0

[முத்தய்யா கடையில்]

முத்: (துணியை காண்பித்து) இதை எடுத்துக்கிடுறீங்களா? இதைப் பார்க்கிறீங்களா? ரொம்ப நல்ல துணி...

0 0

(முத்தய்யா பெரியவனுகிறுன். கம்பெனி வளர்ந்து பெரிதாக. முத்தய்யா பணக்காரனுகிறுன்)

0 0

(முத்தய்யாவிடம் சொக்கேசர் வர)

முத்: வாங்க சொக்கேசர் வாங்க. என்ன போன காரியம் எல்லாம் எப்படி?

சொக்: எல்லாம் வெற்றிகரமா முடிஞ்சதுங்க. மதுரையிலே நம்ம ஸ்பெஷல் கைத்தறி புடவைக்கு ஏகக் கிராக்கி. பதினையாயிர ரூபாய்க்கு ஆர்டர் புக் பண்ணியிருக்கேன். திருச்சியிலே கூட ஒரு பிராஞ்சு ஓப்பன் பண்ண ஏற்பாடு செஞ்சிருக்கேன்.

முத்து: ரொம்ப நல்லது. எல்லாம் உங்களைப் போல் உள்ள உழைப்பாளிங்களால தான் எங்கப்பாவுக்கு கொடுத்த வாக்கை நிறைவேற்ற முடிந்தது.

சொக்: வெள்ள மனசும் இருந்தா வெள்ளையப்பனும் தானு வருவான். இந்தாங்க டிராப்டு. கணக்கப் பிள்ளை கிட்ட கொஞ்சம் வேலை இருக்கு.

முத்: சரிங்க. (தந்தை படத்தின் முன் சென்று) அப்பா. நீங்க நினைத்தபடியே இந்தக் குடும்பம் குதூகலமா இருக்குது. ராமய்யாவை வக்கீலுக்கு படிக்க வச்சிருக்கேன். ராஜய்யா டாக்டராகப் போகிறுன். சின்னய்யா பெரியவனுகிட்டான். நீங்க சொன்ன மாதிரியே அத்தை பெண்ணையே நான் கலியாணம் பண்ணிக்கிட்

டேன். இப்ப நான் ஒரு குழந்தைக்குத் தகப்பனுகப் போகிறேன். இதை எல்லாம் நீங்க பார்க்க முடியாமல் போயிட்டீங்களேப்பா!

(வேலையாள் முருகன் வந்து)

முரு: எஜமான் எஜமான்...

முத்: என்ன?

முரு: லலிதா அம்மா...

முத்: என்ன குழந்தை பிறந்திருச்சா?

முரு: ஆமா குழந்தை பிறந்திருச்சிங்க. ஆனு...

முத்: ஆனு என்ன முருகா?

முரு: லலிதா அம்மா இறந்துட்டாங்க எஜமான், லலிதா அம்மா இறந்துட்டாங்க!

முத்: ஆ...என்ன?

0 0

(கண்ணப்பர் வீட்டுக்கு சேட் வெகுமதிகள் மாலையுடன் வந்து)

சேட்: சார்!

ஜீவா: ஏது இவ்வளவு தூரம்?

சேட்: வீட்டு மேலே நிம்மள்கி அப்பாரு கி இருக்கிருருங்களா?

ஜீவா: வீட்டு மேலே காக்காவும் கருடனும்தான் இருக்கும். இதோபார் எங்கப்பா வர்ருர்.

சேட்: சலாம் வருதுங்க சலாம்...

கண்: சலாம்...சலாம்...என்னய்யா விசேஷம்? என்னய்யா இதெல்லாம்?

சேட்: இன்னைக்கு ஜென்வரி முதல் தேதி பாருங்கோ! அதிக்கித்தான் டே பைய்யா. என்னடா இது?

(சேலையை தாராவிடம் தர)

சேட்: இது உங்கள்கி பொண்ணுக்கு.

தாரா: அண்ணிக்கு?

சேட்: இதோ!

(கொடுக்கிருன்)

கண்: அண்ணிக்கு ஆட்டுக் குட்டிக்கு..

ஜீவா: நம்பள்கி?

சேட்: அரரே! நிம்பள்கி தர்ருன். இதி உங்கள்கி!

கண்: டே...ஏ சாயுபு! செத்தும் கொடுத்தான் உங்க சீதக்காதி மரக்காயி. உயிரோட இருக்கும் போதே நாம் கொடுக்க ஆரம்

பிச்சா ஒண்ணும் கட்டுபடி ஆகாது. போன உடனே இதுக்கெல்லாம் பில் அனுப்பிச்சுரு. இல்லேன்னு திருப்பி அனுப்பிச்சுடுவேன்.

சேட்: சரி எஜமான். (போக)

கண்: ஜீவா! கோணல் வழியிலே போறதும் குறுக்கு வழியிலே பாய்றதும் என்னைக்காவது உன்னை கவிழ்த்தி விடும் ஜாக்ரதை. முத்தைய்யாவைப் போல முதுகு எலும்பை வளைச்சு பாடுபட்டு பெரிய மனுஷன்னு பேரு எடுக்கப் பாரு தம்பி.

தாரா: அப்பா. கச்சேரிக்கு டயம் ஆச்சப்பா...

0 0

(நடனம் நடைபெறுகிறது தியேட்டரில்)

"தாயே—யசோதா" பாட்டு.

0 0

(முத்தைய்யா சோகமாக உட்கார்ந்திருக்க கணக்கப்பிள்ளை வந்து)

கண: என்னங்க இது? மணி பதினொண்ணுக்கு மேலே போகுது. இன்னும் வீட்டுக்குப் போகலீங்களா? நடுச்சாமம் வரைக்கும் இங்கேயே இருந்தீங்கன்னு உங்களுக்கு மட்டும் இல்லீங்க எங்களுக்கு மில்ல கஷ்டமா இருக்குது. அங்க உங்களுக்காக அத்தை வேற சாப்பிடாம காத்துக்கிட்டு இருப்பாங்க.

முத்: ஆமா! அவங்களுக்கும் என்னால சிரமம்.

கண: அதுக்குத்தான் நானும் சொல்றேன். காலா காலத்திலே ஒரு கலியாணத்தெப் பண்ணிக்கிட்டீங்கன்னு ஒரு தொந்தரவும் இருக்காது.

முத்: மறுபடியும் எனக்குக் கலியாணமா?

கணக்: என்னங்க இப்படிக் கேட்கிறீங்க? பிணத்துமேல விழுந்து அழுகிறதுக்கு ஒரு பொம்பளை வேணுமுங்கிறதுக்காக தலை நரைச்ச கிழவனெல்லாம் தாலியைக் கட்டிக்கிட்டுத் திரியுறான். உங்களுக்கு என்ன குறைச்சல்?

முத்: வேண்டாம்...பிள்ளை. இனிமேல் கலியாணமுங்கிற பேச்சே என் காதுல விழக்கூடாது.

கணக்: என்னமோ, எனக்குத் தெரிஞ்சதை சொல்லிட்டேன். என்னமோ ஒரு நாள் சாவகாசமா நீங்களும் யோசனை செய்து பாருங்க.

0 0

[முத்தய்யா வீடு வந்து]

முத்: முருகா...(கதவைத் திறக்க உள்ளே வந்து) முருகா! நீயேன் ஒரு மாதிரி இருக்க? அத்தை...அத்தை...

முரு: அவங்க இல்லே எஜமான்.

முத்: இல்லேயா? எங்க போயிட்டாங்க?

முரு: கிராமத்துக்குப் போயிட்டாங்க

முத்: கிராமத்துக்கா சொல்லாமலேயா?

முரு: நீங்க காலா காலத்திலே வீட்டுக்கு வர்றதில்லேயாம், நீங்க அத்தை பேச்சைக் கேட்கிறதில்லேயாம். நீங்க இன்னொரு கலியாணம் செய்துக்கிட்டாத்தான் இந்த வீட்டில அடி எடுத்து வைப்பேன்னு சொல்லீட்டுப் போயிட்டாங்க.

முத்: அவங்க கோபிச்சிட்டு வீட்டை விட்டுப் போற அளவு அவங்க மனசை புண் படுத்தீட்டனு?

முரு: எதுக்கும் வக்கீல் கண்ணப்பரய்யாவைப் போயி பாருங்க!

முத்: என்ன தர்ம சங்கடம்?

0 0

[முத்தய்யா கண்ணப்பரிடம் வர]

கண்: என்னைப் பார்க்க இவ்வளவு திடீருன்னு வருவேன்னு நான் நினைக்கல. அத்தை சொல்வது போல் செய்வதுதான் நல்லது.

முத்: அது சரி மாமா...

கண்: உட்கார்...உட்கார்...

முத்: அப்பா சொன்னபடி அத்தை பெண்ணையே கலியாணம் பண்ணிக்கிட்டேன். அவளும் கண்மணியை கையிலே கொடுத்துட்டு கண்ணை மூடிட்டா! நான் இப்ப கலியாணம் பண்ணிக்கிட்டா அவளும் உயிரோட இருப்பான்னு என்ன நிச்சயம்?

கண்: நீ நினைப்பது தவறு. இப்ப இருக்கிற சூழ்நிலையில நீ கலியாணம் செய்துக்கிடுறதைப் பற்றி ஒருவரும் ஒன்னும் சொல்லல மாட்டார்கள். எல்லோரும் நல்லதுன்னுதான் ஆமோதிப்பார்கள். நீ உன் தம்பிகளுக்காகவும் உன் குழந்தைகளுக்காகவும் நிச்சயம் கலியாணம் பண்ணித்தான் ஆகணும்.

முத்: மாமா! நீங்களுமா இப்படி சொல்றீங்க?

கண்: ஏன் ஆச்சர்யப் படுறே? உனக்காக ஒரு நல்ல இடம் பார்த்து வச்சிருக்கேன். பெரிய குடும்பம். நல்ல இடம். என்ன சொல்றே?

முத்: இல்ல. எனக்கு முன்னாடியே அத்தை உங்களை சந்திச்சிட்டாங்க போலிருக்கு. சரி மாமா. உங்கள் பேச்சை தட்டி நடக்க எனக்கு தைரியம் இல்லே.

0 0

[சாந்தாவுக்கும் முத்தய்யாவுக்கும் திருமணம் முடிய, ஆராத்தி எடுக்கும்போது ஒருவள்]

ஒரு: ஆராத்தி எடுக்க வாங்கம்மா...(ஒரு விதவைப் பெண் வர) அட நீயா சேச்சே...நீங்க வாங்கம்மா...(ஆராத்தி எடுத்து முடிந்தவுடன்) முதல்ல வலது காலே வச்சிப் போங்க.

(மணமக்கள் உள்ளே சென்றவுடன் ஒருவள்)

ஒரு: நாலுபேருக்கு முன்னலே அந்தப் பெண்ண அவமானம் படுத்திப்புட்டாங்களே! இருங்க பார்த்துக்கிடுறேன்.

விசா: தள்ளு குப்பையை, நாலு காசு வந்துட்டா கழுத்தில கனம் வந்திரும். அவங்க தெருத் தெருவா துணி மூட்டை தூக்கி வித்தவங்கதான. நம்ம பெருமை என்ன தெரியும்?

மற்: ஆமா கலியாணம் பண்ணீட்டு வந்துட்டாங்களாம் கலியாணம். பெண்ணப் பாரு. கத்திரிக்காய்க்கு கையும் காலும் முளேச்ச மாதிரி எங்க இருந்து புடிச்சாங்களோ?

மூன்: ரெண்டாம் தாரம் தான? உன்னுட்டமும் என்னுட்டமும் மூக்கும் முழியும்மா இருக்கிற பெண்ண யாரு கொடுப்பாங்களாம்? எங்க இருந்தோ பிடிச்சிட்டு வந்துட்டாங்க.

0 0

(திருமணம் முடிந்து உள்ளே வர குழந்தை அழுகிறது)

முத்: இது என் மூத்த சம்சாரத்தின் குழந்தை...

(சாந்தா குழந்தையைத் தூக்கிக் கொள்கிறுள்)

* *

(சாந்தாவிடம் முத்தையா)

முத்: இப்போது தான் உணருகிறேன். உன்னே சகிக்க முடியாத கொடுமைக்கு ஆளாக்கி விட்டேன். எல்லோரையும் சந்தோஷப் படுத்துவதற்கு உன் விஷயத்தில் அநியாயம் செய்து விட்டேன்.

சாந்தா: என்ன சொல்கிறீர்கள்?

முத்: என்னேக் கலியாணம் செய்துகொண்டு என்ன சுகத்தைக் காணப் போகிறுய்? இளம் வயதிலே எத்தனேயோ கனவுகள் கண்டிருப்பாய். அதை எல்லாம் கலேத்து உன்னே குப்பையிலே தள்ளி விட்டேன்.

சாந்தா: இந்த குதூகலமான குடும்ப சாம்ராஜ்யத்தை குப்பையின்னு சொல்கிறீர்கள். அப்படியானுல் நான் குப்பையிலே பிறந்த நாயாக இருக்க ஆசைப்படுகிறேன்.

முத்: சாந்தா! நான் உன்னேவிட எவ்வளவோ வயதில் மூத்தவன்.

சாந்: கணவன்மார்கள் மனைவிகளை விட மூத்தவர்களாகத்தான் இருப்பார்கள்.

முத்: எனக்கு ஒரு குழந்தையும் .........

சாந்: நிறுத்துங்கள், இனிமேல் கண்மணி உங்கள் குழந்தையல்ல. நம்குழந்தை. சாந்தா பெற்றெடுத்த செல்வக் குழந்தை. ஏதும் கற்பித்துப் பேசினல்...

முத்: வருத்தப் படாதே சாந்தா. உன் கண்கள் கலங்குவதைப் பார்த்து.

சாந்: தவறுதலாய் நினைக்காதீர்கள். லதாவை நினைத்துக் கொண்டேன்.

முத்: லதா உன் தங்கையா?

சாந்: சொந்தத் தங்கையில்லே, சின்னம்மா பொண்ணு, எப்போதும் என் அருகிலேயே இருந்து அன்பிலே வளர்ந்தவ. அப்பா அம்மா இல்லே. என் கூடவே இருப்பா. நான் இல்லா விட்டால் சாப்பிடவே மாட்டாள். அவளை நான் தனியாக விட்டுவந்தது இதுதான் முதல் தடவை. என் கண்மணியைப் பார்க்கும் போதெல்லாம் அந்த குறும்புக்காரியின் நினைவு வந்துவிடும். இப்போது அவள் யார் பராமரிப்பில் இருக்கிறளோ! என்னை விட்டுப் பிரிந்து என்ன பாடு படுகிறளோ!

முத்: இதுக்கா இவ்வளவு வேதனைப் படுகிறய்? இங்கே அழைத்து வந்து விடேன்?

சாந்: இங்கேயா?

முத்: ஏன், அதற்கென்ன? பாலைவனம் போல களை இழந்து கிடந்த என்வீட்டிற்கு நீ வந்து சேர்ந்தாய்.உன்னோடு உன் தங்கை வருவதற்கு இங்கு யார் என்ன செய்யப் போகிறர்கள். நீதானே இந்த வீட்டிற்கு பெரிய மருமகள்!

சாந்: ஆனல்...

முத்: என்ன ஆனல்?

சாந்: லதாவுக்கு சிறுவயதிலேயே மஞ்சள் கயிறை கட்டினர்கள். பாவம். கலியாணம் ஆன மறுமாதமே அவள் குழந்தைக் கணவர் இறந்து விட்டார். ஆனல் அவளுக்குதான் ஒரு விதவை என்ற வேதனைச் செய்தி இதுவரையிலும் தெரியாது. அவள் இங்கே வந்தால்......

முத்: கவலைப்படாதே! இங்கு யாருக்கும் தெரியாமல் அத்தையே கவனித்துக் கொள்வார்கள். லதா இங்கேவர சீக்கிரமே ஏற்பாடு செய்கிறேன்.

சாந்: நான் கொடுத்து வைத்தவள்.

(சாந்தா குழந்தையை படுக்கவைத்துவிட்டு முத்தையா காலில் விழுகிருள்)

சாந்: உங்கள் காலடியில் கிடக்க எவ்வளவோ பாக்கியம் செய்திருக்கிறேன்.

முத்: இல்லே சாந்தா! கொடுத்து வைத்தவன் நான் தான்.

(முத்தையாவிடம் வேலையாள் வந்து)

வேலே: சார்...சார்...

முத்: என்னப்பா? என்ன வேணும்?

வேலே: இன்னேக்கி ஒரு நாள் மட்டும் லீவு வேணும் சார்.

முத்: லீவா? சே...சே...கலியாண சீசன்ல எல்லோரும் போயிட்டா யாரு வேலே பார்ப்பது? போப்பா போயி வேலையைபாரு (போனில்) ஹலோ யாரு? நான்தான் முத்தையா பேசுறேன். என்ன சமாச்சாரம்?

ராமை: நான் தாண்ணு ராமையா பேசுறேன்!

முத்: ராமையா! என்ன சமாச்சாரம்?

ராமை: நான் பஸ்டு கிளாஸ்ல பாஸ்பண்ணீட்டண்ணு·

முத்: பேஷ்...பேஷ்...பாஸ்பண்ணிட்டயா? நேர வீட்டுக்குப் போயி விஷயத்தைச் சொல்லு. நான் வீட்டுக்கு வந்துருறேன்.

ராமையா: சரியண்ணே!

* *

(ராமையா வீடு வந்து)

ராமை: அண்ணி...அண்ணி......

சாந்: என்ன பரீக்ஷை ரிசல்ட் தெரிஞ்சி போச்சா?

ராமை: பாஸ் பண்ணீட்டேன் அண்ணி. எல்லாம் உங்க ஆசீர்வாதம்தான்.

சாந்: சிரஞ்சீவியாக இருந்சு பொய்யே சொல்லாம பெரிய வக்கீலா புகழோடவாழணும். இது தான் உங்களுக்கு அடிக்கடி ஞாபகப்படுத்த ஆசைப்படுறேன்.

ராஜய்: ஆ...தப்பு...தப்பு..லேலாமச்னு.ரோமியோ ஜுலியட். அமராவதி அம்பிகாவதி இந்த ஜோடிகளே எப்படி பிரிக்கமுடியாதோ அதேமாதிரி இந்த வக்கீல் தொழிலேயும் பொய்யையும் சொல்லாம இருக்க முடியாது. பொய்யே சொல்லாம இருக்கணுமுன்னு என்னேப்போல டாக்டர் வேலேக்கு படிக்கணும்.

சின்னே: (வந்து) அதுவும் தப்புத் தாங்கிறேன். பணக்காரங்க கிடைச்சிட்டா சாதாரணமா மாத்திரை கொடுக்க வேண்டியவியா

திக்கு ஆப்ரேஷன் பண்ணி பேதியைக் கொடுத்து, அதை மாத்தற துக்கு பலமருந்துகள் கொடுத்து இப்படி தில்லு முல்லு பண்ணி பொய் பேசினால் தான்...இந்தப் பொய்யே இல்லாத தொழில் ஒண்ணே ஒண்ணுதான். அதுதான் நம்ம அண்ணி செய்யிற சமை யல் தொழில்.

லதா: ஆகா! சாப்பாட்டு ராமரே! வருக. வருக....

சின்னே: நானு சாப்பாட்டு ராமன்? ஏம்மா! சாப்பிடாதபட் டினி சீதையே! அடிச்சேன்னு பாரு.

லதா: இருங்க. இந்த வீட்டுக்கு எஜமான் நீங்க இல்ல.வேற இருக்காங்க.

ராஜ: இந்தாம்மா லதா! ஏன் எப்பப்பார்த்தாலும் அவன் கிட்ட வம்பு இழுத்துக்கிட்டு இருக்க? எங்க அண்ணன் பாஸ் பண் ணியிருக்கார். அதைப்பற்றி பேசாம இப்படி சின்ன விஷயத்தைப் பற்றி அலசுறீங்களே!

லதா: அப்பு இன்னைக்கு என்னே சர்க்கஸுக்கு அழைச்சிட் டுப் போறீங்களா?

ராமை: ஓ...கண்டிப்பா அழைச்சிட்டுப் போறேன்.

சின்: ம்...அழைச்சிட்டுப் போறீங்களா? ஆமா தயவுசெய்து திரும்ப அழைச்சிட்டு வராதீங்க. அங்க ஒரு கூண்டிலே போட்டு பூட்டிட்டுவாங்க.

லதா: பூட்டிட்டு வந்திடுங்க.

கண்: சித்தப்பா நானும் வர்றேன் சித்தப்பா!

ராம்: எல்லோரும் போகலாம் அப்பா!

சின்: அண்ணே! நான்தான உனக்கு சின்னதம்பி!

ராம: ஆமா!

சின்னே: எனக்கு ஒரு பார்க்கர் பேனு வேணும்.

லதா: பார்க்கர் பேனு வேணுமாமுல பார்க்கர்பேனு! இவரு பெரிய பீ. ஏ. பீ. எல். படிச்சிட்டாரு? ஒருவகுப்பிலயே ஒன்பதுவரு ஷமா இருந்து இன்னம் பத்தாவது கூட தேறக் காணம். இவருக்கு பார்க்கர் பேனு வேணுமாம்.அத்தான் வாங்கிக் கொடுக்காதீங்கஆமா. (கண்ணப்பர் வந்திருப்பதைப் பார்த்த சாந்தா)

சாந்: வாங்க! நீங்க அப்பவே வந்துட்டீங்களா? நாங்க பார்க்கவே இல்லே. உட்காருங்க.

ராம: உட்காருங்கமாமா! அண்ணன் இன்னும் கொஞ்ச நேரத் திலே வந்திருவாரு.

கண்: பரவாயில்லே. இந்த ஆனந்தமான குடும்பத்தை எப்பவும் பார்த்துக்கிட்டே இருக்கலாமே! ஆமா இந்தப் பெண்ணு யாரும்மா?

சாந்தா: அதுதான் எங்க வீட்டுல இருந்ததே ஒரு சின்னப் பொண்ணு.

கண்: அந்த சின்ன பெண்ணு இவ்வளவு தூரம் வளர்ந்திருச்சி?

(முத்தையா வந்து)

முத்: வாங்க மாமா! நம்ம ராமையா பஸ்டு கிளாஸ்ல பாஸ் பண்ணீட்டான்.

கண்: ஆமா! வர்ற போது கேள்விப்பட்டேன்.

முத்: எல்லாம் உங்க ஆசீர்வாதம் தான் மாமா!

கண்: இதெல்லாம் என்ன சின்னப் பிள்ளைமாதிரி?

முத்: ஊருக்கு ராஜாவானாலும் பள்ளிக்குப் பிள்ளை தான மாமா. நீங்க செய்த உதவியால தான நாங்க முன்னுக்கு வந்தோம். அதை மறக்கமுடியுமா?

கண்: ஆமா இனி ராமையா என்ன செய்யப் போறான்?

முத்: அதுக்கும் நீங்கதான் மாமா யோசனை சொல்லணும்.

கண்: ஏன் ரெண்டு வருஷம் என்கிட்டை அப்பன்டிசா வேலை பார்க்கட்டுமே?

முத்: அப்படியே செய்யிறேன் மாமா. நாளையே அனுப்பி வைக்கிறேன்.

கண்மணி: ஆல் இந்தியா ரேடியோ அடுப்பங்கரை நிலயம். அத்தை அவர்கள் சொல்லியபடி சாப்பாடு தயாராகி விட்டதால் அனைவரும் கையைக் கழுவிக் கொண்டு சாப்பிட வரலாம்.

முத்: வாங்க மாமா சாப்பிட போகலாம். வெளியே நம்ம ஆபீஸ்காரங்க எல்லாம் வந்திருக்காங்க. நான் போயி அழைச்சிட்டு வர்றேன்.

கண்: நல்ல குடும்பம் பல்கலைக் கழகமுன்னு இதைத்தான் சொல்லியிருப்பாங்க!

0 0

(ஜீவா ராமையா விடம்)

ஜீவா: உம் கோதுமை அல்வா இருக்கே அது கசக்கணும்.

ராமை: ஆகா...

ஜீவா: குலோப்ஜான் புளிககணும்...

ராமை: அப்படியா!

ஜீவா: உப்புமா இருக்கே உப்புமா அது துவக்கணும்... உன்னால அப்படி செய்ய முடியுமா?

ராமை: முடியுமாவா? தாராளமா முடியும். நம்ம தாரா இருக்கே தாரா அதை ஒரு நாள் சமையல் கட்டுக்கு அனுப்பிவச்சா எல்லாம் தாராளமா நடந்திட்டுப் போகுது.

தாரா: அதென்ன! என்னே என்ன வெறும் புஸ்தகப் பூச்சின்னு நினைச்சீங்க? நான் இப்பவே போயி காப்பி போட்டுட்டு வர்றேன். அதைக் குடிச்சி பார்த்துட்டு அப்புறம் சொல்லுங்க.

ராமை: எனக்கு டயம் ஆச்சி! நான் டிரைனுக்குப் போகணும். ராஜா வேற ஹாஸ்டல்ல கார்த்துக்கிடப்பான், நான் போகலேன்னு... அண்ணு...

ஜீவா: உங்க அண்ணு முகம் என்ன அந்தி மந்தாரையா நீ போகலேன்னு வாடிப்போக?

ராமை: உண்மையில அந்த புஸ்பத்தை விட எங்கண்ணு மனசு ரொம்ப நல்லது.

ஜீவா: நல்ல ஆளப்பா நீ! உன்னப்போல ஆள இந்த உலகத்திலயே காண முடியாது. உங்கண்ணனுக்கு நீ பயப்படக் கூடாது. நீ தினம் நேரம் கழிச்சே வீட்டுக்குப் போகணும். உங்கண்ணே ஏன்னு கேட்டா என் அடிப்படைக் கொள்கை இது. என் உரிமையைப் பறிக்கிறீங்கன்னு துணிஞ்சி வாதாடணும்.

ராமை: அப்பா ஜீவா போதும் உபதேசம். நீ பெரிய அக்ரமக்காரனு இருக்கிறயே!

ஜீவா: அக்ரமத்தை ஆணிவேராகக் கொண்டதால் தான் இன்று ராஜபோகமே அனுபவிக்கிருர்கள். அக்ரமத்தை அக்ரமம் என்று அவர்கள் எண்ணியிருந்தால் அவர்கள் இன்று அன்னக் காவடியாகவல்லவா இருந்திருக்க வேண்டும். நீ தவறு செய் துணிந்து தவறு செய். அதன் மூலம்தான் உன் வருங்காலம் வளமாக்கப்பட வேண்டும்.

ராமை: நிறுத்து. உன் தத்துவம் இந்த நாட்டுக்கு பொருந்தாதப்பா, நான் வருகிறேன்

தாரா: அவசரப்பட்டு அதுக்குள்ள போயிடாதீங்க. நான் போட்ட இந்தக் காப்பியை சாப்பிட்டுட்டுப் போங்க. இவ்வளவு நேரம் பேசி பேசி அண்ணு உங்களுக்கு கொடுத்திருக்கும் தலை வலிக்கு நான் கொடுக்கும் கஷாயம் இது.

[ராஜய்யா வந்து]

ராஜ: சபாஸ்...ரொம்ப நல்லா இருக்கு. கஷாயம் கொடுத்தாச்சி. இனி காஷாயம் ஒன்னுதான் பாக்கி. அண்ணே புறப்படுண்ணே!

ஜீவா: ஹலோ! வாங்க டாக்டர்...

ராஜ: நான் இன்னம் டாக்டருக்கு படிச்சி முடிக்கல. அதுக்குள்ள இந்த பட்டம் எல்லாம் எதுக்கு. அண்ணே டயம் ஆச்சி

வாண்ணே போகலாம். என்னண்ணு இன்னும் பத்து நிமிஷம்தான் இருக்கு புறப்படண்ணு!

தாரா: கொஞ்சம் இருங்க சாப்பிடட்டும். இந்தாங்க நீங்களும் சாப்பிடுங்க. நானே போட்ட காப்பி.

ராமை: ஆமா! நம்ம தாராவே போட்ட காப்பி. ரொம்ப நல்லா இருக்கும்.

ராஜ: அப்படியா கொடு...நீ சாப்பிடு...அண்ணு...வை. கீழ வை...

ராமை: என்ன?

ராஜ: ஒருவேளை காப்பிப் பொடிக்கு பதிலா மூக்குப் பொடியை போட்டுட்டீங்களோ? வாண்ணு போகலாம்.

ஜீவா: ஏய் ராஜு.

ராஜ: என்ன?

ஜீவா: ஏம்பா! ஆடு மாட இழுத்துட்டுப் போற மாதிரி இழுத்துட்டுப் போறயே! கொஞ்சமாவது அண்ணன்ங்கிற மரியாதை வேண்டாம்?

ராஜ: வேணும்.

ஜீவா: சகோதர பாசம் கொஞ்சம் கூட இல்லையே!

ராஜ: இல்ல. அண்ணு. வா அண்ணு போகலாம்.

ராமை: இன்னும் ஒரு நாள்...

ராஜ: ஆமா இன்னும் ஒருநாள்...

ராமை: சாவதானமா வந்து...

ராஜ: சாவதனமா வந்து...

ராமை: ரசிச்சி...

ராஜ: ரசிச்சு...வாண்ணு போகலாம்.

[இழுத்து செல்கிருன்]

ஜீவா: கவலைப்படாதே அந்தக் காப்பியை நானே சாப்பிடு றேன்.

தாரா: அண்ணு! அந்த ராஜன் பெரிய ரௌடி போல இருக்கு. இனிமேல் வந்தா உள்ளே விடாதே. கேட்டைப் பூட்டீரு.

ஜீவா: கேட்டைப் பூட்டினுலும் மந்தி மாதிரி உள்ளே ஏறிக் குதிச்சி வந்துருவானே!

தாரா: குரங்கு!

0 0

(கண்மணி பொய் குதிரை மேல் உட்கார்ந்திருக்க சின்னையா வந்து)

சின்: டேய்,

கண்: என்ன?

சின்: டேய் முறைக்கிற? போட்டேனு? நின்னு எதுக்கவா செய்யிற? டேய். உங்கப்பா உன்னுட்டம் இருக்கத்தில என்ன என்ன காரியம் எல்லாம் செய்திருக்காரு தெரியுமா? நீ மக்கு.

கண்: எங்கப்பா உன்னைப் போல இருக்கத்திலே பெரிய கடையே வச்சிருந்தாரு. நீ என்ன வச்சிருக்க?

சின்: என்ன? டேய். அவ்வளவு தூரம் வந்துட்டயா? போடா போடா! (விரட்டி விட்டு குதிரை பொம்மை மேல் உட்கார்ந்து) நானே படிப்பிலே சூனியம். இவன் என்னை விட மக்கா இருப்பான் போல இருக்கு. பலே பலே பலே பலே பலே...லகானை இழுத்து கையிலே பிடித்தான் ராஜா தேசிங்கு. காதைப் பிடித்து சிம்டா கொடுத்தான் பாராசாரியும். காற்றைப் போலே பறந்து சென்றது பாராசாரியும் பரத நாட்டியம் ஆடிவந்தது பாராசாரியும்.

[லதா வந்து]

லதா: குதிரையை விட்டு கீழே விழுந்தான் ராஜா தேசிங்கு. குதித்து ஓடி சத்திரம் சேர்ந்தது பாராசாரியும். யேய் தேசிங்கு ராஜா! கீழ இறங்குறயா என்ன சொல்ற?

சின்: ஏய் லதா! என்ன எருமை மாடு மாதிரி கத்தின பல்லை உடைச்சிருவேன்.

லதா: ஆமா ஆமா உங்ககிட்ட அடிபட்டவங்கதான் ரொம்ப பேரு ஆஸ்பத்திரியில இருக்காங்க. ஏய் கீழ இறங்குறயா என்ன சொல்ற?

சின்: இறங்க முடியாது என்ன செய்வ.

லதா: இறங்கமாட்டயா? ஐயோ அம்மா அம்மா இந்த அநியாயத்தைப் பாருங்க. இந்த அநியாயத்தைப் பாருங்க.

[அனைவரும் வர]

சாந்: ஏண்டி உயிர் போற மாதிரி கத்துற?

லதா: பார்த்தீங்களா இந்தக் குழந்தை விளையாடுறதை. இந்தச் சின்னக் குழந்தையை தள்ளிட்டு இது உட்கார்ந்து விளையாடுது.

சாந்: இவ்வளவுதானு? இதுக்காகத்தான் இப்படி கத்துனயா?

சின்: அப்படி சொல்லு.

ராஜ: டேய் குழந்தை, இந்தக் குதிரை வேண்டாம், நான் நாளைக்கு மூணு சக்கர சைக்கிள் வாங்கித் தர்றேன். அதில கிடந்து உருளு. அட சீ போடா!

கண்: சித்தப்பா! குதிரையை உடைச்சிட்டாங்க.

ராஜ: பரவாயில்லே. அதைவிட நல்ல குதிரையா இப்பவே வாங்கித் தர்றேன்.

கண்: நிஜம்மா?

ராஜ: நிஜம்மா!

0 0 0

[கண்மணியிடம் லதா சொல்லிக்கொடுக்க கண்மணி சின்னையா விடம் வந்து]

கண்: சித்தப்பா...சித்தப்பா...ஒரு சந்தேகம்.

சின்: டேய் என்னடா சந்தேகம்? கேள் என்ன சந்தேகம்?

கண்: ஆமா நாம பேசுற பாஷைக்கு ஏன் தாய் பாஷைன்னு பேர் வந்தது?

சின்: ஏன் வந்துச்சி? ஏண்டா வந்துச்சி...என்னத்தையோ கேட்டுப்புட்டானே.

கண்: ஐயயோ சித்தப்பாவுக்குத் தெரியல சித்தப்பாவுக்குத் தெரியல...

சின்: டேய் யாருக்கு தெரியல. உனக்கு தெரியுமாடா? சொல்லு...சொல்லு...

கண்: வீட்டுல யாரு பேச்சுககு மதிப்பு? அம்மா பேச்சுக்குத் தான? அதனாலதான் தாய் பாஷைன்னு பேர் வந்துச்சி...

சின்: ஹூம் ஹூம். டேய் தெரியுமுடா...இது எல்லாம் யார் சொல்லிக் கொடுத்ததுன்னு தெரியுமுடா. டேய் பெரிய மனுசா...என்னையே கிண்டல் பண்றயா? டேய் இதில இருந்து இது வரைக்கும் ஐம்பது தடவை இம்பர்சன் எடுத்துட்டு வாடா போடா...

கண்: சித்தப்பா! நான் பெரிய சித்தப்பாவைப் பார்க்க ரயில்வே ஸ்டேஷனுக்கு போகணும் சித்தப்பா!

சின்: ஆமா அவசியம் போகணுமுல்ல. ஏன்னு இந்த துரை வரவேற்பு கொடுக்கல்லேன்னு கோபிச்சிக்கிட்டு திரும்பி போயிரு வாருல்ல. போடா (போக) பிலிம் இண்டியா கம்பெனி அம்முன்னு உன்னுடைய கம்பெனின்னு என்ன? அட அதை எங்க? ஹிஸ்டரியை காணமே டேய் எழுதிட்டயா?

லதா: (கண்மணியிடம்) புகை...புகை...

கண்: புகைமட்டும்தான் எழுதல.

சின்: கம்பெனின்னு என்ன? கம்பெனின்னு என்ன? கம்பெனி கலாட்டா பண்ணுதே! என்னடா இன்னுயா எழுதல?

கண்: எல்லாம் ஆயிருச்சி சித்தப்பா!

சின்: அதுதான் நல்ல பிள்ளேக்கு அடையாளம். டேய் கொண்டா......(புகை வண்டி படத்தை பார்த்து) டேய் இது என்னடா?

லதா: என்ன அது?

சின்: உன் தலே. செய்யிறதை செய்துட்டு கேலிபண்றயா?

லதா: ஆமா! இவனே ஸ்டேஷனுக்கு அழைச்சிட்டுப் போனு என்ன?

சின்: அதெல்லாம் அழைச்சிட்டுப் போக முடியாது. நான் படிக்கணும்.

லதா: ஆமா ரொம்ப படிச்சி கிளிச்சிட்டாரு இவரு.

சின்: என்ன? என்ன? கிளிச்சி......கிளிச்சி...இந்தா...நேர நேரம் சாப்பிட நீ இருக்க. செல்லம் கொடுக்க உங்கக்கா இருக்காங்க. விளேயாடுறதுக்கு இவன் இருக்கான்...

லதா: சண்டை போட நீங்க இருக்கீங்க.

சின்: ஏய் ஒழுங்கா போகமாட்ட?

லதா: போகமாட்டேன். என்ன செய்வ?

சின்: பிடிச்சி தள்ளுவேன். இந்தப் பக்கம் தலேயைக் காட்டுன தொலேச்சிப்புடுவேன்.

[லதா ஆடிப் பாடுகிருள்]

"கோபமா" பாட்டு.

சின்: சே...சே...வரவர இந்த வீட்டுல வரவர அக்ரமம் அதிகமாப் போச்சி. இங்க இருந்தா பரீக்ஷையில நிச்சயம் கோட் அடிக்க வேண்டியதுதான்.

சாந்: என்ன சமாச்சாரம்?

சின்: உங்களுக்கும் என்னேப் பார்த்தா கேலியா இருக்கா?

சாந்: விஷயத்தை சொல்லாம பேசிக்கிட்டே இருக்கயே!

லதா: அத்தான் சொல்ல பயமா இருக்கா?

சின்: நான் போட்டனு?

லதா: அத்தான்! மண்டையிலே மூளே காலியா போச்சியில்ல?

சின்: ஒரு போடு போட்டன்னு உன் பல்லு முப்பத்தி! ஒண்ணும் கொட்டிடும்.

லதா: இன்னும் ஒண்ணு பாக்கியிருக்கே?

சின்: அது பல்லு வலி வந்து தானு விழணும்.

சாந்: என்ன வந்துருச்சி தம்பி?

சின்: நான் படிக்க ஆரம்பிச்சா அண்டங் காக்கா மாதிரி

வந்து கத்துறு? நான் எப்படி படிக்கிறது அப்புறம் பரிக்ஷையில நான் கோட் அடிக்க வேண்டியது தான்.

லதா: பாட புஸ்தகமா படிச்சீங்க? குட்டி மச்சான் பரீக்ஷைக்குப் படிக்கல அக்கா! நாவல் படிச்சது?

சின்: நாவலா? இல்ல. காதல் புஸ்தகமுல்ல படிச்சேன். ஆ! என்ன...என்ன...ஷேக்ஸ்பியர் ஷேக்ஸ்பியர்...

கண்: அம்மா! சித்தப்பா நாவல்தான் படிச்சாரு.

சின்: இத்தூண்டா இருந்துக்கிட்டு ஏண்டா பொய் சொல்ற?

லதா: அதில்ல. நீங்க அந்த நோட்டுக்கு அடியிலே மறைச்சி வச்சி படிச்சீங்களே அதைச் சொல்றுன்.

சின்: வாயைப் பாருடா கழுத்து மாதிரி. நீ இப்படி பண்ணுறு படிச்ச பாடம் எப்படி என் மூளையிலே ஏறும்?

லதா: அது உங்க மூளையிலே எப்படி ஏறும். உங்க மூளை தான் ஸ்டேடியத்திலே இருக்கே.

சின்: கேலிபண்றயா நீ? டேய் நீ எங்கடா போற?

கண்: நான் பெரிய சித்தப்பாவை பார்க்க ஸ்டேசனுக்குப் போறேன்.

சின்: போவடா போவ. வீங்கிற மாதிரி கன்னத்திலே கொடுத்தன்று கண்ணு சிவக்கணும்.

கண்: சித்தப்பா! என்ன அடிக்குது.

சின்: டேய் உன்னே அடிச்சனுடா? அழுவாதடா? இனிமே நிஜமாவே அடிச்சிப்புடுவேன்.

சாந்: ரொம்ப நல்லா இருக்கு. குழந்தையை ஏன் அழ வைக்கிற?

லதா: அத்தானுக்கு வேற என்ன தெரியும்? குழந்தை கிட்டத் தான் அவர் திறமையை காட்டுவாரு என்கிட்ட வரட்டும் சொல்றேன்.

சாந்: போதுமே அமர்க்களம். இந்த மாதிரி பூதங்களை நான் பார்த்ததே இல்லே.

லதா: பக்கத்திலே இருக்கே பெரிய பூதம்.

சின்: ஆமா நான் பூதம் நீ காட்டேரி!

சாந்: ஆமா நீ பூதம் அவ காட்டேரி ரெண்டும் நல்ல ஜோடி தான்.

சின்: முடியாது இனி நம்மால முடியாது. உங்ககிட்ட இருந்தேன் கண்டிப்பா கோட் அடிக்க வேண்டியது தான்.

சாந்: ஆமா! நீ படிக்கிறதுக்கு நீ நிச்சயம் பாஷாகிருவ.

சின்: அண்ணி......இந்த வீட்டிலே பெரிய சதி திட்டமே உருவாகுது. சாக்ரடீசை கொல்ல ஒரு கோப்பை விஷம். மகாத்மாவை கொல்ல மூன்று துப்பாக்கிக் குண்டுகள். இந்த சின்னையாவை கொல்ல இந்த இரண்டும். அண்ணி என்னை நம்புங்க வேணுமானு என் ரூம்பை சோதனை போட்டுபாருங்க.

சாந்தா: நீ செய்தாலும் செய்வ. உன் ரூம்பை பார்த்து தான் சொல்ல முடியும்.

(ரூம்பை பார்த்து)

சாந்: நல்லா இருக்கு. நீ படிக்கிற லட்சணம் இந்த புத்த கத்தை படிச்சி சொல்லு.

சின்: அண்ணி! இது இங்கிலீஸ் புஸ்தகம். படம் இருக்காது. எழுத்துத்தான் இருக்கும். உனக்கு புரியுமா?

சாந்: புரியுதான்னு தான் பார்ப்பமே!

சின்: ஐயோ அண்ணி! இதை என்ன வண்ணான் கணக்கு எழுதற புஸ்தகமுன்னு நினைச்சயா? பெரிய பெரிய ஆளுகளே திணறுருங்க.

சாந்: ஓ......அப்படியா?

சின்: அண்ணி! நான் தாகூரைப் பற்றி ஒரு பொயற்றி சொல்லட்டுமா?

சாந்: தாகூரைப் பற்றி தெரியுமா உனக்கு? எங்க சொல்லு பார்ப்போம்.

(இங்கிலீஸ் உரையாடல்)

சின்: அண்ணி...அண்ணி...உங்களைப்பற்றி தெரியாம உங்களை ஏமாற்றப் பார்த்துட்டேன். என்னை மன்னிச்சுருங்க அண்ணி... நீங்க எதுவரை படிச்சிருக்கீங்க?

சாந்: நான் ஒண்ணும் அதிகமாப் படிக்கல. சாதாரண பி. ஏ. தான்.

சின்: அண்ணி. இதோ பெரியண்ணன் சின்னண்ணன் கிட்ட சொல்லீட்டு வர்றேண்.

சாந்: இதை யார் கிட்டையும் சொல்லாதே. சொன்ன என் தலையை தின்ன மாதிரி.

சின்: அண்ணி! கொஞ்சம் படிப்பு படிச்சவங்களே தாட்பூட் டுன்னு தவ்வுருங்களே நீங்க ஏன் யார் கிட்டையும் சொல்லல?

சாந்: ஏன் தெரியுமா உங்கண்ணு அதிகமா படிக்காதவரு நான் படிச்சவன்னு தெரிஞ்சி என்னைக் கலியாணம் பண்ண சம்மதிக் கலேன்னு என் கதி என்ன ஆகியிருக்கும்?

சின்: படிச்ச நீங்க ஏன் படிக்காத அண்ணவை கலியாணம் செய்துக் கிட்டீங்க?

சாந்: அவர்கிட்ட குணம் இருக்கு. எனக்கு படிப்பு இருக்கு போதாதா?

சின்: நான் சொல்லத்தான் போறேன்.

சாந்: நீ சொன்ன. நான் வாயாலயும் மூக்காலயும் ரெத்தம் ரெத்தமா கக்கி செத்துப் போயிருவேன்.

சின்: ஐயய்யோ நான் சொல்லல அண்ணி.....

சாந்: நீ சொல்லலேன்ணு நீ உங்கண்ணு கிட்ட கேட்டயே பார்க்கர் பேணு. அது கோல்டு கப்பா பார்த்து நான் வாங்கித் தர்றேன்.

சின்: நிஜமாவா?

சாந்: ஆமா.

சின்: நீங்கதான் நல்ல அண்ணி.

*    *

(சொக்கேசர் முத்தய்யாவிடம் வர)

சொக்: வணக்கம்.

முத்: வாங்க வாங்க. என்ன விசேஷம்?

சொக்: ஒரு முக்கிய மான விசயத்தை முன்னிட்டு தான் வந்திருக்கேன். நீங்க மறுக்க மாட்டேன்னு சொன்ணுதான் விசயத்தை சொல்வேன்.

முத்: நீங்க எப்ப கேட்டு நான் எப்ப மறுத்திருக்கேன்? சம்பளம் அதிகமா வேணுமா?

சொக்: என் வீட்டை வச்சி ஒரு ஆயிரம் ரூபாய் வேணும். இதோ அடமானப் பத்திரம்.

முத்: பத்திரம் இருக்கட்டும். ஆயிரம் ரூபாய் செலவுக்கு என்ன அவசரம் அதை சொல்லுங்க.

சொக்: என்னைப்போல ஏழைகளுக்கு வேற என்ன வேணும்? என் மகளுக்கு கலியாணம் முடிக்கணும். மாப்பிள்ளை வீட்டுக்காரங்க ரொக்கமா ஐநூறு ரூபாய் கேட்கிறுங்க.

முத்: கலியாணம் ஆகிற வயசில உங்களுக்கு ஒரு பெண்ணு இருக்குன்னு எனக்கு இப்பத்தான் தெரியும். சொக்கேசர் எதற்கும் நான் உங்க பெண்ணை பார்க்கலாமா?

சொக்: வாங்க.

(தாரா பாடிக் கொண்டிருக்கிருள்)

"வாராயோ" பாட்டு.

(ராமய்யா வந்து)

ராம: பார்த்தேன். பார்த்தேன்.

தாரா: எதைப் பார்த்தீங்க?

ராம: பச்சை மயிலே மாடப்புரு தாவி முத்தமிடுவதைப் பார்த்தேன். ஏன் தயங்குகிறாய். எனக்கு மாலையிடப் போற மங்கையைப் பற்றி நான் சொல்கிறேன்.

தாரா: ஓ. மாலையிடப் போற மங்கையைப் பற்றி சொல்றீங்களா? அப்ப அழகான பெண்ணாய் தான் இருக்கும்.

ராம: ஆனா குணத்திலேதான் கொஞ்சம் மாறுபாடு.

தாரா: குணமா?

ராம: ஆமா. ரோஜா பூவுன்னு இருந்தா அதில முள் இருக்கத்தான செய்யும். அந்த மாதிரி எந்த கொஞ்சம் கோபம் கொஞ்சம் அழுகை. அவள காப்பி போட தெரியுமான்னு கேட்டாலும் கோபம். போட்ட காப்பியை குடிக்கவும் பயம்.

தாரா: நல்லா இருக்கு. இதுதான் பயப்படுற லட்சணமா? ஐயோ அம்மா.... இருங்க யாராவது பார்த்துட போறாங்க....

ராமய்: பார்த்தா என்ன? நாம பார்க்காத மாதிரி இருந்துட்டாப் போச்சி.

தாரா: ஐயோ அண்ணா....

ராமய்: அண்ணவா எங்க?

தாரா: பயந்து போயிட்டீங்களே!

* * *

[முத்தய்யாவை தன் வீடு அழைத்து வந்த சொக்கேசர்]

சொக்: மங்களம்...மங்களம்...

மங்: என்னப்பா?

சொக்: நம்ம வீட்டுக்கு யார் வந்திருக்காங்கன்னு பாரு. என்னம்மா அப்படி பார்க்கிற? இவர் தான் எங்க கடை முதலாளி முத்தையா!

முத்: மங்களம் அழகான பெயர். ஏம்மா. நீ படிச்சிருக்கயா?

சொக்: ஏதாவது தந்தி வந்தா படிக்கத் தெரியும்.

முத்: அது போதுமே, குடும்பம் நடத்த கெட்டிக்காரத் தனமா இருந்தா அதுவே போதும்.

சொக்: என்ன கெட்டிக் காரத்தனம் இருந்து என்னங்க பிரயோஜனம் ஏழை வீட்டில பிறந்திருக்கே அது ஒன்னு போதாது.

முத்: வருத்தப் படாதீங்க! உங்க பெண்ணுக்கு மாப்பிள்ளை நான் பார்த்திருக்கேன். நல்லா படிச்சவன் அழகானவன். பணக்

காரன். அண்ணன் தம்பி நாலுபேர். இந்த மாதிரி சம்பந்தம் உங்களுக்குப் பிடிக்குமா?

சொக்: என்னங்க இப்படி பேசுறீங்க. இந்த மாதிரி சம்பந்தம் எங்களுக்கு கிடைக்க வேண்டாம்?

முத்: அப்ப உங்க பெண்ண என் வீட்டுக்கே அழைச்சிக்கிடுறேன்.

சொக்: என்ன சொல்றீங்க?

முத்: வக்கீலுக்குப் படிக்கிறானே என் தம்பி ராமையா அவனுக்கே கலியாணம் பண்ணி கொடுத்திருங்க.

சொக்: என்னங்க என்கிட்ட விளையாடிக்கிட்டு?

முத்: ஏன் யோசிக்கிறீங்க?

சொக்: உங்க தம்பியைப் பற்றி என்ன சொல்ல முடியும்? நல்லா படிச்சிருக்கார். புத்திசாலிதனம் இருக்கு ஆனால்...

முத்: சந்தேகப் படாதீங்க. நான் சம்பாதிக்கிற பணம் நாலு பேருக்கும் பொாதுதான்.

சொக்: அதனாலதான் அந்த அந்தஸ்து பேதம் நம்மை பிரிச்சு வைக்குது. நீங்க மாடிவீட்டுல வாழறவங்க. நான் மண் குடிசையிலே வாழ்றவன்.

முத்: நீங்க நினைக்கிறது தப்பு. அந்தஸ்து பேதம் காட்டுறவன் நான் இல்ல.

சொக்: நிஜமாகவா?

முத்: நாங்க வாக்கு தவறி நடக்குறது எங்க குடும்பத்திலயே இல்ல. நிச்சயம் செய்துட்டா போதுமுல்ல...

0 0 0

[கண்ணப்பர் முத்தய்யாவிடம்]

கண்: ராமையா கலியாணம் நிச்சயம் செய்தது பற்றி எனக்கு சந்தோஷம்தான். ஆனால் நான் வேற மாதிரி தீர்மானம் பண்ணிக்கிட்டு இருந்தேன்.

முத்: என்ன மாமா! சொல்லுங்க.

கண்: சொல்லத்தான யோசனை பண்ணிக்கிட்டு இருக்கேன். நீ சொக்கேசருக்கு வேற வாக்கு கொடுத்திருக்க.

முத்: அதனால என்ன?

கண்: நீ இவ்வள்வு காலம் வார்த்தை தவறினவன்னு பேர் வாங்கினது பாரு. நீ இனியும் என்னால வார்த்தை தவறினவன்னு பேர் வாங்கக்கூடாது பாரு.

முத்: நீங்க சொல்றது ஒண்ணும் புரியல. கொஞ்சம் விளக்கம

சொல்லுங்க. நீங்க சொல்றது என்னன்னு நான் புரிஞ்சிக்கிட வேண்டாமா?

கண்: எப்படியோ ஜீவா பெரியவனுகிட்டான். அவனைப் பற்றி இனி கவலே இல்ல. என் கவலே எல்லாம் தாராவைப்பற்றி தான். தாராவை ராமய்யாவுக்கு கலியாணம் பண்ணி கொடுத்திரலா முன்னு யோசனே பண்ணிக்கிட்டு இருந்தேன்.

முத்: கலியாணமா? உங்களோட சம்பந்தம் வச்சிக்கிட நாங்க பாக்கியம் செய்திருக்கோமா?

கண்: அப்படிச் சொல்லாதே முத்தய்யா. எறும்பு போல உழைச்சி இமயம்போல வளர்ந்தது முத்தையா குடும்பம். அவுங்க குடும்பத்தில என் பெண் சம்பந்தப்படுவது எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா?

முத்: அடடா! நீங்க இவ்வளவு சொல்லணுமா? எதற்கும் சொக்கேசர் கிட்ட ஒரு வார்த்தை சொல்லிப் பார்க்கிறேன்.

0 0 0

[சொக்கேசர் வீட்டுக்கு முத்தய்யா வர]

சொக்: வாங்க...வாங்க...உட்காருங்க...

முத்: சொக்கேசர். மொழி தப்பினவன் வழிதப்பினவன்னு பெரியவங்க சொல்வாங்க. ஆனு உங்க விஷயத்தில நான் வார்த்தை தவறி நடக்க வேண்டியிருக்குது.

சொக்: அப்படிச் சொல்லாதீங்க. என்ன என்னமோ நினைச் சேன். பெரிய வீட்டுல சம்பந்தம் கிடைச்சதுன்னு ஊரெல்லாம் சொல்லிக்கிட்டு திரிஞ்சேன்.

முத்: நீங்க பயப்படாதீங்க இது விசயமா வக்கீல் கண்ணப் பரை சந்திச்சேன்.

சொக்: அவங்களாலதான் என் மகள் வாழ்வு கெட்டதா? எங்க வாழ்க்கையிலே எண்ணத்திலே மண்ணைப் போட்டிடாதீங்க. இந்த ஏழையின் உள்ளத்திலே இன்ப விளக்கேற்றி வையுங்கள்.

முத்: கொஞ்சம் நிதானமா நான் சொல்றதைக் கேளுங்க. அந்த பெரிய தம்பி இல்லேன்ன என் சின்ன தம்பி இருக்கான்.

சொக்: என்ன சொல்றீங்க?

முத்: ராமையா இல்லேன்ன டாக்டருக்குப் படிக்கிருனே என் சின்ன தம்பி ராஜய்யா. எங்க குடும்பத்திலே உறவு வேணு முன்ன அவனுக்கு கொடுங்களேன்?

சொக: இவ்வளவு நேரமா அதைப் பற்றியா சொன்னீங்க? என்னே மன்னிச்சிருங்க.

முத்: ஆமா!

சொக்: கலியாணத்தை...

முத்: கவலைப்படாதீங்க சீக்கிரமாகவே முடிச்சிரலாம்.

0 0 0

[ராஜய்யா ஆர்மோன்யம் வைத்து பாட, படிக்கும் ஒருவன் வந்து]

ஒரு: பிரதர்! உன் கால்ல விழுந்து கெஞ்சுறேன். நான் படிக்கணும். பரீக்ஷை கிட்ட வந்துருச்சி.

ராஜ: இவ்வளவு நாளா படிக்காம இருந்துட்டு இனிமேல் தான் படிச்சி குப்பை கொட்டப் போறியாக்கும்? அப்படி படிச்சி நீ பாசாகிட்டாத்தான் உனக்கு டாக்டர் வேலை கொடுக்க எவன் காத்துக்கிட்டு இருக்கான்?

மற்: உனக்கு என்னப்பா உங்கண்ணு இருக்கார் காமதேனு மாதிரி. அவன் அவங்க மாமனுர் தயவுல படிக்கிறுன். அவன் இந்த வருஷம் பாசாகாட்டி அவன் மாமனுர் படியளக்கிறதை நிறுத்திருவார். அவன் மனைவி அவன்கிட்ட முகம் கொடுத்தும் பேசமாட்டா!

ராஜ: டேய் நீங்கள் எல்லாம் சரியான முட்டாள்கள்.

ஒரு: என்ன?

ராஜ: புத்திசாலிகள் கலியாணத்தைப்பற்றி நினைக்கவே மாட்டார்கள்.

மூன்: அதனுலதான் கலியாணமே பண்ணும இருக்கார்.

ராஜ: சந்தேகம் என்ன? என் பிணத்துக்குக்கூட கல்யாணம் பண்ணக்கூடாதுன்னு உயில் எழுதி வச்சிட்டுத்தான் நான் சாவேன்.

ஒரு: டேய் நானும் உன்னுட்டம் இப்படித்தான் ஜம்பம் பண்ணிக்கிட்டு இருந்தேன், ஆனு இப்ப அரை டஜன் குழந்தை இருக்கு. இன்னும் ரெண்டு வருஷம் போனு...

ராஜ: உன் பிள்ளைகள் உன் கூட படிக்க வந்துருமுன்னு பயப்படுறயா?

ஒரு: ஆமாப்பா! அதனுல கொஞ்சம் டிஸ்டப் பண்ணும இருக்கயா?

[ராஜா பாடுகிறுன்]

"கையாலே கண்ணே" பாட்டு.

[போஸ்டுமேன் வந்து]

போஸ்: சார் போஸ்டு.

ஒரு: ராஜம் உனக்கு லெட்டர் வந்திருக்கப்பா!

ராஜ: அண்ணன் எழுதியிருக்காரு...... (படித்து) நடக்கக் கூடாது...நடக்க முடியாது...

ஒரு: என்னப்பா என்னமாவது மோசமான விஷயமா?

ராஜ: மோசமா? சூழ்ச்சி. என்னைக் கேட்காம என் கலியாணத்துக்கு ஏற்பாடு பண்ணி யிருக்காங்க.

[அனைவரும் சிரித்து]

அனை: கலியாணமா?

ராஜ: மண்ணுங்கட்டி. என்னை யாருன்னு நினைச்சீங்க. நான் இப்பவே போயி நூற்றி நாற்பத்தி நாலு போட்டுட்டுவர்றேன். நான் யாரு தெரியுமா? ராஜய்யா போயி புரோபசர பார்த்துட்டு வர்றேன்.

0 0 0

[கண்மணியை சாந்தா குளிப்பாட்டிக் கொண்டிருக்க]

கண்: அம்மா தண்ணி ஊத்தம்மா...

[ராஜய்யா வந்து]

ராஜ: அண்ணி அண்ணி...

சாந்: வாங்க! ஏது திடீருன்னு வந்துட்டீங்க?

கண்: சித்தப்பா...சித்தப்பா...

ராஜ: டே...டே...போடா...

சாந்: உடம்புக்கு ஒண்ணும் இல்லையே?

ராஜ: என் உடம்புக்கு என்ன? ஆமா இதெல்லாம் என்ன அண்ணி?

சாந்: எது? எனக்கு ஒண்ணும் புரியலியே?

ராஜ: சரிதான் இந்த மாதிரி எல்லாம் பேசி என்னை ஒண்ணும் ஏமாற்றிட முடியாது. முடியவே முடியாது. என் லட்சியத்தையே நாசமாக்குற இந்தக் கலியாணத்துக்கு நான் சம்மதிக்கவே மாட்டேன்.

சாந்: என்ன சொல்றீங்க? கல்யாணமாவது லட்சியமாவது?

ராஜ: ஆமா அண்ணி கலியாணம் வேண்டாமுங்கிறது என் லட்சியம். என்னை சாகடிச்சாலும் என் லட்சியத்தை சாகடிக்கவே முடியாது.

சாந்: அடடா! ஏன் இப்படி குதிக்கிறீங்க? கொஞ்சம் உட்கார்ந்து பேசுங்க.

ராஜ: எனக்கு உட்கார நேரம் ஏது. அண்ணி. நீங்களே கொஞ்சம் யோசனை பண்ணிப் பாருங்க. அண்ணி! நான் சின்னப் பையன். இந்த சம்சார சாகரத்திலே என்னைக் கொண்டு போய் ஏன் உயிரோட தள்ளப் பார்க்கிறீங்க?

சாந்: ஏன்? உங்களுக்கு கரை ஏற தெரியாதா?

ராஜ: அய்யய்யோ! நீங்க வேற என்ன அண்ணி. இந்த நேரத்திலே கேலி பேசிக்கிட்டு? அடுத்த மாசம் பரீக்ஷை வேற வரப் போகுது. அதுக்குள்ள ஏன் அண்ணி எனக்குக் கலியாணம்? அண்ணி...அண்ணி......எனக்காக என் மேல கருணை வச்சி இந்தக் கலியாணத்துக்கு கொஞ்சம் முற்றுப்புள்ளி வச்சிருங்களேன்.

சாந்: உஹீம். எனக்குக் கோலம் போட்ற புள்ளியைத் தவிர வேற ஒரு புள்ளியும் தெரியாது. மாடியிலே உங்க அண்ணு இருக்காரு. நேரே அவர்கிட்ட போயி சொல்லிடுங்களேன்.

ராஜ: ஆமா! அண்ணன் மட்டும் தான இருக்காரு?

சாந்: இல்லே அத்தை கூட இருக்காங்க.

ராஜ: ஐய்யய்யோ...ஹிட்லரும் முசோலினியும் சேர்ந்து இருக்கிற மாதிரி இருக்கே. அண்ணி நீங்க ரொம்ப நல்ல அண்ணி யில்ல. எங்க செல்ல அண்ணியில்ல. நீங்களும் அப்படியே என்கூட துணைக்கு வந்துட்டு வந்துடுங்களேன். ம்......இல்லேனு ஒண்ணு செய்யுங்களேன்?

சாந்: என்ன?

ராஜ: எனக்காக நீங்களே போயி பேசிட்டு வந்திடுங் களேன்.

சாந்: நீங்க ஒரு ஆம்பளே. உங்களுக்கு இவ்வளவு கூட தைரியம் இல்லேன்னு நான் மட்டும் எப்படி சொல்றது?

ராஜ: புரியுது அண்ணி புரியுது. எல்லாம் உங்க வேலேதானு அண்ணனைத்தூண்டி விட்டுட்டு இப்படி பூனே மாதிரி இருக்கிறீங்க ளாக்கும்? அண்ணன்கிட்ட நானே போய் துணிஞ்சு நேரிலே வாதாடப் போறேன். எப்படி வர்றேன்னு பாருங்க. வெற்றியோடு திரும்பி வரல என் பேரு ராஜய்யா இல்ல.

[மாடியில்]

முத்: ரவை மூணு மூட்டை போதுமா அத்தை.

சிவ: போதாதப்பா! நமக்கு உறவு முறை ஜாஸ்திங்கிறதை மறந்துட்டயா நீ?

முத்: மறக்காம எல்லோருக்கும் கல்யாண பத்திரிக்கை அனுப் பிரணும். யாரும் கோளாறு சொல்லக்கூடாது.

சிவ: (ராஜய்யா வர) வா ராஜு! எப்ப வந்த?

முத்: அடடே...வாப்பா வா...எல்லாம் உன் விஷயமாத்தான் பேசிக்கிட்டு இருக்கோம்.

சிவ: பார்த்தியா முத்து. கல்யாணக் கடுதாசியைப் பார்த்து தம் தம்பி தாவிக் குதிச்சில்ல ஓடியாந்திருக்கான்.

ராஜ: அண்ணா...வந்து நான் உன்கிட்ட ஒரு முக்கியமான விசயத்தைப்பற்றி பேச வந்திருக்கேன். வந்து இந்த மாதிரி கடிதம் எழுதுவீங்கன்னு நான் எதிர்பார்க்கவே இல்லே அண்ணா.

சிவ: அய்யோ! தந்தி கொடுத்திருக்கணும்.

முத்: அதில்லே அத்தை. அழைப்பு அச்சடித்து தாலி கட்டும் நேரத்தில் மட்டும் என்னை தருவித்தால் போதாதா என்று என்னைக் கேட்க வந்திருக்கிறான் தம்பி. அப்படித்தானே?

ராஜ: அது இல்லேண்ணா! அழைப்பெல்லாம் அச்சாகிறதுக்கு முன்னாலேயே நான் சொல்ல வேண்டியதை சொல்ல வந்திருக்கிறேன்.

முத்: உம். எனக்கு தெரியாதா என்ன? தமிழ் திருமணம் தானே செய்யவேண்டும் என்கிறாய்?

ராஜ: அது மட்டும் இல்லே அண்ணா...

முத்: சரி! ஒரு ரிஜிஸ்டிராரையும் அழைத்து விட்டால் போகிறது.

ராஜ: அண்ணா எனக்கு இப்போது கலியாணமே வேண்டாம் என்று...

முத்: ஆ...

ராஜ: வேண்டுமானால் என் பரீக்ஷை முடிந்த பிறகு வைத்துக் கொள்ளுங்களேன்.

முத்: புரிந்துகொண்டேன். உனக்கு சம்மதம் இல்லையானால் நிறுத்திவிடுவோம். ஆனால் சொக்கேசருக்கு வாக்குக் கொடுத்து விட்டேன். இதுவரையில் உன் அண்ணன் வார்த்தை தவறி நடந்ததே கிடையாது. ம்...பரவாயில்லே. முத்தையன் பெரிய பணக்காரனாகி விட்டான். அந்த இறுமாப்பில் ஏழை சொக்கேசரை ஏமாற்றிவிட்டா னென்று என்னைத்தானே ஊரார் ஏளனமாகப் பேசுவார்கள்? சரி...

ராஜ: அண்ணா......என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் விருப்பம் போலவே கலியாணத்தை முடித்துவிடுங்கள்.

[அவன் போக]

சிவ: கல்யாணமே வேண்டாமுன்னு வந்தவனை சம்மதிக்க வச்சிட்டயே.

முத்: எனக்குத் தெரியும் அத்தே! என் தம்பிகள் என்றைக்கும் என் வார்த்தையை தட்டி நடக்கவே மாட்டார்கள்.

[ராஜய்யா வந்து கொண்டே]

ராஜ: பெண்ணாய் பிறந்ததொரு மாயப் பிசாசு பிடித்து மாயப் பிசாசு பிடித்து...

சாந்: என்ன போன காரியம் என்ன ஆச்சி?

ராஜ: அதாவது...அதாவது இது ஜெயம்......வெற்றி...... சட்சஸ்...

சாந்தா: பரவாயில்லையே! அப்ப கலியாணம் நின்னு போச்சின்னு சொல்லுங்க.

ராஜ: ஆமா...எது? அதான இல்ல. கலியாணம் தடபுடலா நடத்தாதுன்னு தீர்மானம் பண்ணீட்டோம்.

சாந்: அப்படியா? பரீசை வேற வரப்போகுது அதுக்குள் ளயா கலியாணம்?

ராஜ: ஆமா பரிக்ஷை...பொல்லா பரிக்ஷை...அண்ணி. பந்தல் காரனுக்கு அட்வான்ஸ் கொடுத்தது. வேஷ்டி சேலைக்கு ஆர்டர் கொடுத்தது இதெல்லாம் சேர்த்து கலியாணம் நின்னு போனு எவ்வளவு நஷ்டம் வரும். இதைவிட நான் பெயிலா போறது பெரிய நஷ்டமாக்கும்.

சாந்: சரிதான். உங்க டம்பம் எல்லாம் எப்பவும் என் கிட்டத்தான் போல இருக்கு. அண்ணுகிட்டப் போனவுடனே கலகலத்துப் போயிட்டீங்களே!

ராஜ: பயம் இல்ல அண்ணி. கலியாணம் நின்னு போயிட்டா அதனுல அண்ணனுகக்கு கெட்ட பெயர். அதற்கு நான் காரணமாக இருக்கலாமா?

சாந்: என்ன இருந்தாலும் சம்சாரம் பெரிய சாகரமாச்சே?

ராஜ: நான் என்ன சம்சார சாகரத்திலே சாகவா போறேன்? வாழத்தான போறேன்.

0 0 0

[ராமய்யாவுக்கும் தாராவுக்கும், ராஜய்யாவுக்கும் மங்களத்திற்கும் திருமண ஊர்வலம் வருகிறது]

0 0 0

[இரு கல்யாண ஜோடிகளும் நிற்க சாந்தா ஆராத்தி எடுக்கிருள். அப்போது லதா]

லதா: அக்கா அக்கா இரு. இந்த சின்ன அத்தானுக்கு நான் திலகம் வைக்க வேண்டாமா? கலியாணமே வேண்டாமென்று சொன்ன கர்மவீரரே! உங்க தோல்விக்கு இது அடையாளம்.

சிவ: லதா! போதும் விளையாட்டு. எல்லோரையும் உள்ள அழைச்சிட்டு வாங்க!

சாந்: வலது கால முன்ன வச்சி வாங்க. (போனவுடன்)

விதவை: பார்த்தீங்களா? ஒரு கலியாணத்திலே என்னை வித

வைன்னு சொல்லி விரட்டி அடிச்சாங்களே இப்ப அவளை விட்டு திலகம்வைக்க சொன்னதை. இது அடுக்குமா?

விசா: ஹீம் தள்ளு குப்பையை. அடுக்குமாவாவது மைதாமாவாவது. அற்பனுக்கு வாழ்வு வந்தா? நம்மளைப்போல பரம்பரையா பெரிய தனமா வாழ்ந்திருந்தாவுல தெரியும். திடீர் குபேரன்.

ஒரு: அது அப்படியில்ல. நம்ம எல்லாம் ஏழை. அவங்களுக்கு அடங்கி நடக்கணுமுங்கிற அலட்சியம்.

மற்: அது இல்ல. இங்க சாந்தா பெரிய மருமக. அவதங்கை என்ன செய்தாலும் இங்கயாரும் மூச்சு கூட விட முடியாது.

0 0

(மங்களத்திடம் வந்து)

விசா: ஐயோ பாவம். என்ன அநியாயமாப் போச்சி?

ஒரு: என்னக்கா என்ன விசயம்?

விசா: அதோபாரு அந்தப் பெண்ணு மகாலட்சுமி மாதிரி இருக்கா. என்ன செய்யிறது. கஷ்டகாலம் வந்தா சும்மா விடுமா?

ஒரு: சமாச்சாரத்தை சொல்லுங்களேன்.

விசா: என்னத்தை சொல்றது. என் வாயே கூசுது. நல்லநேரத்தில அந்த தாலி அறுத்தவ முன்னே வரலாமா?

ஒரு: யாரு இந்த வீட்டிலே வளர்ற லதாவை சொல்றயா?

மற்: என் மனசு பக்குன்னு போச்சு.

விசா: உன் மனசு பக்குன்னு போச்சு என் உயிரே போச்சி. இனி என்ன என்னல்லாம் நேரப் போகுதோ! பத்தினியம்மா. நீ தான் காப்பாற்றணும்.

0 0

(முதல் இரவில்)

ராஜா: மங்களம், என்ன இதற்கு முன்னால கம்மாக்கரையிலே ஆற்றங்கரையிலே குளத்தங்கரையிலே சந்திச்சி காதல் பண்ணலயேன்னு கவலைப் படுறயா? அதனால பரவாயில்லை. இப்பக் கூட கலியாணம் பண்ணின பிறகு கூட காதல் பண்ணலாம்.

மங்களம்: சும்மா இருங்க. எனக்கு இந்த விளையாட்டு எல்லாம் பிடிக்காது.

ராஜ: சும்மா இருக்கிறதா? இந்த நேரத்திலே சும்மாஇருந்தா என்னை பைத்தியகாரன்னுல்ல சொல்வாங்க.

(ராஜய்டா பாடுகிறான்)

"காதல் காதல் காதல்" பாட்டு.

மங்: போதும் நிறுத்துங்க!

ராஜ: ஏன்? என்ன வந்தது உனக்கு?

மங்: இந்த மங்களம் மனசுலே ஒண்ணையும் வச்சி மங்க மாட்டா. நான் யாருக்குப் பயப்படணும். நீங்க என்னடான்னா காதல் காதலுன்னு பாடுறீங்க. காலையிலே வீட்டுக்குள்ளே கால் எடுத்து வைக்கும் போதே அந்த மூதேவியை அனுப்பிச்சி வேடிக்கை பார்த்தாங்க. ஒரே அபசகுனம்.

ராஜ: மூதேவியா? அந்தப் பேரு உள்ளவுங்க யாருமே இங்கே கிடையாதே. யாரைச் சொல்றே?

மங்: யாருன்னு கேட்கிறீங்க? எல்லாம் அந்த விதவைப் பொண்ணு லதாவைத்தான் சொல்றேன்.

ராஜ: அட லதாவா? குத்து விளக்கு குங்கும சிமிழ்ன்னு நாங்கள்ளாம் கொண்டாடிக்கிட்டு இருக்கோமே அந்த லதாவையா விதவைன்னு சொல்றே? உன் நாக்கை அடக்கிப் பேசு மங்களம். இந்த வார்த்தை அண்ணி காதுலே விழுந்தா...

மங்: அவங்களுக்கு கஷ்டமாகத்தான் இருக்கும். அதுக்கு நான் என்ன செய்யிறது? எங்க அப்பா பணத்துக்காக ஆசைப்பட்டு உங்ககுடும்பத்திலே கொண்டு வந்து தள்ளினார். நான் சுகமாக இருக்கக் கூடாதுன்னு உங்க அத்தையும் நினைச்சிருப்பாங்க போலிருக்கு. இல்லாத போனா அப்பவே அந்த லதாவை கண்டிச்சிருக்க மாட்டாங்களா?

ராஜ: போதும். இந்த வீட்டுக்கு எங்க அண்ணி தான் எஜமானி. இந்த குடும்பத்திலே நீ இருக்கணுமுன்னா அவங்களுக்கு அடங்கித்தான் நடக்கணும்.

மங்: அப்படியெல்லாம் உங்களுக்கு வேலை செய்ய ஒரு வேலைக்காரி தேவையிருந்தா இவ்வளவு தடபுலா ஏன் கலியாணம் செய்துக்கிடணும்? உங்களுக்கு வெட்கமில்லே? நானும் இந்த வீட்டிலே ஒரு மருமகள்தான். உங்க அண்ணிக்கு இருக்கிற உரிமை எனக்கும் உண்டு.

ராஜ: ஓஹோ! படியிலே ஏறும் போதே சர்வாதிகாரமா? சரி! உனக்கு சாமார்த்தியமா இருந்தா என்னைத் தள்ளி வச்சிட்டு உன் இஷ்டம் போலஇரு.

(கோபத்துடன் மாலையை கழற்றி வீசிவிட்டு மாடியில் நிற்கிறான் ராஜய்யா. எதிர் மாடியிலே ராமய்யாவும் தாராவும் சந்தோஷத்துடன் இருக்கிறார்கள்)

"ஆணும் பெண்ணும் வாழ்விலே" பாட்டு

[பார்த்து உள்ளே செல்கிறான்]

* *

[இரவிலே ராஜய்யா வீட்டை விட்டு வெளியேறுகிருன்]

0 0

[ராஜய்யா குடித்துவிட்டு ஒரு மனித எலும்பு கூடு படத்தைப் பார்த்து]

ராஜ: உன்னைக் கண்ட பிறகு மனம் சொன்னபடி கேட்குதில்ல. உன்னைக் கண்ட பிறகு மனம் சொன்னபடி கேட்குதில்ல. யாரது? நீயா? சே...சே......உன்னால பேச முடியாது. முடியாதுன்னு முடியாது. அடேயப்பா. உனக்கு கொஞ்சம் சதையும் கொஞ்சம் ரத்தமும் கொஞ்சம் நரம்பும் லேசா சூடும் இருந்துட்டா என்ன பேச்சு பேசுவ என்ன பேச்சு பேசுவ. நான் மேல் ஜாதி நீ கீழ்ச்சாதி நான் உயர்ந்தவன் நீ தாழ்ந்தவன் என்ன பேச்சு பேசுவ...என்ன பேச்சு பேசுவ. இப்ப பேசு......இப்ப பேசு. உன்னால பேச முடியாது. உன்னால முடியாது. முடியாதுன்னு முடியாது. யேய் பேசாதே! மூச்சு விடாதே!

ஒரு: டேய் என்னடா இது சத்தம்?

ராஜ: அடடா! நீ பேசு. நீ பேசலாம்...ஹீ...ம் நீ பேசக் கூடாது. நீ பேசு. உனக்கு உடம்புல ரெத்தம் இருக்கு சதை இருக்கு. நீ பேசலாம். நான் பேசலாம். இவங்க ரெண்டுபேரும் பேசலாமா?

ஒரு: ராஜு என்னடா இதெல்லாம்?

ராஜா: என்னடாவா? நீயா பேசுன? இந்த நாட்டுல ஜாதி ஒழியனுமுன்னு உன் சதையை எடுத்துட்டு உன் ரத்தத்தையும் எடுத்துட்டு உன்னையும் அது கூட தூக்கி மாட்டணும் என்னடாவாம்.

மற்: டேய் சும்மா இருக்கயா போலீஸ கூப்பிடட்டுமா?

ராஜ: போலீஸா. நீ என்னடா கூப்பிடுறது நானே கூப்பிடுறேன். ஹலோ......

மற்: டேய் போயி தண்ணி கொண்டாடா.

ராஜ: நீ தண்ணி கொண்டா.

மற்: நீ எலுமிச்சம் பழம் கொண்டா.

ராஜ: நீ எலுமிச்சம் பழம் கொண்டா நீ அந்த பாட்டிலை கொண்டா.

[அனைவரும் சேர்ந்து அவன் தலையில் தண்ணீரை ஊற்றுகின்றனர்]

0 0

[முத்தையாவிடம் சாந்தா]

சாந்: என்னுல நம்ப முடியலியே. உங்க ராஜா தம்பியா குடிக்க ஆரம்பிச்சிருச்சி? யாராவது கட்டி விட்டகதையா இருக்கும்.

முத்: பொய்யல்ல சாந்தா, நிஜமாத்தான். உயரே வானத்திலே பருந்தா பறந்துக் கிட்டு இருந்தான். திடீருன்னு சாக்கடையிலே விழுந்துட்டான். நம்ம வீட்டிலயும் ஒரு டாக்டர் இருக்கான்னு பெருமையா நினைச்சிக்கிட்டு இருந்தேன். அவன் விஷத்தை குடிக்க ஆரம்பிச்சுட்டான்.

சாந்: அப்படின்னு அவரைக் கூப்பிட்டு நல்ல தனமா சொல்லிப் பாருங்களேன்

முத்: அதெல்லாம் நல்லா இருக்காது. இப்பவாவது பயந்து குடிக்கிருன். அப்புறம் பயப்படாம குடிக்கச் சொல்லும்.

சாந்: நிலமை இவ்வளவு தூரம் மோசமா போன பிறகு வருத்தப்பட்டு என்ன பிரயோஜனம். சீக்கிரம் ஏதாவது செய்யப் பாருங்க.

முத்: அதையும் செய்துட்டுத்தான் வந்திருக்கேன்.

சாந்: என்ன செய்திருக்கீங்க. ஏதாவது கண்டிச்சி லெட்டர் எழுதி யிருக்கீங்களா?

முத்: கருங்கல்ல உடைக்க உளி சம்மட்டியால அடிக்கலாம். ஆனு கண்ணுடிய அறுக்க அதையே உபயோகிக்க முடியுமா?

சாந்: கொஞ்சம் விபரமாச் சொல்லுங்க.

முத்: பொறுப்பில்லாம இந்த மாதிரி பையன்களை திருத்த பொறுப்பை ஒப்படைக்கிறதுதான் நல்லதுன்னு நினைக்கிறேன். இரும்புப் பெட்டி சாவியை அவன்கிட்டயே கொடுக்கப் போறேன்.

சாந்: அதுக்கு உங்க தம்பி ஒத்துக்கிடுவாருன்னு எப்படி தெரியும்?

முத்: அதுக்காகத்தான் அவனை உடனே வரச்சொல்லி தந்தி கொடுத்திருக்கேன்.

சாந்: தந்தியா? என்ன காரியம் செய்தீங்க? அது ரொம்ப பயந்த பிள்ளையாச்சே? என்னமோ ஏதோன்னு பதறிப் போயிருவாங்களே. (ராஜு ராமய்யா டாக்டர் வர) பார்த்தீங்களா நான் நினைச்சபடியே ஆச்சி. அவங்களே வந்துட்டாங்க.

[மூவரும் வந்து]

ராமை: அண்ணு உடம்புக்கு என்னண்ணு...

ராஜ: டாக்டர் டாக்டர் அண்ணுவுக்கு என்னன்னு பாருங்க டாக்டர். இவர்தான் எங்க புரோபசர் டாக்டர் அருணுசலம். அதிக உபத்திரவம் இல்லாம பாருங்க டாக்டர்.

முத்: எனக்கு ஒண்ணுமில்லே டாக்டர்.

டாக்: பரவாயில்லே உட்காருங்கள்...

முத்: எனக்கு உடம்புக்கு ஒண்ணுமில்லே டாக்டர் சும்மா தான் தந்தி கொடுத்தேன்...

0 0 0

[சமையலறையில்]

சாந்: என்னம்மா! உடம்புக்கு சரியில்லாத நேரத்திலே இந்த வேலே எல்லாம் செய்யிறீங்க?

தாரா: என்னம்மா. எப்பப் பார்த்தாலும் இப்படியே சொல்றீங்க?

மங்: பார்த்தீங்களா எப்பவுமே நம்மை வேலே செய்ய விடுவதில்லே.( சாமானேக் கொட்டுகிருள்)

சாந்: பார்த்தியா மங்களம். என்ன அவசரம்? வீணப் போச்சே. இதுக்காகத்தான் வரவேண்டாங்கிறது.

மங்: அப்படின்னு எங்களுக்கு சமையல் செய்து பழக்கமில்லேன்னு சொல்றீங்களா. எல்லாருக்கும் கேட்கட்டுமுன்னுதான இப்படி பெலமா பேசுறீங்க. இங்க அடுப்பு பெரிசா இருந்தாலும் கணக்குப் பிள்ளே வீட்டிலே அடுப்பு சின்னதாகவாவது இருக்கும்.

சாந்: என்ன மங்களம் என்ன என்னமோ பேசுறயே! என்ன சொல்லீட்டேன்?

மங்: எல்லாத்துக்கும் நீங்கன்னு நாங்க எதுக்கு இருக்கோம்!

சாந்: எப்பவுமே நீ இந்த வீட்டுக்கு ஒரு அலாதியான பெண்ணுதாம்மா.

[இருவரும் தனியே]

மங்: பார்த்தீங்களாமா அவங்க பிள்ளேயையும் கிள்ளிவிட்டு தொட்டிலேயும் ஆட்டுறதை! அவங்கதான் தலே மருமகள். எல்லாம் அவங்கதான் செய்யணும். நாம எதுக்குங்கிற அலட்சியம்.

தாரா: என்னதான் இருந்தாலும் நீ இப்படி படபடன்னு பேசுறது நல்லா இல்லே.

மங்: நல்லா இருக்கு நீங்க சொல்றது. அதைப்பற்றி எனக்கு கவலேயில்ல. என்னேத்தான் எதிலும் சேர்க்கலேனுலும் உங்களே யாவது இதில எல்லாம் கலந்துக்கிட விடக்கூடாதா!

தாரா: சாந்தா அக்காவ கண்டபடி திட்டாதே மங்களம். அவங்க நம்ம மேல எவ்வளவு அன்பு வச்சிருக்காங்க? உனக்குக் கொஞ்சம் கூடத் தெரியலியே.

மங்: உங்களுக்கு எங்க புரியும்? ஒரு வீட்டுக்கு எல்லோரும் ஒண்ணு வந்தவங்கதான? நகை நட்டை எல்லாம் ஏன் மறைச்சு

வைக்கணும்? நான்தான் இல்லாத வீட்டுப் பொண்ணு. எங்கிட்ட கொடுக்க வேண்டாம். நீங்க பணக்கார வீட்டுப் பொண்ணுதான உங்ககிட்டயாவது கொடுக்கக்கூடாது?

தாரா: மங்களம். நான் உன்னே என்னமோன்னு நினைச்சேன். நிஜமா சொல்றேன். உன் நாக்குல விஷம்தான் இருக்கு.

0 0 0

முத்: என்ன டாக்டர் எனக்கு என்ன ரத்தக் கொதிப்பா?

டாக்: மனோ வியாதி யிருக்கிறதுனால நீங்க கொஞ்சம் ரெஸ்டு எடுத்தா சரியாப் போகும்.

முத்: ராஜய்யா ராமய்யா போல தம்பிகள் இருக்கும்போது எனக்கு எதுக்கு மனோ வியாதி வரப்போகுது.

ராஜ: ஆமா சார். தம்பிக்குடையான் படைக்கு அஞ்சான்னு அண்ணு அடிக்கடி சொல்வாரு. சரி வாங்கண்ணு சாப்பிடப் போக லாம்.

0 0 0

[சாப்பிடும் போது]

முத்: நீங்க எனக்கு ரத்தக் கொதிப்புன்னு சொன்னவுடனே தம்பி முகம் வாடிப் போச்சி.

டாக்: அதனால ஒண்ணுமில்ல. நீங்க கொஞ்ச காலம் கடையை யாரையாவது கவனிக்கச் சொல்லீட்டு ரெஸ்டு எடுத்தீங்கன்னு சரியாப் போகும்.

முத்: அதனாலதான் தந்தி கொடுத்து தம்பிகளே வரவழைச் சேன். எனக்கும் வயசாகிருச்சி. என்னால இருபத்தி நாலு மணி நேரமும் கடையில உட்கார்ந்து வேலைபார்க்க முடியல. அதனால நீங்க கடையைப் பார்த்துக்கிட்டு என்னே வீட்டிலயே இருக்க விட்டா...

ராஜ: ஏன் அண்ணு திடீருன்னு இப்படி சொல்றீங்க? எனக்கு ஒண்ணும் புரியலியே. ஏண்ணு உங்க செய்கையிலே எங்களுக்கு அவநம்பிக்கை விழுந்துருச்சின்னு சந்தேகிக்கிறீங்களா?

முத்: அதெல்லாம் ஒண்ணுமில்லப்பா. நான் உயிரோட இருக்கும் போதே இந்த ஏற்பாட்டை செய்துட்டா நல்லது பாரு. அதனாலதான் கடையை உன்கிட்டயே ஒப்படைக்கலாமுன்னு நினைக்கிறேன்.

ராஜ: என்னண்ணு! உங்களுக்கு என்ன அறுபது வயசுக்கு மேலயா ஆகிப்போச்சி! ஏன் இப்படி பேசுறீங்க. இருந்தாலும் எனக்கு வயசுல மூத்த ராமையா அண்ணு இருக்கும்போது அவர் கிட்டதான் கொடுக்கணும் அதுதான் நல்லது.

டாக்: ஆமா முத்தையா சார். ராஜய்யாவும் டாக்டருக்கு படிக்கிறுன். கூடிய சீக்கிரம் டாக்டராகப் போறுன் அதையேன் கெடுக்கணும்?

முத்: சரி டாக்டர். நாளையில இருந்து கடை பொறுப்பை ராமையாகிட்டயே ஒப்படைச்சிருறேன்.

ராஜ: ஆமாண்ணு அது தான் சரி.

முத்: என்ன ராமு?

ராம: நீங்களே முடிவு கட்டும்போது நான் என்ன சொல்ல முடியும்?

முத்: அப்ப நாளையில இருந்து நான் இங்கேயே இருந்து றேன். நீயே மெட்ராஸ் போயி கடைப் பொறுப்பைப் பார்த்துக்க. எல்லோரும் எப்பவும் இது போலவே இருந்தா அதுவே போதும்.

0 0 0

[டாக்டர் செல்லும்போது]

டாக்: மிஸ்டர் முத்தையா நான் வர்றேன்.

முத்: டாக்டர். நீங்க அடிக்கடி இங்கவரணும்.

டாக்: டாக்டர்கள் அடிக்கடி வரக்கூடாதுங்க!

முத்: நோயாளியை பார்க்கத்தான் வரணுமா? விருந்தாளி யாக் கூட வரக்கூடாதா?

டாக்: அப்படி சொல்லாதீங்க நீங்க காட்ற அன்புக்காகவா வது நான் அவசியம் இன்னெரு தடவை வர்றேன். இந்த மாதிரி குடும்பம் ஒற்றுமையா இருந்தா வியாதியே வராது. இருக்கிற வியாதி யும் கூட பாதி குறைஞ்சிரும். ராஜு நீ வர்றயா?

சிவ: தம்பியை அப்புறம் அனுப்பி வைக்கிறேம்.

முத்: டாக்டர் ராஜு நாளை வருவான்.

டாக்: சரி நான் வர்றேன் நான் வர்றேன்...

0 0

[ராஜய்யா மங்களத்திடம் வந்து]

ராஜ: ஏன் இப்படி இருக்க?

மங்: எப்படி இருக்கேன்?

ராஜ: கொஞ்சநேரம் முன்ன நல்லா இருந்தயே. இப்ப தலையை விரிச்சிப் போட்டுக்கிட்டு இருக்கயே! பேயா?

மங்: ஆமா! உங்களுக்கு என்னைப் பார்த்தா பேய் மாதிரியாவா தெரியுது? இருக்கும்...இருக்கும்.

ராஜ: ஏன் அமர்க்களம் பண்ற? உடம்புக்கு ஏதாவது சரி யில்லையா?

மங்: உடம்புக்கு என்ன கேடு? எங்க உடம்புக்கு எப்படி இருந்தா என்ன? உங்க அண்ணனுக்கு ஒண்ணுன்க முன்ன பட்டணத்தில இருந்து ஸ்பெஷல் டாகடரை கூட்டியாந்து வீட்டையே அமர்க்களப் படுத்தீட்டீங்களே!

ராஜ: என்ன சொன்ன? நீ அவ்வளவு பொறுமைக் காரியா நீ? மங்கிப் போன இந்த குடும்பத்தை இவ்வளவு நல்ல நிலைமைக்கு கொண்டுவர எங்க அண்ணன் எவ்வளவு பாடுபட்டாருன்னு தெரிஞ்சா நீ இந்த மாதிரி பேசமாட்ட. இனிமேல இந்த மாதிரி ஏதாவது பேசின இந்த வீட்டிலே கொலேதான் நடக்கும்.

மங்: ஆமா! அப்படியாவது என்னைக் கொலே பண்ணீட்டு போங்க வேற நல்ல பெண்ணுப் பார்த்து கலியாணம் பண்ணிக்கங்க. ஆனு அந்த லதாவை மட்டும் இடையில வரவேண்டாமுன்னு சொல்ல மறந்திராதீங்க. என்ன மாதிரி அவளேயும் தவிக்க விடாதீங்க.

ராஜ: இந்தா இனி தெரிஞ்சிக்க. இந்த வீட்டில அண்ணனும் அண்ணியும் தெய்வம். அவங்களுக்கு அடங்கிதான் நடக்கணும். அதுக்கு சம்மத மானு இங்க இரு. இல்லேன்னு உங்கப்பன் வீட்டுக்கு போயிரு.

மங்: ஏன் போகணும் நான் ஏன் போகணும் நானும் இந்த வீட்டுக்கு ஒரு மருமகள் தான். உங்கண்ணு என்னே நிச்சயம் பண்ண வந்த போதே சொல்லியிருக்கார் இங்க நாலுபேருக்கும் பொதுவுன்னு. அப்படி இருக்க நான் மட்டும் எதுக்கு போகணும்.

ராஜ: நீயேன் போற நீ போக வேண்டாம் நான் போறேன். இந்த வீட்டில இன்பத்தை கெடுத்து இடிச்சி தூள் தூளாக்கிக்கிட்டு ஆனந்தமா இரு நான் போறேன். மங்களமுன்னு ஒருத்தி இருந்தா. அவமாண்டு மண்ணோடு மண்ணு போயிட்டான்னு நினேச்சிக்கிட்டு நான் போறேன்.

[கீழே இறங்கி வர எதிரே சாந்தா குறுக்கிட]

ராஜ: அண்ணி...அண்ணி......இந்த அக்ரமக்காரியை ஏன் எனக்கு கலியாணம் பண்ணி வச்சீங்க, உலகத்தில அண்ணியா என்ன ஆனந்தமா அன்போட வளர்த்து ஏன் இந்த பாழும் கிணற்றிலே தள்ளுனீங்க. கிளிபோல வளர்த்து என்னே ஏன் இந்த பூனே கையிலே கொடுத்தீங்க?

சாங்: ஏன் இப்படி பேசுறீங்க. ஏன் உளர்றீங்க?

ராஜ: அண்ணி. அவளோட வாழ எனக்கு பிடிக்காது நான் போறேன்.

சாங்: இது என்ன பேச்சு. மங்களம் மனசை நீங்க புரிஞ்சிக்கிடல. நீங்க ரெண்டு பேரும் சுகமா இருக்க நான் உதவி செய்யிறேன்.

ராஜ: வேண்டாம். நான் அறுபதடி வேங்கையை மணந்தாவது ஆனந்தமாக இருப்பேன். இந்த அக்ரமக்காரியோடு அரை நிமிடம் என்னால் வாழ முடியாது. மங்களம் இல்லாத இடத்திலே நான் மங்களமாக வாழ்வேன்.

சாங்: அப்படி இப்படி ஒன்னும் நினைக்காதீங்க அவளும் அறியா குழந்தை தான?

ராஜ: அவளா அறியாத குழந்தை. அவ எல்லாம் நல்லா அறிந்தவா. உங்களை இந்தக் கையிலேவாங்கி அந்தக் கையிலே விட்டுருவா. அண்ணி. அவ இந்த வீட்டுல இருக்கிறது பாம்புக்கு பால் வார்த்த மாதிரிதான். அண்ணி...நான் கடைசியா சொல்றேன். நான் கடைசியா சொல்றேன். அவ இந்த வீட்டுல இருக்கிற வரை நான் இந்த வீட்டுல காலடி வைக்க மாட்டேன்.

(போகிறான்)

0 0

(சிவகாமி ராமாயணம் படிக்க)

சிவ: இப்படியாகத் தானே அந்த கும்பகர்ணனனவன் கும்பகர்ணனனவன் கண் மூடித் தூங்கும் போது கண் மூடி தூங்கும் போது.

முத்: அத்தை நேற்று இந்த இடம் படிக்கும் போதுதான முதல் கொட்டாவியே விட்டோம்?

சிவ: கும்பகர்ணன் தூங்கும்போது இடி இடித்தும் மேல் லோகம் அதல பாதாளத்தில் விழுந்தாலும் அவன் தூக்கத்தை கலைக்கவே முடியாது. இப்படி அவன் தூங்கிக் கொண்டிருக்கும் போது ராவணனனவன் அவன் தூக்கத்தைக் கலைக்க என்ன என்னமோ எல்லாம் செய்து பார்த்தும் அவன் தூக்கத்தை கலைக்க முடியே வில்லை. அவனும் கடைசியில் தூங்கியே விட்டான்.

[சிவகாமியும் தூங்க அங்கு வந்த லதா]

லதா: ஓ...என்ன இது? இஞ்சின் விளையாட்டு விளையாடு றீங்களா? என்ன இது? கும்பகர்ணன் படலம்? நல்லா இருக்கு நீங்க ராமாயணம் படிக்கிற லட்சணம் அத்தான்...அத்தான். கும்பகர்ண அத்தான். நல்லா இருக்கு. யானையை விட்டு கத்தச் சொன்னாத் தான் எழும்புவார் போலிருக்கு. (காதை குடைய)

முத்: என்னம்மா இது? பயந்தே போயிட்டேன்.

சிவ: என்னடி இதெல்லாம்?

லதா: இதா ராமாயாணம். பால காண்டம்.

சிவ: உனக்கு வர வர வாலு நீண்டு போச்சி.

லதா: வாலு எனக்கு இல்ல ஹனுமானுக்கு.

முத்: ஆமா ஹனுமாருக்கு வாலு நீண்டு போச்சி உனக்கு வாயி நீண்டு போச்சி.

லதா: அத்தை வாயை திற!

சிவ: என்னடி அது?

லதா: மருந்து சாப்பிட.

சிவ: அந்த மருந்து எட்டிக்காயா கசக்குமே.

லதா: கசக்குதா! அப்ப கருப்பட்டியிலே கலந்து தரட்டுமா?

சிவ: கொண்டாடி!

லதா: ஆசை. மரியாதையா வாயை திறக்கிறயா இல்ல பாலாடை கொண்டு வரட்டுமா?

சிவ: ஐயோ உன் கையிலே வந்து அகப்பட்டுக்கிட்டேனே ஊற்றி தொலே.

லதா: ஹீம் இதையும் சாப்பிடுங்க.

0 0

(கண்ணப்பர் காசி செல்லும் போது ரயிலடியில்)

தாரா: அப்பா.

ஜீவா: என்ன தாரா அழுதுக்கிட்டு இருக்க. அப்பா காசிக்கு ஜட்ஜா தான போகப் போறாரு?

தாரா: எப்பப்பா திரும்ப வருவீங்க?

கண்: அடுத்த கோடை விடுமுறைக்கு நிச்சயம் வந்துரு வேன்.

தாரா: அவ்வளவு நாள் ஆகுமா?

கண்: என்ன தாரா நீ? உனக்கு திருமணம் எப்ப ஆகிட் டதோ அப்பவே அப்பாவை மறந்துறணும்.

முத்: மாமா! எங்களுக்கு முக்கியமான நேரத்திலே எல்லாம் நீங்கதான் இருந்தீங்க எங்களுக்கு உதவியா நீங்களும் புறப்பட்டுட் டீங்களே!

கண்: என்ன நீயுமா இப்படி பேசுறே! அதுதான் ஜீவா இருக் கானே அவன் உங்களுக்கு வேண்டியதை செய்வான்.

ஜீவா: அப்பா! டயம் ஆச்சி.

0 0 0

[சின்னையா தூங்க லதா வந்து]

லதா: சரிதான். தூங்கபோகும்போது அதிகம் சாப்பிடக் கூடாதுன்னு இதுக்குத்தான் சொல்வாங்க போலிருக்கு. ஹாம்

எழுந்திரு. ஹூம் என்ன இன்னும் காப்பி சாப்பிடலியா? ஒழுங்கா சாப்பிடுறயா அக்காவ கூப்பிடட்டுமா?

சின்: யேய் பேசாம போகமாட்ட. (மையை காப்பி என்று குடிக்கிறான்)

லதா: யேய்...யேய்...யேய்...இந்தா மறுபடி தூக்கமா... மணி பனிரெண்டு ஆச்சி...இந்தா பல் விளக்கு.

சின்: நீ போயி தொலையேன் நான் பல்லு துலக்கிக்கிடுறேன்.

லதா: அதெல்லாம் முடியாது என் எதிரிலேதான் பல் துலக்கணும்.

சின்: (பல்துலக்க)

லதா: ஐயோ! உன் மூஞ்சியை கண்ணாடியில பாரு...

சின்: ஐயோ...ஐயோ...ஐயோ...

(மங்களம் பார்க்க தாரா சிரிக்க)

மங்: என்னக்கா சிரிக்கிறீங்க. நல்லா இருக்கே நாடகம் தாலி அறுத்தவ கோயில்மாடு மாதிரி வயசு பையன் கூட அலையிறதா? இதைப்பற்றி என்ன சொல்றீங்க.

தாரா: ஏது நீ பழைய காலத்து பத்தாம் பசலியா இருக்கயே. இது எல்லாம் விளையாட்டுக்குத்தான.

மங்: என்ன விளையாட்டு. கொஞ்சம்கூட மான வெட்கம் வேண்டாம் நீங்களும் பாருங்க. இப்படி இருந்தா உருப்பட மாட்டா.

தாரா: அப்படியெல்லாம் சொல்லாதே மங்களம்.

0 0 0

[தாரா துணிமணிகளை மடிக்க]

மங்: என்னக்கா தனியா மடிக்கிறீங்க? என்கிட்ட கொஞ்சம் சொல்லக்கூடாது?

தாரா: பரவாயில்லே. இது என்ன பெரிய வேலையா?

மங்: இப்ப பிறந்த வீட்டுக்குப் போறீங்களே அக்கா அங்க போனா ரொம்ப நாள் தங்கிராதீங்க அக்கா அதுக்குள்ள இங்கே எல்லாம் கொள்ளை போயிரும்?

தாரா: கொள்ளையா? எது போயிரும்?

மங்: எல்லாம்தான். இங்க பாரு அக்கா! என் வீட்டுக்காரர் என்ன சொன்னார் தெரியுமா? அவங்க அண்ணனுக்கும் அண்ணிக்கும் தான் நாம அடங்கி நடக்கணுமாம். அவங்க காலால இட்ட வேலையை நாம தலையால செய்யணுமாம்.

தாரா: என்ன? என்ன? அப்படியா சொன்னாரு? ஏன் இந்த வீட்டிலே நமக்கும் உரிமை இல்லையா?

மங்: நல்லாக் கேட்டீங்க போங்க. இதைக் கேட்டதுக்குத் தான் எங்க வீட்டுக்காரருக்கு கோபம் வந்து நீங்க இந்த வீட்டிலே வேணுமுன்னு எங்க அண்ணிக்கு அடிமையாய்தான் இருக்கணு முன்னு சொல்லீட்டுப் போயிட்டாரு. உங்க வீட்டுக்காரரு புத்திசாலி தான். இருந்தாலும் இன்னொருத்தர் தயவிலே இருந்துவிட்டு இவர் ஏன் கஷ்டப் படணும்?

தாரா: உண்மைதான் மங்களம். நீ சொல்றதுக்கும் அர்த்தம் இருக்கு. ஆனா...

மங்: ஆனுவாவது ஆவாவது. உங்களுக்கு ஒண்ணுமே தெரி யல அக்கா. வியாபாரததை எல்லாம் அவர் தலைமேல கட்டிட்டு அவர் பெரியவரு என்ன செய்யிருரு தெரியுமா? வேளா வேளைக்கு சாப்பிட்டுட்டு ஹயா சுத்திக்கிட்டு வர்ருரு.

தாரா: அய்யய்யோ ரயிலுக்கு நேரமாச்சே! இன்னம் இந்த சின்னையாவை காணமே?

மங்: சின்னையாதானே? அது எங்கே இங்கே வரப்போகுது. அந்தக் குட்டி லதாவோட தோட்டத்திலே கும்மாளம் கொட்டிக் கிட்டு இருக்கும்.

0 0 0

[சின்னயா பட்டம் விட்டுக்கொண்டிருக்க லதா வந்து பாடு கிருள்]

"கோழியெல்லாம்" பாட்டு.

[பாடி முடிய]

சின்: என்ன இது பொழுது விடிஞ்சி பொழுது போனு உன்னோட பெரிய தொந்தரவாவுல போச்சி. ஒழுங்கா போறயா இல்லையா?

லதா: பின்ன என்ன பட்டம் விடுறதுதான் பெரிசா? தாரா அக்கா ஊருக்கு போருங்க கூட போகவேண்டாம்!

சின்: என்னுல போக முடியாது.

லதா: முடியாதா?

0 0 0

மங்: (தாரா வர) தாரா! என்னடி இது தலையிலே ரோஜா பூவு இருக்குதே?

லதா: அதுவா? உங்க சின்ன மச்சானுககு இஷ்டமான புஸ்பம். அதை நான் பறிச்சிக்கிட்டு வந்துட்டேன். என்ன எங்க புறப்பட்டுட்டீங்க?

தாரா: ஏன் உனக்குத் தெரியாது? நான் மெட்ருஸ் போகப் போறேன்.

லதா: அதுக்காகத்தான் உங்க குட்டி மச்சானை கூப்பிட்டேன். அவர் வரமுடியாதுன்னு சொல்லிட்டாரு.

தாரா: என்ன அப்படியா சொன்னரு?

லதா: ஆமா! நான் என்ன பொய்யா சொல்றேன்.

தாரா: அப்ப நானே நேரிலே போயி கூப்பிடுறேன்.

லதா: ஆமா இப்பவே போங்க. இல்ல வேற எங்கயாவது போயிற போகுது. (போக)

மங்: என்ன அக்கா அவ பூ வச்சிருக்கிற அழகைப் பார்த்தியா? கலியாணப் பொண்ணாட்டம். இதுக்குத்தான் நான் அப்பவே சொன்னேன். பாம்ப முட்டையிலேயே நசுக்கணும். புலியை குட்டியிலயே கொல்லணுமுன்னு. ஒருவேளை இவளே சின்னய்யாவை வரவேண்டாமுன்னு சொல்லியிருப்பா!

தாரா: இருக்கட்டும் இருக்கட்டும். அந்த சின்னையாவை போயி வர்றயான்னு கேட்கிறேன். வரமாட்டேன்னு மட்டும் சொல்லட்டும் இதுக்கு எல்லாம் முடிவு கட்டுறேன்.

0 0 0

[சின்னையா பட்டம் விட அங்கு சென்ற தாராவும் மங்களமும்]

தாரா: சின்னையா ரயிலுக்கு நேரமாச்சி வர்றயா இல்லையா?

சின்: உங்ககூட ஊருக்கு வர எனக்கு நேரம் இல்ல.

மங்: லதாகிட்ட விளையாட மட்டும் நேரம் இருக்கோ?

சின்: அண்ணி! அனுவசியமா பேசவேண்டாம். நாளைக்கு பட்டம் பந்தயம் விடப்போறுங்க. அதனால எனக்கு வேலை இருக்கு என்னால ஊருக்கு வரமுடியாது.

தாரா: உங்க அண்ணிகிட்ட சொல்லட்டுமா?

சின்ன: யார்கிட்ட வேணுமானாலும் சொல்லுங்களேன். எனக்கு என்ன பயமா? வரமுடியாதுன்ன முடியாது.

0 0 0

[சாந்தா கண்மணி அழ]

சாந்: டேய் என்னடா இது அக்ரமம் பண்ற? பேசாம இருக்கமாட்ட?

கண்: பாரம்மா சித்தி என் பூவை வச்சிக்கிட்டு தரமாட்டேங்குது.

லதா: டேய் நான் உன் செடியிலயா பிடுங்கினேன். நான் உன் சின்னையா செடியிலே பிடுங்குனேன்.

சாந்: நீ அந்த பூவை வச்சிக்கிட்டு என்னடா பண்ணப்போற பிச்சிப் போட்டுருவ.

கண்: எனக்கு அதான் வேணும்.

மங்: என்ன இது. அந்தக் குழந்தை அப்ப இருந்து அழுவுது இந்த சின்னேயா பூவ அந்த குழந்தைகிட்ட கொடுக்காம இந்த லதா கிட்ட கொடுத்திருச்சே. இது பெரிய அநியாயமில்ல?

சாந்: போதும் மங்களம். இந்த வீட்டுல பெரியவங்க யாரும் அநியாயம் செய்ய மாட்டாங்க. இதெல்லாம் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்க வேண்டாம். போடா! போயி பாடத்தைப் படிடா.

தாரா: என்ன இது அப்படி சொல்லீட்டீங்க. அது என்ன ஏதுன்னு கேட்காம இப்படி சொல்றீங்களே! நாங்க என்ன சொன்னாலும் கேட்கக்கூடாதுன்னு நீங்களே சொல்லி வச்சிருக் கிங்களா?

சாந்: தாரா! சண்டை போடணுமுன்னே ரெண்டுபேரும் சமையல் கட்டுக்கு வந்தீங்களா?

தாரா: நாங்களும் போகுது போகுதுன்னு பார்த்தா விரட்டு றீங்களே! ஆமா நாங்க சமையல் கட்டுக்கு வந்தா விரட்டுறீங்களே அதுதான் ஏன்னு கேட்கிறேன்.

லதா: இது தெரியாதா? நீங்க சமையல் கட்டுக்கு வந்தா உங்களுக்கு வாந்தி வந்துருமே? அப்புறம் ஒரே அமர்க்களம்தான்.

தாரா: அட சீ வாயை மூடு. உன்னே யாரு கேட்டது?

சாந்: தாரா! இது என்ன கொஞ்சம் காப்பி சாப்பிட்டுட்டுப் போம்மா!

தாரா: நாங்க இங்க காபி சாப்பிட வரல.

சாந்: அப்ப உங்க ரூம்புக்குப் போங்க.

தாரா: நாங்க ரூம்புக்குப் போகப் போறதில்ல. நாங்க வேலே பார்க்க பிடிக்காத மாதிரி நீங்கதான் கஷ்டப்படுறதா காட் டிக்கிடதான அந்த வேஷம் எல்லாம். அத்தைதான் அப்படி பேசு றுங்கன்னு அந்த சின்னய்யாவுமா அப்படிப் பேசணும். என்னே ஊருக்கு கூட்டிப் போககூட வராதாமுல்ல.

சாந்தா: இதுக்குத்தானு இந்த அமர்க்களம். சின்னத்தம்பி அழைச்சிட்டுப் போகலேன்னு இன்னேக்கு வேண்டாம். நாளே பெரியவரையே அழைச்சிட்டுப் போகச் சொல்றேன்.

தாரா: அதெல்லாம் முடியாது. நான் இன்னேக்கே போயாக ணும். நான் ஒன்றும் படிக்காதவ இல்ல. நானும் படிச்சவதான் நானே தனியா போறேன்.

சாந்: தாரா! இதுவரை இங்கு எங்கும் பெண்கள் தனியாகவே போனதில்லே. உனக்கு ஏம்மா இந்தக் கவலே. நீ பேசாம இரு எல்லாத்துக்கும் நானே ஏற்பாடு பண்றேன்.

மங்: பின்ன என்ன? அவங்கதான் சொல்லீட்டாங்களே. அவங்களா எப்ப இஷ்டப்பட்டு போகச் சொல்ருங்களோ அப்பதான் போகணும்.

தாரா: என் இஷ்டப்படிதான் நான் போவேன். என் இஷ்டம்போலதான் நடப்பேன்.

சாந்: தாரா! இன்னைக்கு என்ன அளவு மீறிப் பேசுறயே. உனக்கு புத்தி கித்தி மீறிப் போச்சா?

தாரா: எனக்கு புத்தி சரியாதான் இருக்கு. அவங்க அவங்க செய்யிற தப்பு அவங்க அவங்களுக்குத் தெரியாது.

லதா: அண்ணி! நீங்க சும்மா போங்கண்ணி. விடுதலை விடுதலை...விடுதலை. ஆண்களோடு பெண்களும் சரிசமானமாகத்தான் வாழணும். நீங்க சும்மா போங்க அண்ணி...

தாரா: சீ வாயை மூடு. முந்திரிக் கொட்டை மாதிரி முந்திக் கிடுறயே?

சாந்: தாரா! என்ன பேசுற? அவ தப்பா என்ன சொன்ன? விளையாட்டுக்குத்தான சொன்ன?

தாரா: அவ செய்யிற தப்பைக் கண்டிக்கிறதில்லை நீங்க. எங்கள மட்டும் கண்டிக்க வந்து விடுறீங்க.

சாந்: அவ என்ன தப்பு செய்தா?

தாரா: அதுதான் அவளுக்கு கலியாணம் செய்யிற வயசாகிப் போச்சி அவளுக்கு வயசுப் பையன்கிட்ட என்ன விளையாட்டு? அறுந்து போனவ. புருஷனை பறிகொடுத்தவ. விதவை. மூலையிலே முடங்கிக் கிடக்கவேண்டியவ. விதியை நினைச்சு நோக வேண்டியவளுக்கு பொட்டு எதுக்கு பூவு எதுக்கு?

சாந்: தாரா போதும்...போதும்...

தாரா: ஊருக்கு உபதேசம் செய்யுமாம் பல்லி. கழனிப் பானையில் விழுமாம் துள்ளி. அந்த கழுதை போல. எங்களுக்கு உபதேசம் செய்யிற மாதிரி உங்க தங்கச்சியையும் கண்டிக்காதது ஏன்? நாங்க தனியா ஊருக்கு போக சம்மதிக்காத நீங்க உங்க தங்கச்சியை மட்டும் எப்படி ஒரு வயசு பையன்கூட சுத்தவிடலாம்? தங்கச்சிங்கிற பாசத்தினலா? இல்ல தட்டிக் கேட்க ஆள் இல்லேங்கிற தைரியத்தினலா?

[சாந்தா மௌனமாக இருக்க போகிருள்]

0 0 0

[முருகன் சாப்பாட்டை திரும்ப கொண்டு வர]

முரு: அம்மா...அம்மா...

சாந்: என்ன முருகா?

முரு: தாரா அம்மா சாப்பாடு வேண்டாமுன்னு திரும்ப அனுப்பிச்சிட்டாங்க.

சாந்: முருகா! மறுபடியும் நான் சொன்னேன்னு கர்ப்பிணி பட்டினியா இருக்கக் கூடாதுன்னு சொல்லி கொடுத்துட்டு வா. அப்படியே லதாவை வரச்சொல்லுங்க.

0 0 0

தாரா: ஊருக்குப் போகும்போது எதுக்குன்னு பார்த்தா அக்காளும் தங்கையுமா சேர்ந்து என் வாயை கிளப்பி விட்டுட்டாங்களே!

மங்: பரவாயில்லே அக்கா. மனம்விட்டுப் பேசினுல்தான் மனதிலுள்ள பாரம் குறையுமுன்னு சொல்வாங்க.

[முருகன் சாப்பாடு கொண்டுவர]

தாரா: மறுபடி ஏன் கொண்டு வந்த. நான்தான் சாப்பாடு வேண்டாமுன்னு சொன்னனே?

முரு: கர்ப்பிணியா இருக்கிறவங்க பட்டினியா இருக்ககூடாதுன்னு சொல்ல சொன்னுங்க.

தாரா: சரி. வச்சிட்டுப் போ!

0 0 0

லதா: அக்கா! கூப்பிட்டீங்களாமே?

சாந்: சாப்பிட வாம்மா!

லதா: எனக்கு சாப்பாடு வேண்டாம் இன்னைக்கி நான் விரதம்.

சாந்: என்னடி விளையாடுற (லதா விதவைக் கோலத்தைக் கண்டு) என்னடி இதெல்லாம்?

லதா: இனிமே எனக்கு ஏற்ற வேஷம் இதுதானக்கா...

சாந்: அடி பாவி. உன்னைப் பார்க்க என் கண் கூசுதே! என் எதிரிலே வராதே! போ...போ...

லதா: போறேன் அக்கா போறேன்.

0 0 0

[லதா முத்தய்யா எதிரில் வர]

முத்: லதா! என்னம்மா அநியாயம்? உனக்கு இந்த விபரீதம் யார் சொல்லிக் கொடுத்தது? சாந்தா! இதெல்லாம் என்ன சாந்தா? உன் மூளை என்ன குழம்பிப் போச்சா? இல்ல உன் மனம் கல்லா கிருச்சா? என்ன கொடுமை செய்த? இந்த சின்ன பெண்ணை இப்படி சித்ரவதை செய்ய உனக்கு எப்படி மனசு வந்தது?

சாந்: என்னை அதிகமா ஒண்ணும் கேட்காதீங்க. அவளுக்கு

வயசாகிருச்சி. இனி விளையாடுற வயசு இல்ல. ஆசாரமா இருப்பது தப்பா?

முத்: ஆசாரம்...ஆசாரம்...ஆசாரம்...... உன் ஆசாரத்திலே இடிவிழ. எனக்கு தெரியாத ஆசாரம் எப்படி வந்தது. இதை பார்க்க எனக்கு சகிக்கலியே.

சாந்: இதுதான் இவளைப் போல இருக்கிறவங்க கட்டிக்கிட வேண்டிய புடவை.

முத்: இது இத்தனை நாள் இல்லாம இன்னைக்கு எப்படி வந்தது?

சாந்: இத்தனை நாள்தான் தெரியாம தப்பு செய்தாச்சி... நாம மறந்துட்டோம். நாம மறந்தாலும் தாரா ஞாபகப் படுத்தீட்டா, இனியும் தப்பு செய்யலாமா?

முத்: தாராவாவது மங்களமாவது. இப்ப நல்லா புரியுது. இத்தனை நாளுக்கு அப்புறம் எங்கேயோ அபசகுனம் ஒலிக்குது. எனக்கு என்ன நான் துண்டை உதறி தோள்ல போட்டுட்டு எங்கயும் போறேன். என்னமும் செய்யுங்க.

0 0 0

[மங்களம் தாராவிடம்]

மங்: லதாவாம் லதா......வாழைப்பழத்திலே ஊசி ஏத்றது மாதிரி நம்மள காட்டிக் கொடுத்துட்டாங்களே! பெரியவங்களாம் பெரியவங்க. அவங்களுக்கு வீட்டுக்கு வந்தவங்கள பிடிக்கலேன்னு இப்படியா கண்டபடி பேசுறது?

தாரா: பேசட்டும் பேசட்டும். அவங்களுக்கு மட்டும்தானு வாய் இருக்கு. நான் இப்பவே போயி எங்கண்ணன்கிட்ட சொல்லி இதுக்கு ரெண்டில ஒண்ணு முடிவு கட்டுறேன்.

மங்: எப்ப திரும்பி வருவீங்க?

தாரா: நான் எதுக்கு திரும்பி வர்றேன். எனக்கு என்ன சூடு இல்லையா சொரணை இல்லையா?

[சின்னையா வந்து]

சின்: அண்ணி! என்னை மன்னிச்சிருங்க. ஊருக்குப் போக நான் ரெடி. ஸ்டேசனுக்குப் போக வண்டி ரெடி.

தாரா: சரி நான் வர்றேன்.

0 0 0

[தெருக் கூத்தில்]

"அடியார்கள் உள்ளத்தில்" பாட்டு.

விது: ஆ...பாதர் வெள்ளை எப்படி என்றால் வீராதி வீரன் சூராதி சூரன். கட்டபொம்மனிடம் செல்ல பாதர் வெள்ளை

வெள்ளையம்மாளிடம் விடைபெற்று செல்லும் விதம் காண்க. ஹூம் சீக்கிரம் சீக்கிரம் சீக்கிரம்.

"காகம் பறக்காத" பாட்டு.

பாத: ஆகா! நான் உயிருடன் இருக்க கட்டபொம்மன் கலங்குவதா?

"லங்கை தேசத்துக்கு" பாட்டு.

0 0 0

பாத: வெள்ளையம்மாள்!

வெள்ளை: ஏனய்யா சுவாமி?

பாத: வெள்ளையம்மாள் சீக்கிரம் போருக்கு வரும்படி கட்டபொம்மன் துரையிடம் இருந்து சீட்டு வந்திருக்கிறது.

வெள்: நாதா!

பாத: என்ன?

"போருக்கு போரேண்டி" பாட்டு.

0 0 0

[அஞ்சலா அழுது கொண்டிருக்க]

அஞ்: ஐயோ! நான் என்ன செய்யப் போறேன். என் குடி முழுகிப் போச்சே! நான் என்ன செய்யப் போறேன்.

[பாபு பொன்னுசாமி வர]

பாபு: அம்மா ஏனம்மா அழுவுற நீ. ஏன் அழுவுற?

பொன்: கர்மம்...கர்மம். ஏண்டி வீட்டுக்கு வந்தது வராதது மா ஏண்டி ஒப்பாரி வைக்கிற? ஏண்டி என்ன வேணும்? புடவை வேணுமா சொல்லித் தொலையேன்.

பாபு: அம்மா புடவை வேணுமா? என்கிட்ட புடவை நிறையா இருக்கு நீ கட்டிக்க நான் வேஷ்டியை கட்டிக்கிடுறேன்.

அஞ்: எந்த எளவும் வேண்டாம்.

பொன்: வேற எந்த எளவுக்காக கத்துற?

அஞ்: உன்னப்பறறி எனக்கு தெரியாதா? வயசுல்ல காலத்தில எல்லாம் ஒழுங்கா இருந்துட்டு வயசான காலத்தில இப்படி கத்துறயே.

பொன்: ஏண்டி பல்ல கில்ல உடைச்சி கையில கொடுத்துருவேன்.

அஞ்: என்ன ஒரேதா தாணு தவ்வுற!

பொன்: யேய் கழுத கழுத...யேய்...

அஞ்: எளவு விழுக!

பொன்: ஏய் அந்த வார்த்தய சொல்லாதடி அந்த வார்த்தய சொல்லாதடி.

அஞ்: நீ என்ன செய்வ எளவு விழுக!

பொன்: அந்த வார்த்தையை சொல்லாதடின்னு சொல்லாதடி. உன்ன.

பாபு: ஏய்...அம்மாவ அடிப்பயா நீ?... அடிப்பயா நீ?

அஞ்: என்ன பண்ணுவ நீ வயசுக்குயர்ந்த பிள்ளை என்கிட்ட இருக்கத்தில நீ என்ன பண்ணுவ.

பொன்: கொப்பனுண. டேய் லோகிதாசா உங்கம்மாவை நான் கலியாணம் பண்ணிக்கிட்டேன் பாரு. நான் முட்டாள்டா முட்டாள்டா முட்டாள்டா.

அஞ்: ஐயாவுக்கு துக்கம் தொண்டையை அடைக்குது. மரத்துக்கு மரம் தாவுர குரங்காட்டம் உங்கப்பாவை நான் கலியாணம் பண்ணிக்கிட்டேன் பாரு நான் முட்டாள்டா!

பாபு: இல்ல உங்க ரெண்டு பேருக்கும் நான் மகனு பிறந்தன்ல. நான்தான் முட்டாள். நான்தான் முட்டாள்.

பொன்: டேய் நீயேன்டா கவலைப்படுற?

பாபு: அம்மா உள்ளதை சொல்றயா ஊரை கூட்டி கேட்கட்டுமா?

அஞ்: வரவர அறிவு முதிர்ந்து போகுது. ஆமா எந்த சக்களத்தி இந்த கடுதாசி எழுதினவ?

பொன்: எந்த சக்களத்திடி எழுதினவ?

அஞ்: அதுதான் எந்த சக்களத்தின்னு கேட்கிறேன்.

பொன்: கொண்டாடி இங்க. அவ எழுதிட்டாளோ? உடனே புறப்பட்டு வந்து என்னை அழைச்சிட்டு போகும்படி எழுதியிருக்கா.

அஞ்: ஐயயோ! அந்த கடுதாசி வந்தது போதாதுன்னு நீங்களே சொல்ற அளவுக்கு ஆயிடுச்சா? அவ மட்டும் இங்க வரட்டும். அப்புறம் இந்த வீட்டிலே கொலைதான் நடக்கும்.

பொன்: சீ வாயை மூடுடி. போகுதுன்னு வெறுமனே சும்மா இருந்தா. என் கொழுந்தியா வந்தா கொலைபண்ணீருவயா?

அஞ்: கொழுந்தியாவா? யாரு அந்த கொழுந்தியா?

பொன்: அவதான் என் தம்பி பெண்டாட்டி லதா.

பாபு: லதா...லதா. அம்மா அம்மா சித்தி வர்ரு சித்தி.

அஞ்: இவன் வேற ஒடிஞ்சிக்கிட்டு திரியுருன் ஒடிஞ்சிக்கிட்டு.

0 0 0

[லதாவிடம் முத்தய்யா]

முத்: லதா! உன் அத்தான்கிட்ட இருந்து கடிதம் வந்திருக்கு கூட்டிப் போறேன்னு. இப்போதுதான் நினைவு வந்ததாம்.

லதா: இப்போதாவது வந்ததே அதுவே போதும்.

முத்: எப்போது வந்தா என்ன? அவங்ககூட அனுப்ப முடியாதுன்னுதான சொல்லப் போறேன்.

லதா: வேண்டாம்! நான் போய்விடுகிறேன். தயவு செய்து என்னை அனுப்பி விடுங்கள்.

முத்: உனக்கு இங்க இருக்க இஷ்டம் இல்லையாம்மா?

லதா: அதெல்லாம் ஒண்ணும் இல்ல. சந்தோஷமாகத்தான் இருக்கிறேன். நானே எழுதிவிட்டு எப்படி போகாமல் இருப்பது?

முத்: என்ன நீயே எழுதினயா? உன்னை யார் எழுதச் சொன்னது?

சாம்: யார் என்ன சொல்லிய போதும் அவ என்னைக்கி இருந்தும் போகவேண்டிய இடம் அதுதான?

லதா: என்னை அனுப்பிவிடுங்கள்.

முத்: அனுப்புகிறேனம்மா அனுப்புகிறேன்.

0 0 0

ஜீவா: இனிமேல் உனக்கு என்ன? எல்லாம் நான் கவனித்துக் கொள்கிறேன். முத்தயா அன் பிரதர்ஸ் பதிலா நீயே தனியா ஒரு புது பிஸ்னஸ் ஆரம்பிச்சா என்ன?

தாரா: புது பிஸ்னஸ்ஸா? பணத்துக்கு எங்க போறது?

ஜீவா: முத்தயா அன் பிரதர்ஸ்ஸுலயே பணம் எடுத்துக்கிட்டாப் போகுது.

ராமை: என்ன அங்கேயே பணம் எடுக்கிறதா? அண்ணுவுக்கு தெரிஞ்சா தப்பா நினைக்க மாட்டார்?

ஜீவா: ஒரு குருவிக்குக்கூட தெரியாம மேக்கப் பண்ணலாம். அங்க நீதான மேனேஜர்!

தாரா: இதோ பாருங்க. அண்ணன் சொல்றதுதான் சரின்னு தோணுது. அங்க எடுக்கிற பணத்துக்கு வட்டி கொடுத்துட்டா போகுது.

ஜீவா: பின்ன வட்டி கொடுக்காமலா? அதில கிடைக்கிற லாபத்தை வச்சே சரிப்படுத்திரலாம்.

தாரா: ஆமா நமக்கு லாபம். சிரமமுமில்ல. அண்ணுவுக்கு

ஒரு பவர் பத்திரம் எழுதிக் கொடுங்க. எல்லாம் அவர் சரிப்படுத் திருவாரு!

0 0 0

[முத்தய்யாவிடம் ஜீவா]

ஜீவா: இப்ப பாருங்க. செட்டி வீட்டுகல்ல ஒரு பழக்கம். என்னன்னு கலியாணம் பண்ணின உடனேயே பங்கு பாகம் பிரிச்சி தனிக்குடித்தனம் வச்சிருவாங்க. லண்டன்ல கூட இந்த மெத்தட் டுக்கு ஏகப்பட்ட மதிப்பு இருக்கு.

முத்: எனக்கும் எல்லாம் தெரியும்.

ஜீவா: எல்லாம் தெரிஞ்சுதானு இப்படி அலட்சியமா இருக் கீங்க?

முத்: அலட்சியம் இல்லே. வீசும் புயலே அன்பினுல் அணைத்து விடலாம் என்று நினைத்தேன். அது என் அஸ்திவாரத்தையே தகர்த்து விடும் போல் தெரிகிறது.

ஜீவா: உங்களுக்கு தெரியாதது இல்ல. உண்மையா சொல் றேன். என்னேக்கு தனித்து வாழ விரும்புறுங்களோ அப்பவே சரின்னு விலகிப் போயிடணும். அப்பா இருந்திருந்தா இதைத்தான் சொல்வாரு. அப்புறம் வாக்குவாதம் முற்றி கீழ் கோர்டு மேல் கோர்டு சுப்ரீம் கோர்ட்டு...

முத்: அந்த நிலமைக்கு நான் நிச்சயமாக வளரவிட மாட் டேன். ராமையா பாக பிரிவினேயை விரும்புகிறுன். அவ்வளவு தானே?

ஜீவா: நான் சொன்னதின் சுருக்கமான கருத்து இதுதான்.

முத்: நல்லது. ராமையாவின் விருப்பத்தை அணேபோட்டு தடுக்க நான் விரும்பவில்லே. என் தம்பிகள் இவ்வளவு சீக்கிரத்தில் போவார்கள் என்று நான் நினேக்கவே யில்லே.

ஜீவா: கைக்கு உயர்ந்த பிள்ளேகள் என்றுலே கண்ணுடி பாத் திரம்போல்தான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். உங்கள் குடும்பத்திலே நான் புகுந்து...

முத்: எனக்கு தெரியாதா என்ன நீயே வந்து பாக பிரி வினேயை செய்துவிட்டுப் போ! ஜீவா! ராமையாவிடம் உனக்கு ஏதாவது இடர் என்றுல் உன் தமையன் ஒருவன் தலேகொடுக்க இருக் கிறுன் என்பதை மட்டும் தவறுமல் சொல்ல மறந்து விடாதே!

ஜீவா: அப்ப நான் வருகிறேன்.

0 0 0

[பாகபிரிவினை]

முத்: பட்டணத்திலிருக்கும் முத்தயா அன் பிரதர்ஸ் ஜவுளி கடையை நான்கு பேருக்கும் சொந்தமாக்குகிறேன். இதுவரை அந்தக் கடையை ராமையா கவனித்து வந்தது போல் கவனித்து வந்து வருடா வருடம் இலாப நஷ்ட கணக்குகளை மூவரிடமும் காட்ட வேண்டியது. காஞ்சீபுரத்திலிருக்கும் இந்த பெரிய வீடு அந்த மூவருக்குமே சொந்தம். கிராமத்திலிருக்கும் வீட்டை நான் எடுத்துக் கொள்கிறேன்.

சின்: அண்ணு ஒரு திருத்தம்.

முத்: என்னப்பா?

சின்: நீங்க கிராமத்திலிருக்கும்போது எனக்கு மட்டும் எதுக்கு அந்த வீடு? அதையும் அவங்களே அனுபவிக்கட்டும்.

முத்: அப்படி பேசக்கூடாது. அப்படித்தான் பத்திரத்திலே எழுதியிருக்கு. உனக்கு இருக்க பிடித்தம் இல்லாவிட்டால் என்னுடனேயே இரு.

ஜீவா: அது சரி. அது அது அவரவர்கள் விருப்பத்தைப் பொறுத்தது. ரிஜிஸ்டரார் வேறு கார்த்திருக்கிருர். எனக்கும் லேட்டாகுது. பத்திரத்தைப் படிங்க.

முத்: இனிமேல் படிக்க என்ன இருக்கு? ராஜய்யாவுக்குப் பதிலா மங்களம் தெரிஞ்சிகிட்டது. ராமையாவுக்குப் பதிலா நீ இருக்க. இதோ ஊர் பெரியவங்களும் இருக்காங்க. நாங்க அண்ணன் தம்பிக பூர்வ இஷ்டத்தோடதான் இந்த பாகபிரிவினை செய்துக்கிடுருேம். என்னதான் பாகபிரிவினை நடந்தாலும், நாங்க தனியா இருந்தாலும் எங்க மனசு என்றும் ஒன்ருகத்தான் இருக்கும்.

0 0 0

[சிவகாமி தண்ணீர் இறைக்கும் போது]

சிவ: ஐயோ தலை எழுத்தே! அரண்மனையாட்டம் வீட பிடுங்கிக்கிட்டு இந்த ஓலை குடிசையில வாழும்படி செய்துட்டாங்களே! அவங்க நல்லா இருப்பாங்களா! அவங்க தலையில இடிவிழ.

சாந்: அப்படி எல்லாம் திட்டாதீங்க அவங்க நம்ம பிள்ளைகள் தான. இன்னைக்கு சண்டை போட்டுக்கிடுவாங்க நாளைக்கு கூடிக்கிடுவாங்க. நீங்க போங்க நான் துவைக்கிறேன்.

லதா: வேண்டாம் அக்கா! உங்களால துவைக்க முடியாது. நான் ஆற்றுக்குப் போயி துவைச்சிட்டு வர்றேன். பூஜைக்கு எல்லாம் ரெடியா இருக்கு.

சிவ: ஆமாடி பூஜை பண்ணி பண்ணி என்னத்தை வாரி கட்டப் போறேள்! இத்தனை நாள் பூஜை பண்ணி என்ன பலனைக் கண்டோம்? அவன்கிட்ட கூடத்தான் நியாயம் இல்லையே!

0 0 0

கண்: அப்பா! இந்தப் பாட்டுக்கு அர்த்தம் தெரியுமா?

முத்: தெரியலயேப்பா!

கண்: நான் சொல்லட்டுமா? யானை மேல அம்பாரி கட்டி வாழ்ந்தாலும் ஒரு நாள் தரையிலே நடக்கவேண்டி வந்துரும்.

முத்: இது வெறும் பாட்டு இல்லடா கண்ணு. என் வாழ்க்கை அனுபவம்.

0 0 0

ஜீவா: டேய் கணபதியா பிள்ளையை கூப்பிடு!

ஒரு: அவருதான் இல்லையே!

ஜீவா: எங்கயா போனரு?

ஒரு: அவரு ஒரு மட்டரகமான ஆளுங்க. இங்க நம்ம கம்பெனியிலே இருக்க பிடிக்கல்லேன்னு காசிக்கு போயிருக்காரு.

ஜீவா: காசிக்கு ஏன் போனரு?

ஒரு: இங்க நாம பண்ற பாவத்தை தொலைக்க உங்க அப்பா அங்க இருக்காரா அவரைப் பார்க்க.

ஜீவா: அப்ப முத்தய்யா கம்பெனி பணத்தை ராமையா கம்பெனிக்கு மாற்றலேன்னு சொல்லு.

ஒரு: என்னங்க! அந்த வேலைய நான் பார்க்கிறேன். இப்ப முத்தய்யா கம்பெனியிலே இருக்கிறதோ மூணு லெட்சம். நாம மாற்ற போறதோ ரெண்டு லட்சம். ஏன் மூனறையும் மாத்திட்டா?

ஜீவா: ஆறுமுகம். நீ பலே ஆளப்பா! இனி நீதான் எனக்கு செகரட்டரி!

ஒரு: நீங்க சொல்றபோது நான் மறுக்கப் போறேனு?

ஜீவா: சரி செக் தர்றேன். மாற்றிப்புடு.

0 0 0

சின்: அண்ணு! பட்டணத்திலே இருந்து லெட்டர் வந்திருக்கிறது.

முத்: என்ன (படித்து) ராமு தனியாக வியாபாரம் நடத்துகிறுன், முத்தய்யா அன் கம்பெனி திவாலாகிவிட்டது. (மயக்கமடைய)

சின்: அண்ணு...அண்ணு...அண்ணி அத்தை...

கண்: பாட்டி சீக்கிரம் ஓடிவா. அப்பா விழுந்துட்டாங்க.

சிவ: முத்தையா? என்ன வந்துருச்சி முத்தய்யாவுக்கு?

சின்: இந்த லெட்டரை பாருங்க அண்ணி. ஜீவாவும் ராமையாவும் சேர்ந்து நம்ம கடைய திவாலாக்கிட்டாங்க.

சிவ: அட கொலைகார பாவி. உன் குடும்பம் உருப்படுமா? நீங்க நாசமா போக.

சாந்: என்னம்மா இது தாரா நிறைமாத கர்ப்பமா இருக்கும் போது.

சிவ: ஐயோ! வாய் தவறி சொல்லிட்டனே. தப்பி தவறி அப்படி நடக்காம இருக்கணுமே. இதை மனசால சொல்லல.

சின்: அண்ணி...அத்தை...அண்ணு நீங்க சும்மா இருங்க. நான் இப்பவே பட்டணம் போயி அந்த ஜீவா மேலயும் ராமையா மேலயும் கேஸ் போட்டு கம்பி எண்ண வச்சிட்டு வர்றேன்.

முத்: வேண்டாம். ராமையா நல்லவன். எல்லாம் சந்தர்ப்பம் தான் காரணம். நான் போயிட்டு வர்றேன்.

சாந்: எங்க போறீங்க?

முத்: மெட்ராஸுக்குதான். ஒரு கடை திவாலாகிருச்சின்னு சாமானியமா. கடன் கொடுத்தவங்க எல்லாம் கொதிச்சிப் போயி இருப்பாங்க. அவங்கள எப்படி சமாதானம் பண்றதுன்னுதான் எனக்கு தெரியல.

சாந்: கவலைப்படாதீங்க. கடனை எல்லாம் அடைக்க பணம் தர்றேன்.

முத்: நீயா? உனக்கு ஏது சாந்தா பணம்?

சாந்: அதுதான் நீங்க எனக்கு செய்து போட்டீங்களே அது இந்த நேரத்துக்கு உபயோகப்படலேன்னு வேற எதுக்குதான் இருக்கு?

முத்: சே! உன் நகையை வித்து கடனை அடைக்கிறதா? என்ன பேச்சு சாந்தா இது?

சாந்: வசதியா இருக்கிற நேரத்திலதான் வைரம் கழுத்திலேயும் காதுலயும் இருக்கணும். வறுமை வந்தா வைரம் நெஞ்சிலே தான் இருக்கணும். ம்...லதா நகைகூட என்கிட்டேதான் இருக்கு.

முத்: வேண்டாம் சாந்தா! லதா நகையை எடுக்க வேண்டாம் அத்தை இப்படி ஒரு நிலமை வருமுன்னு நான் கனவிலே கூட நினைச்சது கிடையாது.

சிவ: தலைக்கு மேலே வெள்ளம் வந்தப்புறம் வருத்தப்பட்டு

என்ன செய்யிறது முத்து...ம்...நகையை எல்லாம் கழட்டிட்டு வெறும் கழுத்தோட இருக்கலாம்.

சாந்: மயில் கழுத்துக்கு இல்லாத அழகு இந்த மஞ்சள் கயறு கொடுக்குமுன்னு பெரியவங்க சொல்லியிருக்காங்க. இந்தாங்க நீங்க உற்சாகமா போயிட்டு வாங்க.

முத்: சரி சாந்தா. அத்தை நான் போயிட்டு வர்றேன் தம்பி.

சிவ: இந்தாப்பா இதையும் எடுத்துக்கிட்டுப் போ!

சின்: நானும் துணைக்கு வரட்டுமா அண்ணு.

முத்: எதுக்கப்பா. இந்த கஷ்டகாலத்திலே இது வேற வீண் சிலவு. நான் போயிட்டு வர்றேன்.

0 0

[ராஜய்யா குடிச்சிட்டு ஜீவாவிடம் வந்து]

ராஜய்: ஹலோ! ஸ்ரீமான். மச்சான் நீயா மச்சான். கோபிச்சிக்கிடாதே! நான் வேற ஆள் இல்ல. நான் டாக்டர் ராஜீ. சொல் டாக்டர் ராஜீ.

ஜீவா: டாக்டர் ராஜீ.

ராஜ: எப்படி சௌக்கியமா? நீ மட்டும் சௌக்கியமா இருக்கேன்னு கேள்விப் பட்டேன்.

ஜீவா: என்னடா ராஜீ என் கிட்ட நீ பேசத்தான் வந்தயா?

ராஜ: பேசவா? நாஞ? உன் கிட்ட ஏது? பாட வந்தேன். கவி பாடி பெருமை செய்ய கம்பன் இல்லே. கம்பன் இல்லே. இந்த வம்பன்...ஆசையும் நேசமும் ரத்த பாசத்தினுல் வீங்குவதைப் பாராயடா......

ஜீவா: டேய் என்னடா இது? தண்ணியைப் போட்டுட்டு வந்து கலாட்டாவா செய்ய வந்த?

ராஜ: ஆ........வெறும் தண்ணியில்ல ஜீவா இது...... இது ஜீவாத்தம் சோம பானம்.

ஜீவா: அப்படின்னு? ஐயோ எங்கப்பாவுக்கு தெரிஞ்சா உன் கதி என்ன ஆகும்?

ராஜ: அவர்தான் காசியிலே இருக்காரே! டேய் ஜீவா இன்னைக்குத் தாண்டா தனியா சிக்கிக் கிட்ட. உன்ன ஒரு கை பார்க்கிறேன்.

ஜீவா: என்னது?

ராஜ: பயப்படாதே! ஒரே கை. ஆகா. என்ன கை. நல்ல பாம்பு படமாட்டம். டேய் ஜீவா இந்தக் கைதான எங்க வீட்டு பாக பத்திரத்தை எழுதின கை?

ஜீவா: டேய் நீ டாக்டருக்கு படிக்கப்போயி ஊசி குத்தவா கத்துக்கிட்ட?

ராஜீ: ஆமா எனக்கு ஊசி குத்தவும் தெரியும். ஊசிப் போன உன்ன மாதிரி பசங்களே எப்படி திருத்துறதுங்கிறதும் தெரியும்.

ஜீவா: டேய் இவன பிடிடா... ..

ராஜீ: டேய் மரியாதையா நான் கேட்கிறதுக்கு பதில் சொல் டேய் நீதாண்டா எங்க வீட்ட ஒருவீட்ட நாலு வீடாக்கின?

ஜீவா: எல்லாம் உங்கண்ணன் சம்மதத்தோட தான் நடந்தது. உன் மனைவி பத்திரத்தில கையெழுத்து போட்டிருக்கா உனக்கு சம்மதம் இல்லேன்னு கோர்ட்டுக்குப் போ. இனிமே இந்த மாதிரி குடிச்சிப் புட்டு வந்து கலாட்டா பண்ணுன போலீஸ்ல பிடிச்சி கொடுத்துருவேன்.

ராஜீ: போலீஸ்...போலீஸ் வரமுன்ன ஒரு பொய் மூக்கு ஒரு செட் பல்லு தயார் பண்ணி வச்சிக்க. போலீஸ கூப்பிடுவானு முல போலீஸ.........

ஜீவா: டேய் பிடிடா பிடி......

0 0

[குடித்து விட்டு ராஜீ ஆஸ்டல் வர]

ராஜா: மாயப்பிர பஞ்சத்தில் ஆனந்தம் வேறில்லே...ஆனந்தம் வேறில்லையே......

ஒரு: உன்னே யாரோ தேடி வந்திருக்காங்க.

ராஜா: யாரு?

ஒரு: ஒரு பொம்பளே.

ராஜீ: பொம்பளே தேடி வர ஆரம்பிச்சுட்டாங்களா?

ஒரு: இன்விடேசன் ரூம்பிலே காத்துக்கிட்டு இருக்காங்க. போயி பாரு.

ராஜீ: [சென்று] யாரது பொம்பளே பொம்பளே...யாரது...

[சாந்தாவை பார்த்து அதிர்ச்சி அடைகிறான்]

ராஜ: அண்ணி...அண்ணி... நீங்களா?

சாந்: அண்ணி என்றுவது தெரிகிறதே. அதுவரை சந்தோஷந்தான்.

ராஜா: அண்ணி! நீங்கள் இங்கு எப்படி வந்தீர்கள்?

சாந்: உன்னைப் பற்றி இங்கு கொடி கட்டிப் பறக்கிறதே அதைப் பார்த்து குதூகலப்படத்தான்.

ராஜ: இந்த பயங்கரமான இருட்டில் எப்படி அண்ணி வந்தீர்கள்?

சாந்: இருட்டு... இருட்டு...எது இருட்டு? கோட்டானும் ஆந்தையும் அலற குள்ள நரிகள் ஊளையிட அந்தப் பின்னணியிலே உருட்டு வழி காட்டும் திருட்டு மனிதர்கள் உலவிட நடைபாதை வெறுக்கிறது. அதுவல்ல தம்பி இருட்டு, இதோ என் எதிரிலே காண்கிறேன் இருட்டை. இருள் நிறைந்த இருட்டு. அறிவை மறைக்கும் இருட்டு. பண்புக்கு சாவு மணியடிக்கும் இருட்டு. இந்த இருளைவிட மருள் தரக்கூடியது என்ன இருக்கிறது உலகத்தில்? உலகைச் சூழ்ந்திருக்கும் இருள் காலையில் மறைந்து விடும் புனிதமான இருதயத்தை சூழ்ந்திருக்கும் இருள் காலமெல்லாம் மறையாது. நடை பட்டுப்போன வாழ்வு. களங்கம் படிந்த குடும்பம். கடமை மறந்த தம்பி. இதை எண்ணிக் கலங்கும் கண்ணியத்தின் காவலர் என் கணவர். உங்கள் அண்ணா. நினைத்துப் பாருங்கள். நிதானமிருக்கிறதா நினைப்பதற்கு?

ராஜ: என்னை சித்ரவதை செய்யாதீர்கள். என் மன வேதனையைப் போக்கிக் கொள்ள இதை மருந்தாக தேர்ந்தெடுத்தேன்.

சாந்: இப்படிச் சொல்லி தப்பித்துக் கொள்கிறார்கள். பெரிய அறிவாளிகள் முதற் கொண்டு தற்கொலைக்கு தயாரானவன் கூட மனவேதனையைத் தான் காரணம் காட்டுகிறான். அவனாவது ஒரேயடியாக சாகிறான். உங்களைப் போல உள்ளவர்கள் அணுவணுவாய் சாகிறார்கள் அவமான முத்திரையை தலை முறை தலை முறைக்கும் குத்திக் கொண்டு. மன வேதனையைத் தீர்க்கும் மருந்தல்ல இது. மனிதனை மிருகமாக்கும் விஷம். மனச் சாட்சியை விலை கூறும் நஞ்சு. மனைவிக்கும் மகனுக்கும் மாதாவுக்கும் கூட வித்தியாசம் இல்லாமல் ஆக்கிவிடும் ஆல கால விஷம்......ஆலகால விஷம்...... ஆலகால விஷம்.........அதற்கு அடிமை நீங்கள்.

ராஜ: அண்ணி...பேசுங்கள். பேசுங்கள். சொல் எனும் ஈட்டிகளை இந்த சொரணை கெட்டவன் இதயத்திலே வீசுங்கள். அப்போது தான் இந்த மிருகத்துக்குப் புத்தி வரும்.

சாந்: இதோ உங்கள் அண்ணன் பெற்ற செல்வம். என் தங்கம் இவனுக்கு வழி காட்ட வேண்டிய சித்தப்பா நீங்கள். வருங் காலம் இவனையல்லவா கேலி செய்யும். இவன் சித்தப்பா யார் தெரியுமா? குடி போதையில் சித்தம் கலங்கி குடும்பத்தை மறந்து கோணல் வழியில் நடந்தவர் என்றல்லவா குறும்புப் பேச்சு பேசி குத்திக் காட்டும் இந்த உலகம். உங்கள் பரம்பரை அப்படி ஒரு

பழி வாங்க வேண்டுமா? அதற்காகததான் அண்ணனும் அத்தையும் இந்த குடும்பத்திற்கு இவ்வளவு பாடு பட்டார்களா? யோசித்துப் பாருங்கள்.

ராஜா: அண்ணி! இந்த விநாடியே உறுதி எடுத்துக் கொள்கிறேன். உங்கள் மீது ஆணை. இந்த உத்தமியை குலதெய்வமாகப் பெற்ற என் அண்ணாவின் மீது ஆணை. இனி தொடமாட்டேன் தொல்லை தரும் கருநாக பேழையாம அந்த மதுக் கோப்பையை. இனி திரும்பியும் பார்க்க மாட்டேன அந்த தீய சக்தியின் இருப்பிடத்தை. என்னை மன்னித்து விடுங்கள் அண்ணி!

சாந்: அப்படியானால் இப்போதே வீட்டுக்கு வந்து நீங்கள் அண்ணனைப் பார்க்க வேண்டும்.

ராஜ: நானா? அகிலத்துக்கெல்லாம் விவேகம் கற்றுக் கொடுக்கும் விவேக சிந்தாமணி அவர். தூய்மை சொல்லித் தரும் திருக்குறள் அவர். நானோ கயமைச் சேற்றிலே விழுந்து புரண்டு உடலையும் உள்ளத்தையும் அழுக்காக்கிக் கொண்டவன். அவர் ஆதவன் நான் பாதகன். அவர் கோபுரம் நான் குப்பை மேடு. எப்படி அண்ணி நான் அவரை பார்ப்பது.

சாந்: மனதை திடப்படுத்திக் கொள்ளுங்கள்.

ராஜ: தயவு செய்து என்னைக் கட்டாயப் படுத்தாதீர்கள் அண்ணி...இழந்த எங்கள் தன் மதிப்பை மீட்காமல் நல்லவன் என்ற பெயரை எடுக்காமல் திரும்பி வரமாட்டேன்.

0 0

[லதாவை அழைக்க வந்த பொன்னுசாமி]

பொன்: அடடாடா. நீங்க சொல்றது நூற்றுக்கு நூறு உண்மைங்க. தம்பியை விட உயர்ந்தது என்ன இருக்கு. தம்பி என்னை விட்டு போயிட்டான். லதாவைப் பார்த்தவுடனே அந்த எண்ணம் வருது. என்ன செய்வேன்.

முத்: வாஸ்தவம் தான். லதாவை அனுப்பிவைககஎனக்கு இஷ்டம் இல்ல லதாவா போறேன்னு சொன்னதாலதான் நான் அனுப்பி வைக்கிறேன்.

பொன்: அடடாடா! அது எனக்கு தெரியாதுங்களா! நான் உங்ககிட்ட ஒரு சமாச்சாரம் கேட்க மறந்துட்டேனே. லதா நகைகள் எல்லாம்,

முத்: பயப்படாதீங்க. எல்லாம் லதாகிட்டயே பத்திரமா இருக்கு.

லதா: அத்தை!

சிவ: சிரஞ்சீவியா இரம்மா!

லதா: என்னை அப்படி சொல்லாதீங்க. சீக்கிரம் சாகணு முன்னு ஆசீர்வாதம் பண்ணுங்க. அக்கா...அக்கா...இந்த குடும்பத் தில ஒருவளா இருந்தேன். நான் பிரியும் நேரமாகி விட்டது. நான் போறேன்.

சாந்: அப்படிச் சொல்லாதே லதா போயிட்டு வர்றேன்னு சொல்லு.

பொன்: இந்த உபசார வார்த்தைகளை எல்லாம் சீக்கிரம் முடிச்சிக் கிட்டா நல்லது. நமக்காக ரயிலு காத்துக்கிட்டு இருக் குமா? எனக்கும் என்ன வேலை வெட்டியில்லையா?

லதா: அத்தான் எத்தனையோ தடவை நான் உங்களுடன் விளையாடும் போது வீண் சண்டை போட்டிருப்பேன். உங்க மனசை நோக வச்சிருப்பேன். அதற்காக என்னை மன்னித்து விடுங்கள். உங் கள் கலியாணத்துக்கு எனக்கு சொல்லி யனுப்புங்கள்.

0 0

[லதா வண்டியில் போக ஏக்கத்துடன் துக்கத்துடன் சின் னையா பார்க்கிருன்]

"இன்ப வருக்கமெல்லாம்" பாட்டு.

0 0

(சின்னய்யா பம்பாய் புறப்படுகிருன், அப்போது]

சின்: அண்ணு. அப்ப நான் புறப்படட்டுமா?

முத்: வேலைக்காக நீ பம்பாய்க்குத்தான் போகணுமா? இங்க ஏதாவது பார்க்கக்கூடாது தம்பி?

சின்: என்னண்ணு செய்யிறது? நானும் தேடித்தான் பார்த் தேன். வேலை கிடைக்கலியே.

சிவ: அவ்வளவு தூரத்துக்கு உன்னை அனுப்பிச்சிட்டு நாங்க எப்படிடா இருக்கப் போருேம். கிடைக்கிற கூழோ கஞ்சியோ எல்லோருமா குடிச்சிட்டு இங்கேயே இருக்கலாம்பா.

சின்: ஏன் அத்தை. நல்ல வேலை நம்மைத் தேடி வர்றப்ப அதை ஏன் மிஸ்பண்ணணும்? அண்ணே டிரைனுக்கு டயமாகிருச்சி.

முத்: நான் என்ன செய்யிறதுன்னே தெரியல. உங்களை எல் லாம் நல்லா படிக்க வச்சி பெரிய மனுசனுக்குவேன்னு அப்பாவுக்கு வாக்கு கொடுத்திருந்தேன். அது உன் விஷயத்திலே மட்டும் நிறை வேற்ற முடியாமல் போச்சி.

சின்: அண்ணே! எனக்கு ஒரு ஆசை இருக்கு. அடுத்த ஜென்ம முன்னு இருந்தா மூட்டைப் பூச்சியாய் பிறந்து அந்த ஜீவா உடம்பை கடிச்சிக்கிட்டே இருக்கணும்.

சாந்: புறப்பட்டியா தம்பி?

சின்: ஆமா அண்ணி.

சாந்: பட்டணம் போய்தான பம்பாய்க்கு ரயிலேறணும்? அப்படியே இந்த பாலாடையும் ஊறுகாய் ஜாடியையும் தாராகிட்ட கொடுத்திருறயா?

சின்: ஊஹீம். நான் மாட்டேன். அவங்க முகத்திலே விழிக்க எனக்கு இஷ்டமே இல்ல.

சாந்: அப்படி யெல்லாம் சொல்லாதே அப்பா. அவங்க தப்பு செய்தாலும் நாம தவறு நடக்கக் கூடாது. தாராவுக்கு மாங்காய் ஊறுகாய்னு உயிரு. நீயும் போயிட்டா வேற யார்கிட்ட நான் கொடுத்தனுப்புவேன். இந்தா.

சின்: அண்ணி. உன்னைப் பார்த்தா பரிதாபமா இருக்கு. ஆனு அந்தப் பாவிங்களுக்கு உங்க அருமை தெரியலியே.

சாந்: அப்படியே தாராகிட்ட பிரசவ சமாச்சாரத்தையும் சொல்லச் சொல்லு. உங்க அண்ணனும் நானும் வர்ற முன்னு சொல்லிரு.

சின்: சரி.. சரி... ஆகட்டும்.

0 0

[சின்னயா தாரா வீடு வந்து]

சின்: அண்ணி...அண்ணி......என்னடா அது? யாரையுமே காணம். புயலடிச்ச பகுதி மாதிரியில்ல இருக்கு. இந்த வீட்டில நானும் மிதிக்கும் படி ஆயிருச்சே கடவுளே!

ஜீவா: கடவுளை வீட்டில் தேடும் பக்தன் யாரப்பா அது?

சின்: ஓ...வாங்க. அண்ணி இருக்காங்களா?

ஜீவா: இல்ல.

சின்: அண்ணன்.

ஜீவா: இல்ல.

சின்: எங்க போயிருக்காங்க?

ஜீவா: யாருக்கு தெரியும்? சரி சரி வந்த விசயத்தைச் சொல்லு.

சின்: ஒண்ணு மில்ல இந்த ரெண்டையும் பெரிய அண்ணி கொடுத்துட்டு வரச் சொன்னுங்க உங்க தங்கை கிட்ட கொடுத்துரு நீங்களா?

ஜீவா: தம்பிகள் வாழ்வுகாக்க தங்கமலே பொழிவதை லட்சியமாகக் கொண்ட அண்ணன் தம்பிக்கு இதையா அனுப்பினரு? வெட்கம் வெட்கம்.

சின்: பாலாடை நீங்க பால் குடிக்க அல்ல உங்கள் தங்கை குழந்தைக்கு.

ஜீவா: தர்வான்...

சின்: எதுக்கு அனுவசியமா அவனைக் கூப்பிடுற? இப்பத்தான் மீசைக்கு நெய் போடறேன். இருக்கட்டும் பார்த்துக்கிடுறேன்.

ஜீவா: டேய் சின்னையா எனக்குக் கோபம் வந்தா காண்டா மிருகமா மாறிடுவேன் ஜாக்ரதை.

சின்: எதுக்கு அனுவசியப் பேச்சு. இந்தா இதை கொடுத்திரு. நான் ஒரு வேலையா பமபாய் போறேன். உங்க தங்கையும் அந்த வக்கீல் துரையும் ஒழுங்கா வீடு வந்தா ஆச்சி. இல்ல எப்படியும் கெட்டுத் தொலையட்டும்.

ஜீவா: இவ்வளவு தான இன்னம் இருக்கா?

சின்: இன்னம் கொஞ்சம் இருக்கு. இந்தாங்க உங்க தங்கைக்கு குழந்தை பிறந்தவுடனே ஒரு கார்டு எழுதிபோடச் சொல்லுங்க. அண்ண வருவாங்க. இந்தாங்க ஓரண.

ஜீவா: கேலியா செய்கிருய்?

சின்: ஒ. மறந்துட்டேன். நீங்க கோடீஸ்வரர். தந்தியிலயே பேசிக்கிடுங்க நான் வர்றேன்.

ஜீவா: வரவேண்டாம் போ.

0 0

[கடிதம் வர சாந்தா படிக்கிருள்]

சாந்: அன்புள்ள அண்ணி வணக்கம். நல்ல யாத்தில் ஒரு புல்லுருவி போல குடும்பக் கௌரவத்தை தவிடு பொடியாக்க நான் வந்து சேர்ந்தேன். அண்ணி! இப்போது சுப நினைவு வந்து கம்பவுண்டராக வேலை பார்த்து வருகிறேன். அதிலிருந்து ஏதோ என்னல் முடிந்த தொகையை அனுப்பியிருக்கிறேன். மறுக்காமல் ஏற்றுக் கொள்ளுங்கள். இன்னெரு விஷயம் அண்ணி என்னுடைய உயிரே போவதானலும் அண்ணனை விட்டுப் பிரியமாட்டேன்னு அண்ணனிடம் சொல்லுங்கள். இப்படிக்கு ராஜையா.

முத்: பார்த்தாயா சாந்தா! ராஜப்பா நம்பளை விட்டுப் போகல. அப்படியே ராமய்யாவும் திரும்பி வந்துட்டா எவ்வளவு சந்தோஷமா இருக்கும்.

சாந்: அதை எல்லாம் நினைச்சு ஏன் வேதனைப் படுறீங்க? ஏதோ சமயத்திலே பணம் வந்தது! முதல்ல கண்மணி ஸ்கூல் சம்பள பாக்கியை கட்டிட்டு வாங்க.

முத்: இது ரொம்ப தவறுன காரியம் சாந்தா! யார் உதவியையும் எதிர்பார்க்கிற நிலமை இன்னும் எனக்கு வரல. முதல்ல இந்தப் பணத்தை ராஜயயா பேரிலே சேவிங்ஸ் பேங்கிலே போட்டுடுறேன்.

சாந்: அதுவும் சரிதான். அப்படியே செய்யுங்களேன்.

முத்: வா கண்மணி...

[தபாலாபீஸில் பணம் கட்ட]

போஸ்: இந்தாங்கய்யா...

* *

[கண்மணியை முத்தய்யா ஸ்கூலில் விட்டுச் செல்கிருர்]

* *

[தாராவிடம் அவள் அண்ணி]

அண்: குழந்தை அப்படியே சாந்தா அம்மாவை உரிச்சி வச்சிருக்கு.

தாரா: அப்படியா! இந்தக் குழந்தையின் மூலமாவது பிரிந்த குடும்பம் ஒண்ணுசேருமுன்னு நினைச்சேன். அதும் வீணுப் போச்சி.

அண்: எல்லாம் சரியாப் போகும் கவலை எதுக்கு?

தாரா: கவலை இல்ல எனக்கு கோபம்தான் வருது.

ராமை: அதுதான் உங்க அண்ணன் ஜீவா இருக்கானே அவன்கிட்ட சொன்னு கோபத்தை தணிச்சிட்டுப் போருன்.

தாரா: அவருக்கு என்னைப்பற்றி நினைக்க நேரம் ஏது. அவருக்கு அவர் சொந்த ஜோலியே தலைக்கு மேல இருக்கு. ஆமா எங்கண்ணன் தான் இப்படின்ணு உங்க அண்ணனுவது குழந்தையை ஒரு தடவை பார்க்க வரக்கூடாதா?

ராமை: ஹூம் நடக்காத விசயத்தைப் பற்றி பேசுறதில உனக்கு தனிப் பிரியம்.

தாரா: எது நடக்காத விசயம்? ஆமா குழந்தை பிறந்ததுக்கு லெட்டர் எழுதினீங்களா இல்லையா?

ராமை: எல்லாம் உங்க அண்ணனையே எழுதச் சொல்லீட்டேன்.

தாரா: எழுதச் சொல்லீட்டீங்கள்ள. அவரு எழுதீட்டுதான் மறு வேலை பார்ப்பாரு. அதோ அவரே வந்துட்டாரு. ஆமா அண்ணு ஊருக்கு லெட்டர் எழுதினயா என்ன?

ஜீவா: என்ன? லெட்டரா? ஓ...எழுதிட்டனே!

*    *

அஞ்: ஏய் என்னடி இது? சந்திரமதி உலக்கை போட்டமாதிரி போட்டுக்கிட்டு இருக்க? நீ என்னேரம் நெல் குத்தி எங்களுக்கு சோறு சமைச்சிப் போடப் போற?

லதா: இல்லக்கா ராத்திரி பூராவும் ஜுரம். அதனுலதான் காலேயிலே எழுந்திரிக்க முடியல.

பாபு: ஏம்மா! என்னக் கூப்பிட்டயா நீ?

பொன்: என்னடி வளவளன்னு சத்தம் போட்டுக்கிட்டு இருக்க?

அஞ்: அம்மாவுக்கு ஜுரம் வந்துருச்சாம் ஜுரம். முகரயப் பாரு.

பொன்: என்ன அக்காளபற்றி பேசுறயா?

அஞ்: இல்ல உங்கக்காளப் பற்றி பேசுறேன். உங்களுக்கு இன்னேக்கி பட்டினிதான்...

பொன்: ஏன்?

அஞ்: இவளுக்குத்தான் ஜுரம் வந்துருச்சே ஜுரம்.

பாபு: அப்பா! எனக்கு பசிக்குது.

பொன்: டேய் கழுதை! இவக நம்மள பட்டினி போட்டுக் கொன்னுபுடுவாகடா! அங்க பச்சரிசி தவுடு வச்சிருக்கேன் அதோட கருப்பட்டியைப் போட்டு பிசை.

பாபு: அதை நீ ஒத்திகைக்கு போகும் போதுல்ல சாப்பிடுவ. எனக்கு பசிக்குது.

அஞ்: அங்க இவளுக்கு அவயமுன்னு எள்ளு புண்ணக்கு வச்சிருக்கேன் அதை எடுத்து தின்னுங்க.

பாபு: சித்தி! உனக்கு ஜுரமா சித்தி? ஐயோ பாவம். ஏம்மா என்ன பண்ணுன? தூங்கினயா! நீ சமைச்சா என்ன? சித்தி! நீ இவங்களுக்கு சோறு போடாதே. நான் ரெண்டு சடலே உருண்டையை தின்னுட்டு என் பீமராஜா வேஷத்தை சமாளிச்சிக்கிடுறேன்.

அஞ்: ஏண்டா நேற்று வந்த கழுதையோட சேர்ந்துக்கிட்டு என்ன எதுக்கிறயா? நீ உருப்படுவயா?

பாபு: எல்லாம் நான் உருப்போடுவேன்.

பொன்: கழுத...கழுத...பேசாதடா. இவனப் பார்த்தியாடி.

அஞ்: அவன என்ன சொல்றது? அவ செய்யிற வேலையெல்லாம். அங்க சின்னையாவ மயக்கிறு. இங்க என் மகனை மயக்கீட்டாளே!

லதா: அப்படி சொல்லாதீங்க அக்கா பொய் சொல்ற வாய்க்கு போஜனம் கூட கிடைக்காதுன்னு சொல்வாங்க.

[அடிக்க கீழே விழுகிருள் லதா]

பாபு: சித்தி...சித்தி...எழுந்திரு. ரெத்தம்...ரெத்தம்...அடி சண்டாளி பாதகி...கொலே கொலே. யேய் நீ என் அம்மாவா நீ. யோவ் நீ என் அப்பாவாயா? கொலே...கொலே...

அஞ்: டேய் சித்தியைப் பார்த்தவுடனே அம்மாவயே மறந்துட்டயா?

பாபு: இங்க பாரு கொலே கொலே கொலே...கொலே பண்ணியிருக்க (போலீஸ் வர) கொலே இதோ குற்றவாளி. இதோ உடந்தை. கொலே கருவி...கொண்டு போங்க தூக்குல போடுங்க.

லதா: ஒண்ணுமில்ல தவறி கீழே விழுந்துட்டேன்.

பொன்: ஆமா நாங்க நாடக ஒத்திகை பார்த்துக்கிட்டிருந்தோம் தவறி கீழே விழுந்துட்டாங்க நீங்க போங்க.

அஞ்: இவனுக்கு அம்மாவாசைக்கு அம்மாவாசை இப்படித் தான் வருது. நீங்க போங்க.

பாபு: ஐயா நான் சத்தியமா சொல்றேன். இந்த வீட்டில ஒரு நாள் கொலே நடக்கும். அப்ப நான் சொல்றேன். நீங்க போங்க.

அஞ்: நீங்க போங்க...போங்க.

* *

[தெருவில் ஒருவன் ஏலம்போட]

ஒரு: ரெண்டே கால் ரெண்டே கால்...

மற்: மூணே கால் ரூபாய்...

ஒரு: மூணே கால் ரூபாய் ஒரு தரம் மூணே கால் ரூபாய்...

மற்: நாலு ரூபாய்.

ஒரு: நாலு ரூபாய் ஒரு தரம் நாலு ரூபாய்.

மற்: நாலரை ரூபா!

ஒரு: நாலரை ரூபாய் ஒரு தரம். நாலரை ரூபாய்...

மற்: ஐந்து ரூபாய்...

ஒரு: ஐந்து ரூபாய்...

மற்: ஐந்து ரூபாய் ஒரு அணு...

மூன்: ஐந்து ரூபாய் மூணணு...

ஒரு: ஐந்து ரூபாய் மூணணு...

[முத்தப்பா பார்த்து செல்கிருர்]

*   *

[முத்தப்பா ஜவுளி கடை வர]

சேட்: வாங்க......வாங்க......முத்தப்பா சாரு. வியாபாரம் நஷ்டமாகிருச்சின்னு கேள்விப்பட்டேன். இனிமே என்ன செய்யப் போறீங்க?

முத்: ஏதோ கொஞ்சம் சரக்கு கடனுக் கொடுத்தா...

சேட்: கடனு? நம்மால முடியாது.

முத்: நீங்க அப்படி சொல்லக்கூடாது. நான் உங்கப்பா கிட்ட முதன்முதல் கடன் வாங்கித்தான் வியாபாரம் ஆரம்பிச்சேன்.

சேட்: இருபத்தி ஐஞ்சி வருஷத்துக்கு முன்ன எங்க பாவா கொடுத்தாரு அதோட அந்தக் காலமும் போயிட்டது. இப்ப செக்ருடி இல்லாம கொடுக்க முடியாது.

முத்: உங்க வக்கீல் ஜீவாகிட்ட லெட்டர் வாங்கி வந்தா போதுமா?

சேட்: அவன் ஒண்ணும் நம்பர் சைதான். எனக்கு வேலை இருக்கு. போயிட்டு வாங்க.

*   *

[முத்தப்பா மழையில் நனைகிருர்]

*   *

[வீட்டில்]

கண்: அம்மா! இங்க கூட ஒழுகுதம்மா!

சாந்: இனிமே நம்மகிட்ட ஒரு பாத்திரம்கூட இல்லையே கண்ணு.

[முத்தப்பா கீழே விழ வண்டியில் போட்டுகொண்டு வந்து ஒருவன்]

ஒரு: அம்மா... அம்மா...அப்பாவ பாருங்கம்மா...கதவைத் திறங்கம்மா...சீக்கிரம் வாங்க...சீக்கிரம் வாங்க யேய் கீழ விழாம தலையை பிடி...

[கொண்டு வந்து படுக்கவைத்து]

சிவ: முத்தய்யா,

முத்: எனக்கு ஒண்ணுமில்லே பயப்படாதீங்க.

ஒரு: நல்ல அடிபோல இருக்கு நான் போயி வைத்தியரை கூட்டி வர்றேன்.

* * *

[அமீனாவை கூட்டி வந்த ஜீவா]

ஜீவா: மது வெறியனுக்கு மாலையிட்ட உன் வாழ்வுக்கு வழி வகுக்கப் போகிறேன். ஆமா இந்த ரெண்டாயிரத்தி ஐநூறு ரூபா யையும் வச்சிட்டாதான் இங்க இருக்கலாம். என்ன செய்யப் போற?

மங்: அண்ணா! அனாதையா இருக்கேன். ஆபத்துல கொண் டாந்து விட்டுட்டீங்களே! நீங்க என் சொந்தக்காரர் இல்லையா?

ஜீவா: சொந்தக்காரன் தான். ஆனால் என் சத்துருவின் மனைவி என்பதை நான் எப்படி மறப்பேன். அமீனா! ஆரம்பமாகட் டும் வேலை.

மங்: அமீனா நுழைஞ்ச வீடு உருப்படாதுன்னு சொல்வாங்க. என்னை அனாதையா விட்டுறாதீங்க!

ஜீவா: அமீனா! வரவேண்டிய பாக்கிக்காக இந்த வீட்டில இருக்கிற ஒவ்வொரு சாமானையும் வரவு வச்சிக்க.

* * *

டாக்: இந்த மருந்தை வாங்கிவரச் சொல்லுங்க.

சாந்: எவ்வளவு ஆகும் டாக்டர்.

டாக்: சுமார் நாற்பது ரூபாய் ஆகும்.

சாந்: நாற்பது ரூபாயா?

டாக்: என்னம்மா செய்யிறது. அடிபட்டதோட ரெத்தக் கொதிப்பு வேற அதிகமா இருக்கு. மருந்தை வாங்கீட்டு எனக்கு சொல்லி அனுப்புங்க நான் வர்றேன்.

சாந்: அத்தை! இப்ப என்ன செய்யிறது? ரூபாய்க்கு எங்க போறது?

சிவ: அட கடவுளே. எல்லோருக்கும் லட்சம் லட்சமா கொட்டி அழுதானே. இந்த வியாதி அப்பயெல்லாம் வராம இப் பவா வரணும்?

முரு: அம்மா!

சாந்: முருகா! நீ எங்க வந்த?

முரு: உங்களுக்கு விசயம் தெரியாதாம்மா?

சாந்: என்ன?

முரு: மங்களம் அம்மாளயும் வீட்டைவிட்டு விரட்டிட்டாங்க வீட்டைப் பிடுஙகிக்கிட்டு.

சிவ: அட பாவி.

சாந்: மங்களம் எங்க போனு?

முரு: அவங்க எங்க போறேன்னு சொல்லாம போயிட்டாங்க.

சாந்: எங்களுக்கு முடியாத நேரத்திலயா இப்படி வரணும். விசாரிக்கக்கூட யாரும் இல்லேயே!

முரு: ஐயாவுக்கு என்னம்மா?

சிவ: அடிபட்டு படுக்கையில படுத்திருக்கான்.

முரு: அம்மா! நான் இங்கேயே தங்கிருறம்மா.

சாந்: முருகா! நாங்க இப்ப இருக்கிற நிலமை உனக்கு தெரியும். மருந்து வாங்கக் கூட பணம் இல்லே. உனக்கு எப்படி சம்பளம் தருவேன்?

முரு: அப்படி சொல்லி என் மனசை புண்படுத்தாதீங்கம்மா. உங்க உப்பை தின்னு வளர்ந்தவன் நானு. கண்மணியை கூட அனுப்புங்க நான் போயி மருந்து வாங்கிட்டு வர்றேன்.

*

முரு: சார்...சார்.

ஜீவா: ஓ...நீங்களா? திரும்பிப் போனவங்க இப்ப திரும்பி வர பிள்ளேவிடு தூது நடக்கிறதாக்கும்?

முரு: அதெல்லாம் ஒண்ணுமில்லங்க.

கண்: மாமா! அப்பாவுக்கு உடம்பு சுகமில்லே சித்தப்பாவை பார்க்கணும்.

ஜீவா: உன் சித்தப்பனுக்கு வைத்தியம் பார்க்க தெரியாது. வேற ஆளப்பாரு.

கண்: அப்படிச் சொல்லாதீங்க. எங்கம்மா கிட்ட காலணு காசு கிடையாது. சித்தப்பாகிட்ட ஏதாவது வாங்கிட்டுப் போகலா முன்னு வந்தேன்.

ஜீவா: உன் சித்தப்பா ஒரு தம்பிடி தரமாட்டாரு. ஏண்டா அவனே அழைச்சிக்கிட்டுப் போடா.

முத்: குழந்தை ரொம்ப பிரியப்படுது அவரைப் பார்த்தா தேவலே. அவரை கொஞ்சம் வரச்சொல்லுங்களேன்.

ஜீவா: ஏண்டா ஒருத்தன் கையில ஒரு நாலு காசு இருக்கிறது உங்களுக்கு பிடிக்கலியா? அதைப் பிடுங்க உங்களே அனுப்பிச்சிட்டாரு. ஏண்டா இதுக்கு இப்படி நாலுபேருகிட்ட காசு வாங்கித் தான் பிழைக்கணுமா?

கண்: ஏன் மாமா வள்ளு வள்ளுனு விழுறீங்க. வாங்க இவர் கிட்ட கேட்கிறதைவிட நடுத்தெரு நாராயணன்கிட்ட கேட்கலாம்.

0 0

[தபாலாபீஸில்]

போஸ்: பணம் ராஜய்யா பேருல இருக்கு. ஒண்ணு ராஜய்யா வரணும் இல்ல முத்தய்யா வந்து கையெழுத்துப் போடணும்.

கண்: எங்கப்பாவுக்கு உடம்பு ரொம்ப சீக்கா இருக்கு. எப்படி கையெழுத்து போட வருவாரு?

போஸ்: அது சரி தம்பி. உன்னேப் பார்க்கும்போது எனக்கும் பரிதாபமா இருக்கு. அதைப் பார்த்தா நானுல்ல ஜெயிலுக்குப் போகணும்.

0 0 0

[சொக்கேசரிடம் மங்களம் வர]

சொக்: உன்னேயும் வீட்டை விட்டே துரத்திட்டான்ல. வாழ்க அந்த மகராசன்.

மங்: என்னப்பா இது. என் வயித்தை எரியுது. அவரை வாழ்த்தறீங்களே?

சொக்: என்னுல வேற என்னம்மா செய்ய முடியும்? நீ என்ன பச்சைக் கொளந்தையா? கை கால கட்டிப் போட்டு கணவனேட அன்பா இருனனு சொல்றதுக்கு. இந்தமாதிரி தன் இச்சையா திரியிறவங்களுக்கு உலகம் தான் பாடம் கற்பிக்கணும்.

மங்: அப்பா!

சொக்: சீ...அப்பா...குடும்ப கௌரவத்தை குட்டிச் சுவராக் கிட்டு அப்பான்னு சொல்லி என்னே அவமானப்படுத்தாதே! நீ ஒரு குடும்ப விளக்காய் இருக்கணு முன்னு நம்ப முத்தையா கஷ்டப்பட்டு நம் தகுதியைக் கூட பாராமல் தன் தம்பிக்குக் கலியாணம் செய்து

கொண்டார். அதுக்கு நீ செய்த கைம்மாறு இப்படியா இருக்கணும். கல் நெஞ்சம் கொண்டவளே. இனிமே இந்த வீட்டிலே கூட உனக்கு இடம் கிடையாது.

மங்: நான் செய்த தெல்லாம் தப்புன்னு இப்பத்தான் தெரிஞ்சது என்னே மன்னிச்சிருங்கப்பா.

சொக்: சரி! நீயும் என்னுேடவா. நேரே முத்தையாவையும் சாந்தாவையும் பார்த்து நம் கதையைச் சொல்லி அழுவோம். பிராயச் சித்தம் கிடைக்குமான்னு கதறுவோம். அப்ப அவங்க நம்ம நிலமையை கேட்கலேன்ஞ அங்கேயே ஒரு குளம் குட்டையை தேடிக்கிடுவோம்.

0 0

சிவ: ஏம்மா! எவ்வளவு நேரம் இப்படியே உட்கார்ந்திருப்ப. ராத்திரி பூராவும் தூங்கல. நீ போயி குளிச்சிட்டு ஏதாவது சாப்பிடு.

சாந்: வேண்டாம். எனக்கு பசியே எடுக்கல.

சிவ: இப்படி பட்டினி கிடந்து நீயும் படுத்திரு. அப்புறம் நான் குடும்பத்தை கவனிச்ச மாதிரிதான். ஆமா கண்மணி எங்க?

சாந்: முருகன் கூட போயிருக்கான் இப்ப வந்துருவான். (முருகன் வர)

முரு: சின்ன எஜமானே பார்க்க முடியலம்மா. எல்லோரும் அப்படி மாறிட்டாங்க.

கண்: அங்க இருக்கிற மாமா எல்லோரையும் அடிக்க வர்ற மாதிரி பேசுருர்.

சாந்: நம்ம நிலமை அப்படி போச்சி நீ போயி சாப்பிடு.

கண்: நான் அப்பா வோடதான் சாப்பிடுவேன்.

சாந்: அப்பா சாப்பிட என்னடா வச்சிருக்கோம். மருந்து வாங்கக் கூட பணம் இல்லாம இருக்கோம்.

கண்: அம்மா நீ அழாதே நான் போயி சாப்பிடுறேன். அத்தை சோறு போடு.

சாந்: முருகா தாராவை கூட பார்க்க முடியலியா?

முரு: ஆமாம்மா. எல்லோரும் ஒரு மாதிரியாகத்தான் இருக்காங்க போலிருக்கு.

சாந்: இப்ப என்ன செய்வேன் முருகா! நீ ரொம்ப நல்ல வனுச்சே! எனக்கு ஒரு காரியம் செய்யிறயா?

முரு: சொல்லுங்கம்மா தட்டாம செய்யிறேன்.

சாந்: இந்தக் கம்மலேக் கொண்டு வித்துட்டு வர்றயா?

முரு: அம்மா.

சாந்: இந்த நகை இதுக்கு இல்லாமல் எதுக்கு இருக்கணும்?

முரு: சுமங்கலிகள் கம்மலே கழட்டக் கூடாதம்மா.

சாந்: எனக்கு மஞ்சள் குங்குமம் இருக்கு நான் சுமங்கலின்னு காட்டுறதுக்கு.

முரு: வேண்டாம்மா...வேண்டாம்.

சாந்: வேண்டாமா? என் சீமான் உயிர் பிழைக்க வேண் டாமா? என் செல்வன் மறுபடியும் சிரித்து பேச வேண்டாமா? முருகா நீ நன்றி மறக்காதவன், இந்தா.

[மங்களம் அங்கே வந்து]

மங்: வேண்டாம் அக்கா! கம்மலேக் கழற்ற வேண்டாம். இதோ கை நிறைய நகை இருக்கு. இதை விற்க சொல்லுங்க.

சாந்: ......மங்களம்...

மங்: எடுத்துட்டுப் போ முருகா. சீக்கிரம் போ!

சாந்: என்ன காரியம் செய்த மங்களம்?

மங்: நான் பழைய மங்களம் இல்ல அக்கா. மமதை எல்லாம் ஒழிஞ்சி, மடமை எல்லாம் அழிஞ்சி பரிசுத்த மனசோட வந்திருக் கிற புது மங்களம். இனிமே என்னே தள்ளி வைக்காதீங்க அக்கா.

சாந்: மங்களம்...

மங்: ஆமம்மா......சாந்தம்மா. மங்களம் பட்டிக்காட்டுல பிறந்து தனிக்காட்டு தர்பார் நடத்தினவ. என் வம்சத்துக்கே இழிவு தேடித்தர வந்திருக்கா. எப்படியாச்சும் என் மானத்தை காப்பாற்றுங் கம்மா.

சாந்: அப்படி யெல்லாம் ஒண்ணும் சொல்லாதீங்க. பட்டிக் காட்டு பெண்கள் என்றைக்குமே தவறு செய்யிறதில்லே. மங்களம் எங்க குடும்ப விளக்கு. சந்தர்ப்பம்ங்கிற புயல்ல ஒரு துரும்பாயிட் டதினுல என் தங்கையை நான் தள்ளி வைக்க மாட்டேன.

சொக்: இப்பத்தாம்மா என் மனசு குளிர்ந்துச்சு. வர்ற வழி யிலேதாம்மா கேள்விப் பட்டோம் அவருக்கு உடம்புக்கு சரியில் லேன்னு. எனக்கு ஒரு தந்தியாவது கொடுத்திருக்கக் கூடாதாம்மா?

சாந்: எப்படிக் கொடுக்கிறது?

மங்: ஏன் சின்னத் தம்பி இல்ல?

சாந்: இருந்தா ஏன் இவ்வளவு கஷ்டம். பம்பாய்க்குப் போயிருக்கு.

மங்: லதா கூடவா அக்கா?

சாந்: அவ மாமியார் வீட்டிலே இருக்கா!

சொக்: அப்ப இந்த விசயம் யாருக்குமே தெரியாதா? சரி. நான் இப்பவே போயி எல்லோருக்கும் தந்தி கொடுத்துட்டு வர்றேன்.

0 0

[லதா குப்பை கூட்டும் போது தந்தியை எடுத்து]

லதா: ஹா! இந்தத் தந்தி ஏன் குப்பையில போட்டிருக்கீங்க. ஏன் என்கிட்ட சொல்லல?

பொன்: என்ன அதிகாரம் பண்ற?

அஞ்: ஆம்பள கிட்டயே எதித்து பேச ஆரம்பிச்சிட்டயா? உனக்கு வெட்கம் மானம் சூடு சொரணை இல்ல?

லதா: என்ன வெட்கம்? நான் இப்பவே ஊருக்குப் போகணும்.

பொன்: யேய். அங்க சீக்கா இருக்காங்கன்னு நீங்க போறீங்களோ! நீங்க போயிதான் அங்க வைத்தியம் பார்க்கணுமோ?

லதா: அதெல்லாம் எனக்கு தெரியாது. நான் இப்பவே போயி அத்தானை பார்க்கணும்.

அஞ்: நீங்க என்னங்க பெரிய அறிவாளியாட்டம் அவகிட்ட பேசிக்கிட்டு. நீ அத்தானைப் பார்த்தாலும் சரி பொத்தானைப் பார்த்தாலும் சரி. இப்பவே நகைகளை இங்க வச்சிட்டுப் போ.

பொன்: நீ ஒன்னும் பேசாதே. பெட்டி சாவியை எடு.

பாபு: அதுதான் நடக்காது. நீ ஏன் அந்த நகையைப் போட்டுட்டு பவுசைக் காட்டப் போறீயா?

அஞ்: அட பாவி பயல. உன் பெண்டாட்டிக்கு நகையைப் போட்டு அழகு பார்க்க வேண்டாமா?

பாபு: அவன் யாரு எனக்கு பெண்ணு கொடுக்கிறவன். சித்தி நீ கவலைப்படாதே! ஊருக்கு நான் கூட்டிக்கிட்டுப் போறேன்.

அஞ்: டேய் அவளக் கூட்டிக்கிட்டு போன உன்னப் பாரு!

பாபு: சும்மா நிறுத்தம்மா. அதெல்லாம் அந்தக் காலம்.

பொன்: டேய் யார் அவன் டேய் இதோ பாரு.

அஞ்: யேய். நல்லா இருக்கு என் வீட்டுக்குள்ளயே அப்பனும் மகனும் சண்டை போட்டுக் கிட்டு.

பொன்: யேய்...நீ பேசாதே. போ. என் கிட்டயா!

[சண்டை போட இருவரும் பொன்னுசாமி தோல்வியடைய]

பொன்: டேய்...இருடா...இப்பத்தாண்டா நீ என் மகன். யானைக்குப் பிறந்தது பூனையாகாதுடா. இனி உன் இஷ்டம் தாண்டா இந்த வீட்டிலே.

பாபு: சித்தி கிளம்பு சித்தி!

பொன்: டேய்! உங்கப்பன் சமாதானமா ஒரு வார்த்தை கேட்கிறன்.

பாபு: என்ன?

பொன்: அந்த சாவியை மட்டும் வாங்கி கொடுத்துருடா. [அடிக்க]

பாபு: வா சித்தி......வா...[போக]

அஞ்: என் பிள்ளையை சுக்குப்பொடி போட்டு மயக்கிப் புட்டாளே! பாரு உதருறத!

0 0

[லதா முத்தையாவின் படுக்கை வந்து)

லதா: அத்தான். உங்க லதா வந்திருக்கேன். ஒரு தடவை கண்ணை திறந்து பாருங்க அத்தான் பார்க்க மாட்டீங்களா? இனிமே உங்களை விட்டு பிரியவே மாட்டேன் அத்தான்.

சிவ: அழாதே. லதா. கொஞ்ச நேரம் சும்மா இரும்மா.

லதா: அத்தே!

சாந்: சீக்கிரம் குணமாகிருமுன்னு டாக்டர் சொல்லியிருக்கார் அழாதேம்மா.

மங்; லதா!

லதா: நீங்க எப்ப வந்தீங்க?

மங்: ஏன். ஏன் லதா! உனக்கே ஆச்சரியமா இருக்கா? நான் செய்த தவறுக் கெல்லாம் பிராயச் சித்தம் கிடைக்குமான்னு பார்க்க வந்திருக்கேன்.

லதா: அக்கா!

0 0

[ரயிலடியில்]

கண்: சின்னையா!

சின்: மாமா!

கண்: என்ன சின்னையா அண்ணனுக்கு எப்படி இருக்கு உடம்பு?

சின்: இப்பத்தான் தந்தி கிடைச்சது அதுதான் வர்றேன்.

கண்: அப்ப நீ ஊருல இல்லையா?

சின்: நான் பம்பாயில வேலை பார்க்கிறேன்.

கண்: யேய் போர்டர். சாமானைத் தூக்கு.

0 0

ஜீவா: முத்தைய்யா...முத்தையா...என்ன நீயும் அழ ஆரம் பிச்சிட்டயா? உனக்கு என்ன?

மனே: அது சரி. உள்ள நடக்கிறது உங்களுக்கு என்ன தெரியும். தாரா கிட்ட அவர் முகம் கொடுத்து பேசறதே இல்லை.

ஜீவா: அப்படியா தாரா!

தாரா: அவர் என் கிட்ட பேசுறதும் இல்ல. இங்க வீட்டில தங்குறதும் இல்ல. எப்பப் பார்த்தாலும் பைத்தியம் மாதிரியே இருக்கார். அவரு வயசான காலத்தில கஷ்டப் படுறதை நினைச்சி ரொம்ப வேதனைப் படுகிறார். நீ செய்ததெல்லாம் அவருக்கு தெரிஞ்சி போச்சி.

ஜீவா: இன்னைக்கி வரைக்கும் என்னை ஏணியா வச்சி பயன் படுத்திட்டு இப்ப உதைச்சி தள்ளுறீங்களா?

மனே: இப்ப ஒண்ணும் கெட்டுப் போகல அவங்க அவங்க சொத்தை அவங்க அவங்க கிட்டையே திருப்பிக் கொடுத்துருங்களேன்.

ஜீவா: அது தான் முடியாது. இந்த ஜீவா போட்ட முடிச்சை யாராய் இருந்தாலும் சரி! அந்தாள்மா வந்தாலும் அவுக்க முடியாது.

[கண்ணப்பர் சின்னையாவர]

தாரா: அப்பா!

கண்: தாரா! ஏன் அழறே! இந்தத் தடியனை நம்பி நீ பாழும் கிணற்றிலே தடுக்கி விழுந்துட்ட.

தாரா: அப்பா!

கண்: ம். அப்பாவுக்குத்தான் ரெண்டு பிள்ளைகளும் சேர்ந்து நல்ல பெயர் வாங்கி வச்சிட்டீங்களே! தாரா! நீ படிச்சிருந்தா மட்டும் போதாதம்மா! டள்ளிக் கூடத்திலே நுழைஞ்சிட்டா மட்டும் பகுத்தறிவு வந்துடாதம்மா. அன்பு தெரியணும். அடக்கம் தெரியணும். உன்னை விட அதிகம் படிச்சவ உங்க வீட்டிலே அடைஞ்சி கிடக்கிறாளே அவளைப் பார்த்தாவது நீ பாடம் தெரிஞ்சிக்க வேண்டாம்?

தாரா: அப்பா யாரப்பா அது?

கண்: உன்னுடைய பெரியக்கா சாந்தாதான். அவளுக்கு பொட்டு வைக்கத் தெரியும், கோலம் போட தெரியும குத்து விளக்க ஏற்றத் தெரியுமுன்னுதான நினைச்சிக்கிட்டு இருந்த? இல்ல. இல்ல. அவ ஒரு கிராஜ்வேட். பீ. ஏ. பட்டம் பெற்றவ. தன் கணவன் சாதாரண படிப்பாளிதானேன்னு உண்மையை மறைச்சி ஊமையாகிட்டா. எப்போதுமே நிறைகுடம் தளும்பாதுங்கிறது பொய்யாகாதம்மா.

சின்: ஆமா அண்ணி. என் கிட்டக் கூட எதிர்பாராமே இந்த விஷயத்தைச் சொல்லி வேறயார் கிட்டயும் சொல்ல வேண்டாமுன்னு சத்தியம் வாங்கிக் கிட்டாங்க.

தாரா: நெஜமாவா சின்னையா?

கண்: ஏம்மா வாயை பிளக்கிற? நமக்கு அந்தப் பட்டம் கிடைச்சிருந்தா அடிக்காத கொட்டல்லாம் அடிச்சிருக்கலாமேன்னு ஏங்குறயா? இல்ல அப்பேர்பட்ட அறிவுச்சுடா பக்கத்திலே இருந்தும் பார்வை தெரியாமப் போச்சேன்னு கவலைப்படுறயா?

தாரா: இல்லையப்பா! நான் உண்மையாகவே வெட்கப் படுறேன். வேதனைப் படுறேன். என் வாழ்க்கையிலே விடிவெள்ளி தோன்றுதுன்னு இதயம் வெடித்து வெடித்துச் சாகப்பார்க்கிறேன்.

சின்: உன் அண்ணன் அறிவுச் சுடர் பக்கத்திலே இருந்தான்னு அதுக்கும் இடம் கொடுக்க மாட்டான்.

கண்: ஹீம்...வாங்க போகலாம்.

ராமை: [வந்து] என்ன? எதுக்கு? யாருக்கு என்ன செய்யிது?

சின்: பெரிய அண்ணனுக்கு உடம்பு சரியில்லேன்னு தந்தி வந்திருக்கு.

ராமை: என்ன அண்ணனுக்கு உடம்பு சரியில்லையா?

சின்: என்னண்ணு இது எங்களுக்கு எல்லாம் தெரிஞ்சி நாங்க வந்திருக்கோம் உனக்கு தெரியாது?

கண்: டேய் என்னடா இதெல்லாம்?

ஜீவா: வந்து...வந்து. [அடித்து]

கண்: என்னடா உளர்ற?

ஜீவா: முருக...முருக...

கண்: முருகன் சொன்னுன்ல.

ஜீவா: சொன்னுன். அதைச் சொன்னு ராமையா மனசு ஷாக் ஆகிருமுன்னு நினேச்சி.

கண்: கொலேபாதகா உனக்குத்தான்டா முதல்ல தூக்குல போடணும். நீ அங்க வந்து முத்தையா காலுல விழுந்து மன்னிப்புக் கேட்கல உன்ன வீட்டுல காலடுத்து வைக்க விடமாட்டேன்.

தாரா: அப்பா! நானும் கூட வர்றேன். நான் வந்து அவங்க கால்ல விழுந்து மன்னிப்புக் கேட்டாதான் எனக்கும் புத்திவரும்.

0 0

[டாக்டர் பார்க்க]

சின்: டாக்டர் பரவாயில்லேன்னு சொல்றீங்களா? நல்லா பாருங்க.

டாக்: பேசண்டு கிட்ட இந்த மாதிரி எல்லாம் பேசக் கூடாது. நான் இதுக்குன்னு வந்திருக்கேன் நான் பார்க்க மாட்டேனு?

சாந்: கொஞ்சமாவது நம்பிக்கை இருக்கா டாக்டர்?

டாக்: எங்களுக்கு எந்த நிமிஷமும் நம்பிக்கைதாம்மா

கண்: இதோ முத்து கண்ணேத்திற எல்லோரும் வந்திருக்காங்க. ஏன்டா மரமாட்டம் நிக்கிற கால்ல விழுந்து மன்னிப்பு கேளுடா!

ஜீவா: என்னே மன்னிச்சிருங்க நான் என்னமோ தாராவுக்கு நன்மை செய்யிறேன்னு நினேச்சிக்கிட்டு இப்படி செய்திட்டேன்.

லதா: இன்னும் உங்களுக்கு இரக்கம் வரலியா? என்னேப் பாருங்க அத்தான்.

டாக்: இது ரொம்ப தப்பு எல்லோரும் அப்புறம் போங்க.

[தனியே]

கண்: அம்மா சிவகாமி எல்லோரையும் மன்னிச்சிரம்மா!

சாந்: வாம்மா தாரா!

சிவ: சாந்தா!

சாந்: நீங்க வேண்டாம் நீங்க இங்கேயே இருங்க நான் போயி கவனிச்சிக்கிடுறேன்.

தாரா: அக்கா! என்மேல வெறுப்பு இல்லையே?

சாந்: தாரா! எப்பவும் உன்னை வெறுத்ததே கிடையாது.

சிவ: எல்லோரும் குளிச்சிட்டு வாங்க. சாப்பிடலாம்.

0 0 0

சின்: டாக்டர் என்கிட்ட சொல்லுங்க. அண்ணுவுக்கு ஒண்ணும் ஆபத்து இல்லையே?

டாக்: அப்படி ஒன்றும் அதிகம் இல்ல. இரவு பனிரெண்டு மணி தாண்டிட்டா அப்புறம் ஒண்ணுமே இல்ல.

சாந்: அதுக்குள்ளற ஒண்ணும் இல்லையே டாக்டர்?

டாக்: என்னை அதிகமா ஒண்ணும் கேட்காதங்கம்மா. பனிரெண்டு மணிக்கு அப்புறம் வந்து பார்க்கிறேன்.

0 0 0

[சாந்தாவை அருகே அழைக்கிருன் முத்தய்யா]

முத்: சாந்தா...

சாந்: இதப் பாருங்க, நான் இதோ இருக்கேன்.

முத்: எல்லாரும் வந்திட்டாங்களா?

சாந்: ஆமாம் எல்லாரும் வந்திட்டாங்க.

முத்: லதா வந்திருக்கிருளா?

சாந்: எல்லாம் வந்திருக்கா.

முத்: அப்பாடா! இப்பத்தான் மனசு நிம்மதியாப்போச்சு எங்கே நம்ம குடும்பம் மூலைக்கொண்ணு சிதறிப் போயிடுமோன்னு நெனைச்சேன். நல்ல வேளையா அப்பாவுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேத்திட்டேன்...சாந்தா ராஜய்யாவை கொஞ்சம் கூப்பிடு.

சாந்: அந்தத் தம்பிதான் இன்னம் வரல்லே. அவரும் சீக்கிரம் வந்திடுவாரு. நீங்க கவலைப்படாதீங்க.

முத்: ம்...என் வீட்டு "குலதெய்வம்" மாதிரி நீ இருக்கும்போது நான் ஏன் கவலைப்படப் போறேன்? எப்படியாவது அவனும் வந்திடுவான்னு எனக்கு நல்லாத் தெரியும். ராஜய்யா வந்து

சேர்ந்து, மங்களத்தோட ஒத்துமையா வாழணுங்கறது என் ஆசை. நான் அந்தக் காட்சியைப் பார்க்க முடியாத போனாலும்...

சாந்: அப்படியெல்லாம் சொல்லாதீங்க! சீக்கிரம் குணமாயிடும்னு டாக்டர் சொல்லியிருக்கார்.

முத்: டாக்டரெல்லாம் அப்படித்தான் சொல்லுவாங்க சாந்தா. இப்படி வா! நான் சொல்றதெல்லாம் சொல்லிட்றேன். அப்புறம் நேரம் கிடைக்காது, ஏன் சாந்தா அழறே...? உன்னே அனுதையா விட்டுட்டுப் போயிடுவேன்னு நெனேக்கிறயா?

சாந்: அதெல்லாம் ஒண்ணுமில்லே.

முத்: பயப்படாதே! கண்மணியெத்தான். நீ அவனே கவனிச்சுக்க. அவன் உன்னே ஒரு குறையுமில்லாமக் காப்பாத்துவான் சாந்தா! ஒண்ணு சொல்ல மறந்திட்டேன். லதா ஒண்ணும் அறியாத பொண்ணு. யார் என்ன சொன்னுலும் எது சொன்னுலும் அவளே மட்டும் கைவிட்டுடாதே. இன்னென்று உனக்குச் சொல்லணும்னு நெனேச்சேன்.

சாந்: என்ன?

[காதோடு ஏதோ சொல்லுகிருன்]

முத்: சொன்னபடி செய்.

சாந்: ஆகட்டும்.

முத்: சின்னேயா முதல்லே...ராஜா மாதிரி தயங்குவான். ஆனு சீக்கிரம் கல்யாணத்தை முடிச்சு வச்சிடு.

சாந்: இப்ப ஏன் அதைப்பத்திப் பேசறீங்க? சாவகாசமாகப் பேசக்கூடாதா?

முத்: சாந்தா!

சாந்: என்ன?

முத்: ராஜாவுக்கு...

சாந்: அவர்தான் இன்னும் வரல்லேன்னு சொன்னேனே.

முத்: கண்டிப்பா வந்திடுவான்லே?

சாந்: நிச்சயமா வந்திடுவான்.

முத்: ம்...அண்ணனேப் பார்க்க ஆசையா ஓடி வருவான்: எப்படி வராம இருப்பான்?......என் ராஜப்பால்லே......நிச்சயமாய் வந்திடுவான்.

[முத்தய்யாவின் தலே சாய்கிறது. அந்தக் குடும்பத்தின் ஜீவ ஒளி அணேந்து போகிறது. சாந்தா நடைப்பிணமாகிருள்.]

[முத்தய்யாவின் விருப்பப்படி சின்னய்யாவுக்கும் லதாவுக்கும் மணமுடிக்க ஏற்பாடு செய்கின்றனர் யாவரும். ராஜய்யா தன்

சகோதரன் இறந்த செய்தி யறியாமல், அண்ணனை மகிழ்விப்பதற்காக கைநிறைய பணம் சம்பாதித்துக் கொண்டு வருகிறான்.]

ராம: யாரது? தம்பி ராஜய்யாவா? தம்பி...

ராஜ: அண்ணா...!

ராம: இவ்வளவு நாள் எங்களையெல்லாம் மறந்து எங்கேடா போயிருந்தே?

ராஜ: அதெல்லாம் பெரிய கதையண்ணா. நான் மிலிட்ரிலே சேர்ந்து பாதி உலகத்தையே சுத்திட்டு வந்திட்டேன்.

ராம: அப்படியா?

ராஜ: என்னண்ணா இது ஒரே அலங்காரமாயிருக்கு?

ராம: நம்ம தம்பி சின்னய்யாவுக்கு கல்யாணமில்லே.

ராஜ: நம்ம தம்பி சின்னையாவுக்கா?

ராம: ஆமா...

ராஜ: உம்...அப்படியா? புது மாப்பிள்ளையாகப் போறாரோ? அடி சபாஷ்...

ராம: தம்பி! நீ உள்ளே போய் இரு. இதோ வந்திட்டேன்.

[ராஜய்யா உள்ளே போகிறான்]

கண்: சித்தப்பா! இத்தனை நாள் என்னை எல்லாம் விட்டுட்டு எங்கே சித்தப்பா போயிருந்தீங்க...?

ராஜ: அதெல்லாம் சாவகாசமா சொல்றேன், ஆமாம் அப்பா எங்கே?

சாந்: யாரு...ராஜாத்தம்பியா?

ராஜ: ஆமாம்...இதோ வந்திட்டேன் அண்ணி...

[அவளைப் பார்க்கிறான். வெள்ளைப் புடவையோடு நிற்கும் அவளைக் கண்டு திடுக்கிடுகிறான். விபரம் புரிகிறது அவனுக்கு]

ராஜ: அண்ணி...அண்ணி...அண்ணீ...என் அண்ணன் எங்கே அண்ணி? என் அன்புத் திரு உருவம் எங்கே அண்ணி? தந்தைக்குத் தந்தையாய், தாய்க்குத் தாயாய் என்னைத் தாங்கி நின்ற அந்த மரகதத் தூண் எங்கே அண்ணி? புழுப்போல் இருந்த நம் குடும்பத்தை மிடுக்கோடு நடைபெறச் செய்த அந்தப் பொன்னதிர் மேனியான் புன்னகை வதனமும் எங்கே? எங்கே அண்ணி? 'வாடா தம்பி' என்று வாஞ்சையோடு அழைத்த வாய் இன்று மூடிவிட்டதா? 'ஏண்டா, உன் முகம் வாடி இருக்கிறதே' என்று கேட்டு முத்தத்தின் அணைப்பிலே என்னை வளர்த்த செல்வம் இன்று சேர

ழிந்துவிட்டதா? 'கண்ணே, மணியே' என்று என் கன்னம் வருடி, கவலையால் கலங்கிய போதெல்லாம் என் விழி நீரைத் துடைத்து, எனக்கு வாழ வழி வகுத்த என் கலங்கரை விளக்கம் இன்று சாவுப் புயலிலே சாய்ந்து விட்டதா? சொல்லுங்கள் அண்ணி, சொல்லுங்கள்! ஏன் தயங்குகிறீர்கள்? குடித்துவிட்டு சுற்றியவன் இன்று குணம் மாறி வந்திருக்கிறேன். குடித்து விட்டு, காட்டு வாழ்க்கை நடத்திய கயவன் கண்ணியத்தின் காவலனாய்த் திரும்பி வந்திருக்கிறேன். சொல்லுங்கள் அண்ணி, அவர் போகும்போது என்ன சொல்லிவிட்டு போனார்? நாயினும் கீழானவனைத் தம்பியாகப் பெற்றிருக்கிறோமே என்று நைந்த உள்ளத்தோடுதான் போய் விட்டாரா? தோளையும் முதுகையும் தொட்டிலாக்கி, ஆராரோப் பாடி என்னை ஆளாக்கிவிட்ட அண்ணன், இந்த அறிவு கெட்டவனைப் பார்க்கவே வேண்டாம் என்றுதான் போய் விட்டாரா? சொல்லுங்கள் அண்ணி... ம். எப்படி எப்படியெல்லாம் எண்ணிக் கொண்டு வந்தேன். என் அண்ணா எதிரே வருவார். பளபளவென ஜொலிக்கும் வெள்ளிக் காசுகளை கொட்டி, அவர் கலகலவென சிரிக்கும்போது, என் தவறுகளுக்கெல்லாம் மன்னிப்பும் பெறலாம் என்றெண்ணியல்லவா வந்தேன்? அன்பெனும் நெருப்பில் பண்பெனும் கோட்டை கட்டி, அப்பாவின் சொல்லை நிலைநாட்டி விட்டோம் என்று கொடிகட்டி வாழ்ந்த என் குலதெய்வமே! உன்னை உட்கார வைத்து வலம் வரவேண்டிய நேரத்திலே, உழைத்து உருக்குலைய வைத்த பாவத்தைக் கழுவுவதற்காக இந்தப் பாவிகொண்டு வந்திருக்கும் பாத காணிக்கையை பார் பார், என்று இந்த நோட்டுகளை வீசலாமென்றல்லவா இருந்தேன்? தன்னலம் கருதாத் தங்கமே, தாய்மை அன்பின் சுரங்கமே என்று எல்லாம் துதிபாடி அவருடைய பாதத்திலே தலைசாய்த்து அழவேண்டும் என்பதற்காக ஓடோடி வந்தேன். ஐய்யய்யோ! எல்லாமே பாழ் பாழ் பாழ் அண்ணி! இனிமேல் இந்த உலகத்தில் எனக்கு என்ன இருக்கிறது? இனிமேல் என்ன இருக்கிறது அண்ணி?

சாந்: அழாதே தம்பி, அழாதே! உங்களுக்குச் சேரவேண்டியது நிறைய இருக்கிறது. உங்கள் மனைவி மங்களம் கண்ணீரும் கம்பலையுமாய் உங்களுக்காக காத்திருக்கிருள். அவளை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டாமா?

ராஜ: அண்ணி!

சாந்: இனி யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? உங்கள் அண்ணா இதைத்தான் கடைசியாகக் கூறிவிட்டுப போனார். நீங்கள்

அவருக்குச் செய்யவேண்டிய இறுதி மரியாதை மங்களாவோடு சேர்ந்து வாழ்வதுதான் தம்பி.

ராஜ: சரியண்ணி! அண்ணன் கட்டளை அதுவானல், அதை மறுக்கும் சக்தி எனக்கில்லே.

[மங்களம் அவன் காலில் விழுகிருள்]

ராஜ: எழுந்திரு மங்களம். என்னே மன்னிச்சிட மாட்டியா?

மங்: ஆ, என்ன சொன்னீங்க? நானல்லவோ உங்களிடம் மன்னிப்புக் கேட்கணும்...?

ராஜ: அப்படியல்ல. குத்தம் என் மேலேயும் இருக்குது. மனித சமுதாயத்திலே பெண்கள்தான் கண்கள் என்று சொல்லு வாங்க. அவங்களே பேய்கள்னு சொல்வது என்னுடைய குத்த மில்லே? பரவாயில்லே மங்களம், நம்மைப் பாத்த பிறகாவது இந்தக் குத்தத்தை மத்தவங்க செய்யாம இருக்கட்டும்.

0 0 0

[சாந்தா மட்டும் இன்று தனியவளாகி விட்டாள். அவரவர் ஒன்று சேர்ந்து விட்டனர். யாவருக்கும் வாழ்வளிக்கப் பாடுபட்ட சாந்தாவின் வாழ்வு பாழாகிவிட்டது. அக் குடும்பத்தின் குல தெய்வமாக விளங்கிய தன் கணவனின் படத்தருகே நின்று கதறு கிருள் அவள்.]

சாந்: என் தயாளு! ஒவ்வொன்றிலும் குடியேறியிருக்கும் என் குலதெய்வமே! நீங்கள் நினைத்ததெல்லாம் நடந்துவிட்டது. கண்ட கனவெல்லாம் கைகூடிவிட்டது. இந்த ஆனந்தக் காட்சியை நீங்கள் பார்க்க வேண்டாமா? ஒரு முறை தாங்கள் திரும்பி வந்து, நம் குடும்பத் திருநாளில் கலந்துகொள்ளக் கூடாதா? ஒரே ஒரு முறை...வரமாட்டீர்களா?

[கண்கள் நீரை அருவியெனக் கொட்டுகின்றன]

கண்: அம்மா! நான் இருக்கும்போது நீ ஏம்மா அழறே?

சாந்: ஆமாண்டா கண்ணு. இனிமே நான் என்னைக்கும் அழவே மாட்டேன்.

கண்: சாந்தா! என்னம்மா இங்கே வந்து உக்காந்திட்டே? வந்து அவங்களே ஆசீர்வாதம் பண்ணும்மா.

[லதாவும் சின்னய்யாவும் மணக்கோலத்துடன் வந்து சாந்தா வின் காலில் விழுந்து வணங்குகின்றனர்]

**வணக்கம்.**

## —:கதைச் சுருக்கம்:—

கார்மேக முதலியார் தன் மூத்த மகன் முத்தையாவிடம் குடும்பப் பொறுப்பையும், மூன்று தம்பிகளையும் ஒப்புவித்து விட்டுக் கண்ணை மூடுகிறார். சாவதற்கு முன்பு அவனிடம் தம்பிகளைப் பிரியக் கூடாதென்று சத்தியம் வாங்கிக் கொள்கிறார்.

சிறுவன் முத்தையா; அவன் தம்பிகள் ராமையா, ராஜையா, சின்னையா, அத்தை சிவகாமி-இவர்களோடு வாழ்க்கைத் தோணியை நகர்த்த வேண்டியவனாகிறான். வக்கீல் கண்ணப்பரிடம் உதவிபெற்று தெருவிலே துணிமூட்டை சுமந்து விற்கும் பணியிலே வயிறுவளர்க்கக் கிளம்புகிறான். அதன் படியே 'முத்தையா அண்ட் பிரதர்ஸ்' ஜவுளிக் கடைக்கு முதலாளியாகிறான்!

ராமையா...வக்கீல், ராஜையா...டாக்டர்! என்ற வகையிலே தம்பிகளின் கல்வி வளர்கிறது. அவனுக்கு சாந்தா மனைவியாகிறாள். அவளோடு அவளுடைய சின்னம்மா பெண், தங்கை லதாவும் குடி புகுந்து வீட்டை சிரிப்பு மயமாக்குகிறாள். வக்கீல் ராமையா கண்ணப்பரின் மகள் தாராவை வாழ்க்கைத் துணைவியாகப் பெறுகிறான். ராஜையாவுக்கு மங்களம் என்ற பட்டிக்காட்டுப்பெண் மனைவியாகிறாள். 'நாட்டுப் பெண்கள்' குடியேறியதும் தேன் கதலிகுலைபோல் இருந்த அந்தக் குடும்பத்திலே தலைகீழ் மாற்றம் ஏற்படுகிறது. கவலை மறந்து அங்குமிங்கும் அலைந்து திரிந்து கொண்டிருந்த லதா, தன் வாழ்நாளில் முதல் தடவையாக தான் ஒரு விதவை யென்று தெரிந்ததும், தணலில் புழுவாகத் துடிக்கிறாள்.

தாராவின் சகோதரன் ஜீவாவோ தங்கையின் நல் வாழ்வுக்குப் பாதை அமைப்பதாகக் கருதிக்கொண்டு அவள் கணவன் ராமையாவைப் பாகம் பிரிவினைக்குத் தூண்டுகிறான். குடும்பம் பிரிகிறது; தம்பிகளிடம் சொத்தைப் பிரித்துக் கொடுத்துவிட்டு, தந்தையின் சொல்லைக் காப்பாற்ற முடியவில்லையே—என்று தலையில் கை வைத்த படி முத்தையா, தனது மனைவி சாந்தா, மகன் கண்மணி, அத்தை சிவகாமி, கடைசித் தம்பி சின்னையா, லதா—ஆகியோருடன் கிராமத்து வீட்டுக்குக் குடியேறுகிறான். ஜீவாவின் அட்டகாசத்தால் ஜவுளிக்கடை 'திவால்' ஆகிறது. சாந்தாவின் நகைகளை விற்று கடனை அடைக்கிறான் முத்தையா! நிலைமை நெருக்கடியான கட்டத்தை அடைகிறது! முத்தையாவால் அப்பாவின் சொல்லை நிலைநாட்ட முடியாமல் போய்விடுமா? விதவை லதா கருகிய மலராகத்தான் காலமெல்லாம் அவதிப்பட நேர்ந்துவிடுமா?

**விடை திரையில்!... ...**

# குலதெய்வம் பாடல்கள்

## பாட்டு 1

ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கிலனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கேது வேண்டும்

## பாட்டு 2

தாயே—யசோதா உந்தன் ஆயர் குலத்தில் உதித்த
மாயன் கோபால கிருஷ்ணன் செய்யும் ஜாலத்தைகேளடி
தையலே கேளடி உந்தன் பையனை போலவே
இந்த—வையகத்தில் ஒரு பிள்ளை அம்மம்மா—நான்
கண்டதில்லை!!
காலில் சிலம்பு கொஞ்ச கைவளை குலுங்க—கண்ணன்
முத்துமாலை அசைய தெரு வாசலில் வந்து நின்றான்
வானவரும் மகிழ மானிடரும் புகழ
நீலமேக வர்ணன் கிருஷ்ணன் நர்தனமாடினான்
பாலனென்று தாவி அணைத்தேன் யசோதை (என்) (அடி)
அணைத்த என்னை—மாலையிட்டவன் போல்
வாயில் முத்தமிட்டானடி
பாலனல்லடி உன் மகன் ஜாலமாக செய்ததெல்லாம்
நாலு பேர்கள் கேட்க சொன்னால் நாணமிக வாகுதடி (தாயே)
முந்தா நாள் அந்தி நேரத்தில்—கண்ணன்
சொந்தமுடன் கிட்டே வந்து
விந்தை பலவும் செய்து விளையாடினான்
(பந்தளவாகிலும் வெண்ணெய் தந்தால் விடுவேனென்று)
முன் துகிலை தொட்டிழுத்துப் போராடினான்
அந்த வாசுதேவன் இவன்தான்! (அடி) யசோதை
மைந்தனிவனே யென்று பார்மடிமேல் வைத்து
சுந்தர முகத்தைப் பார்க்கும் வேளையில் வாய்திறந்து
இந்த்ரஜாலம் போல் ஈரேழு லோகங்களும்
காட்டினாண்டி (தாயே)

## பாட்டு 3

கோபமா என்மேல் கோபமா
கோட்டுப் போட்ட சின்ன மச்சானே கோபமா

பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சுமா
வீட்டுக்குள்ளே காட்டாதிங்க வீரமே உங்கவீரமே
கர்ணம் போட்டாலும் செல்லாது அதிகாரமே
குட்டி கர்ணம் போட்டாலும் செல்லாது அதிகாரமே(கோட்டு)
பந்தியில் முந்தும் வீரரே வெற்றி வீரரே
வீராதி வீரரே
பந்தியில் முந்தும் வீரரே நீங்க
படையிலே பிந்தும் சூரரே
பச்சோந்தி போல்மாறும் பண்பாளரே
ஏமாந்த ஆளிடம் வாலாட்டும் தீரரே
ஏனிந்த மவுனமோ சொல் வீரே
சாயாது ஜம்பம் சாயாது (கோட்டு)
நல்ல பிள்ளை போலவே தன்னந்தனியாகவே
கள்ளத்தனமாய் நாவல் படிப்பாரே
பள்ளிக்கூடம் சென்றஉடன் தூங்குவாரே
பகுத்தறிவை பறக்கவிட்டு ஏங்குவாரே (கோட்டு)

## பாட்டு 4

வாராயோ என்னைப் பாராயோ
எந்தன் மனம்போல புதுவாழ்வு தாராயோ (வாரா)
வண்ண ஒளி வீசும் மலர் நாடியே
இன்பச் சுவையூறும் மதுவுண்ணவே
உல்லாசமாய் ஓடோடியே
உறவாடும் வண்டாகவே நீ (வாரா)
என் எண்ணங்கள் நிறைவேறவே
பெண் இதயத்தின் சுமை தீரவே
இல் வாழ்வெனும் பூங்காவிலே
எழிலோடு மணம் சேரவே (வாரா)

## பாட்டு 5

கையாலே கண்ணை கசக்கிவிட்டு
இரண்டு சொட்டு கண்ணீராலே
குற்றங்களை கரைத்து விட கற்றவர்கள்
வையாமல் திட்டாமல் மர்மமாய்
உள்ளிருந்து செய்யாக் கொடுமையெல்லாம் செய்து
பெயர் பெற்ற பெண்களை
நம்ப முடியாது நம்ப முடியாது பெண்கள்

பிடிவாதம் தீர்க்க முடியாது
கடிகாரமுள்ளின் நடை போல உள்ளம்
கணமோரிடம் செல்லும் புவிமீது
கடலாழம் கண்ட பெரியோரும் பெண்கள்
மனதாழங் காண முடியாது (முடியாது)
பிள்ளை பூச்சியை மடியில் கட்டிக் கொண்டு
புராணம் கேட்டவன் தன்னிலையும்
அல்லும் பகலும் நம்மை பொம்மை போல்
ஆட்டிவைக்கும் பெண்ணை
அடைந்தவன் கதையும் ஒன்றுகுமே
அதனுல் (முடியாது)
வஞ்சகம் மூணவுன்ஸ் வம்புத்தனம் ஏழு அவுன்ஸ்
வறட்டு கவுரவமும் அரட்டைகளும் பத்தவுன்ஸ்
எஞ்சியுள்ள தங்கம் வைரம் புஷ்பம் தளுக்கும்
குலுக்கும் மயக்கும் இனிப்பும் கசப்பும்
எண்ணுயிரம் அவுன்ஸ் கலந்ததொரு பெண்ணடா
அதை நம்பி கெட்டவர்கள் பல பேர்களடா
அந்த ஸ்டோரி ரொம்ப நீட்டமடா
அதை ஆராய்ந்து சொல்பவன் பாடுபெறும் திண்டாட்டமடா
அதனுல் (முடியாது

## பாட்டு 6

காதல் காதல் காதல்
காதல் போயின் காதல் போயின்
சாதல் சாதல் சாதல் (காதல்)
இன்பம் இன்பம் இன்பம்
இன்பத்திற் கோர் எல்லை காணில்
துன்பம் துன்பம் துன்பம் (காதல்)
நாதம் நாதம் நாதம்
நாதத்தில் ஓர் நலிவுண்டாயின்
சேதம் சேதம் சேதம் [காதல்]
கூடல் கூடல் கூடல்
கூடிப் பின்னே குமரன் போயின்
வாடல் வாடல் வாடல் ( காதல்)

## பாட்டு 7

ஆணும் பெண்ணும் வாழ்விலே
அகமகிழும் போதிலே

வான்மதியும் செங்கதிரும்
வாழ்ந்தா லென்ன மண்ணில் வீழ்ந்தா லென்ன (ஆணும்)
நான் கண்ட கனவே நிஜமாய் நடந்தது இன்னாளே (நான்)
நன்மை தரும் புதுவாழ்வில் நலம் தரும் நாளே
இல்லறம் நடத்திடும் பொன்னாளில் (வான்)
தென்றல் வரும் நேரம் தேனிலவு காலம்
ஒன்று பட்ட கண்கள் ஒளிவீசும் புவி எங்கும்
அன்பு மிகும் வாழ்வில் துன்பம் துயரம் இனியேது
இன்னமுதம் பருகும் இன்ப வேளை தனிலே
வான் மதியும் செங்கதிரும் வாழ்ந்தா லென்ன
மண்ணில் வீழ்ந்தா லென்ன (ஆணும்)

## பாட்டு 8

கோழி யெல்லாம் கூவையிலே குறட்டை விட்டார்
வாய் கொப்பளிக்கு முன்னே கொஞ்சம்
காப்பியையும் குடித்து விட்டார்
குளிக்காமல் சாப்பிட்டு ஏப்பம் விட்டார்
தன்னை குழந்தைப் போல் எண்ணி விட்டார்
எங்க சின்ன மச்சான் இப்போ
பட்டம் விட புறப்பட்டு விட்டாரய்யா
பட்டம் விட்டாரய்யா பறக்க விட்டாரய்யா
எட்டாத உயரத்திலே விட்டாரய்யா
பட்டம் விட்டாரய்யா பறக்க விட்டாரய்யா
வெட்ட வெளி வானத்திலே விட்டாரய்யா
வட்டமிடும் பறவை போலே
விட்டாரய்யா பட்டம் விட்டாரய்யா
ஆராரோ பட்டம் விட்டு பேராசை வட்ட மிட்டு
ஆடி ஓடி போனதைப் போலே விட்டாரய்யா
கட்டாத ஏரி தண்ணி (அணை)
கடலோடு போனது போல கற்ற தெல்லாம்
காற்றோட விட்டாரய்யா (விட்டா)
டா பட்டம் டீ பட்டம்
ஜமீன் பட்டம்சாமி பட்டம்
ஜாதி பட்டம்பஹதூர் பட்டம்
லேடி பட்டம் கேடி பட்டம்
வாலறுந்து நூலறுந்து

போன இடம் தெரியலே
இந்த வேலையத்த மச்சான் வெறும்
காகிதப் பட்டம் கட்டி விட்டாரய்யா
ஓட விட்டாரய்யா

## பாட்டு 9

அடியார்கள் உள்ளத்தில் குடிகொள்ளும் தேவதையே
ஆதரிக்க வேணுமே—என் ஜக்காதேவி
அடங்காத பேர்களையும் ஆலைவாய் கரும்பு போலெ
ஆட்டிவைக்கும் அம்பிகை நீயே—என் ஜக்காதேவி
ஆதரிக்க வேணுமே

காகம் பறக்காத தேசமெல்லாம்
கத்தியால் வெட்டுவேன் பாதர் வெள்ளை
அய்யா கருவறுத்தவன் பாதர் வெள்ளை
பாதர் வெள்ளை யென்ற பேரைக் கேட்டால்
பத்து மாத கர்பம் பறந்து விடும்
லங்கை தேசத்திற்கு இந்த்ராஜித்து
பாஞ்சால நாட்டிற்கு பாதர் வெள்ளை
பாஞ்சாலங் குறிச்சியின் பஞ்சவர்ணகிளி
வந்தேனே நானும் வந்தேனே
பஞ்சபாணன் துயர் மிஞ்சும் ரூபவதி
வஞ்சியாஞ்சிடும் கொஞ்சும் கிளி மொழி
பாதச் சிலம்புக் கொஞ்சி பத்தினியால் வஞ்சி
வந்தேனே நானும் வந்தேனே

பாதர்: போருக்கு போரேண்டி பாதர் வெள்ளை
போக விடைதாடி வெள்ளையம்மா
வெள்: போகாதே போகாதே என் கணவா
பொல்லாத சொர்ப்பனம் கண்டதினால்
பாதர்: கண்ட கனவதை சொல்லா விட்டால்
கத்தியால் வெட்டுவேன் பாதர் வெள்ளை
வெள்: பிஞ்சி மலருமே சோம்பக் கண்டேன்
பிஞ்சிட்ட வாழையும் சாகக் கண்டேன்
பாதர்: பிஞ்சிட்ட வாழையும் சாகக் கண்டால்
பின் வாங்கேன் சண்டையில் பாதர் வெள்ளை
வெள்: ஊமதுரை மாமா கட்ட பொம்மு
ஊரை விட்டோட கனவு கண்டேன்

பாதர்: ஊரை விட்டோட கனவு கண்டால்
ஊக்கத்துடன் சண்டை செய்வேனடி
ஏறியுட் கார்ந்தார் குதிரையின் மேல்
இழுத்துப் பிடித்தார் கடிவாளத்தை
வையாளி போடுதாங் காட்டுவழி
வாரி எறியுதாங் பேக்குதிரை
ஒட்டாரங்காடு ஒடங்காடு
ஓடி வருகுதாம் பேக்குதிரை
சில்லாடற்காடு செடிக்காடு
சிட்டாப் பறக்குதாம் பேக்குதிரை
காலிலகப்பட்ட கற்களெல்லாம்
பிறண்டு ஓடுதாம் முன்னாலே
ஓட்டப் பிடாரத்து பதைவழி
ஓடி வருகுதாம் பஞ்சவர்ணம்
கொக்குப் பறந்தது போல் குதிரை
கோட்டையை வந்துமே கண்டு கொண்டு
குதிரையை விட்டுமே தானிறங்கி
கோடையிடி போன்ற பாதர் வெள்ளை

## பாட்டு 10

இன்ப வருக்கமெல்லாம் நிறைவாகி
இருக்கின்ற பெணகள் நிலை
இங்கிவ்விதமாக இருக்கு தண்ணே
இதில் யாருக்கும் வெட்கமில்லை
வெட்கமில்லை வெட்கமில்லை—இதில்
யாருக்கும் வெட்கமில்லை
கோரிக்கை யற்றுக் கிடக்கு தண்ணே இங்கு
வேரிற் பழுத்த பலா
மிகக்கொடிய தென்றெண்ணிடப் பட்ட தண்ணே குளிர்
வடிகின்ற வட்ட நிலா
சீரற்றிருக் குதையோ குளிர் தென்றல
சிறந்திடும பூஞ்சோலை—சீ
சீ என்றிகழ்ந்திடப் பட்ட தண்ணே நறுஞ்
சீதளப் பூமாலை
நாடப் படாதென்று நீக்கி வைத்தார்கள்
நலஞ் செய் நறுங் கனியைக்—கெட்ட

நஞ்சென்று சொல்லி வைத்தார் எழில் வீணை
நரம்பு தரும் தொனியை
சூடப் படாதென்று சொல்லி வைத்தார் தலை
சூடத்தகும் க்ரீடத்தை—நாம்
தொடவும் தகாதென்று சொன்னார்கள் நறுந்தேன்
துவைந்திடும் பொற்குடத்தை

## பாட்டு 11

சாத்திரம் பார்க்காதீர்
கட்டழகன் திருத்தோளினைச் சேர்ந்திட
காதல் சுரக்கின்ற நெஞ்சத்திலே கெட்ட
கைமையைத் தூர்க்காதீர்
கணை விடுபட்டதும் லட்சியம் தேடும் நம்
காதலும் அவ்வாறே அந்தக்
காதற் கணை தொடுக்காத உயிர்க்குலம்
எங்குண்டு சொல் வேறே

சுபம்

கவிஞர் சுப்பு—ஆறுமுகம் எழுதியவை
நல்ல பெண்மணி 2 4
வீரபாண்டியன்
கட்டபொம்மன் 1 0
விபரங்களுக்கு:—கலைமன்றம்—சென்னை—1.

# இனிய நாவல்கள்

## காதல் மாளிகை




காதல் மாளிகையைக் கட்டத் திட்டமிட்டான் டாக்டர். கட்டி முடிப்பதற்குள் பிணமாகிவிட்டான் அவன். டாக்டரின் மரணத்தின் மர்மம் என்ன? கொலையா? தற்கொலையா? காதல் மாளிகை முடிவு சொல்லும். ஆசைத்தம்பி அவர்களின் அற்புத நாவல்.

விலை ரூ. 1—8—0

## நல்வாழ்க்கை




அன்றாட வாழ்வில் காணப்படும் சாதாரண மனிதர்களிடையே தான் உயர்ந்த கதை உருப்பெறுகிறது. அத்தகைய கதைதான் மனித வாழ்வின் உண்மையான படப்பிடிப்பாகும் என்ற முறையில் விருதை இராமசாமி அவர்கள் இந்நாவலை வழங்கியுள்ளார்.

விலை ரூ. 1—0—0

## பனிரோஜா




வாழ்க்கைப் பாதையைப் பல கோணல்களில் நாம் பார்த்திருக்கிறோம். அந்தக் கோணல்களில் ஒரு புதிய திருப்பு முனையே இந்நாவல். மலர்ந்து வரும் இலக்கிய பூங்காவில் புதுமை, மணத்தை வீசச் செய்கிறார் ஆசிரியர் கோவி. மணிசேகரன்.

விலை ரூ. 1—0—0

ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை - 1

# குறு நாவல்கள்

**வெறும் மனிதன்** 1-25

மலையாள மூலம்: 'உருபு'
தமிழாக்கம்: சங்கர நாராயணன்

**காந்த மலர்** 1-25

பி. எம். கண்ணன்

**கட்டைப் பிரமசாரி** 1-00

வங்காள மூலம்: சுபோத் வசு
தமிழாக்கம்: 'ஸேனாபதி'

**கிரகணம்** 1-00

மாயாவி

**பனித்திரை** 2-00

மராட்டி மூலம்: சிந்தர்க்கர்
தமிழாக்கம்: 'நாகு'

**எங்கள் தாத்தாவுக்கு ஒரு யானை இருந்தது!** 1-50

மலையாள மூலம்: வைக்கம் முகம்மது பஷீர்
தமிழாக்கம்: சங்கர நாராயணன்
டெல்லி சாகித்ய அகடமி ஆதரவு பெற்ற பதிப்பு

---

**கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை - 4.**